# காவேரி

## மஹாமக மலர்

அணா 12



15 MAR 1948
MADRAS

நடனகலாமணி

# A. N. பெரியநாயகி

கும்பகோணம்

பந்தணைநல்லூர் நாட்டிய கலாநிதி மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை மாணவி



**பரதநாட்டியம் & அபிநயக்கச்சேரி**

**18—3—45 வேணுகான சங்கீத சபா, தாராபுரம்.**

Estd. 1904 Tel: KETIOR

# விஜயபுரம்

# K. T. R.

## பன்னீர் & சந்தனாதி

- அரைக்கீரைவிதை தைலங்கள் -

## ஒயிட் ரோஸ் ஹேர் ஆயில்

## - கிருஷ்ணா அகர்பத்தி -

## ராஜா பற்பொடி

முதலியவை குணத்தில் சிறந்தவை

## K. T. R.

**PERFUMER, VIJAYAPURAM**

மதராஸ் ஸோல் ஏஜன்ஸி:

## GIRISON & CO.

PARK TOWN :: MADRAS

1786

4 - APR 1945
MADRAS

218546.



# வடமேற்கு இந்தியாவில்—
# தேநீர் அருந்தும் நேரம்

சிந்துவின் மேற்கே, வாழ்க்கை அங்குள்ள பாறைகளைப்போல அவ்வளவு கடினம். பகலில் செய்யும் வேலையிலோ அல்லது இரவில் நடத்தும் காவலிலோ அபாயம் உண்டு என்பது அங்குள்ள பதான்களுக்கும் பலுசிகளுக்கும் நன்கு தெரியும்.

முக்கியமாக, பிரயாணஞ் செய்யும்பொழுதெல்லாம் நெருப்பு மூட்டிக்கொண்டு வெட்டவெளியில் காவல் இருக்கவேண்டிய அவசியம் இவர்களுக்கு ஏற்படுவது உண்டு. கண் விழித்துக் காவலைச் சரியாகச் செய்யும் பொருட்டு உஷ்ணமான தேநீரைச் சர்க்கரை பாலுடன் மொத்தமாகக் கலந்து பித்தளை லோட்டாக்களில் சப்பிச் சப்பிச் சாப்பிடுவது அங்குள்ளவர்களுக்கு வழக்கம். தேநீர், இரவில் அடிக்கும் ஈரக்காற்றிலிருந்து பாதுகாத்துத் தனியாக இருந்து காவல் காக்கும் ஒருவனுக்கு உத்சாகத்தையும் ஊட்டுகிறது.

இந்த நாட்டிலும் எங்கே பார்த்தாலும், மற்றப் பிரதேசங்களிலிருப்பதுபோலவே, புத்தப்புதிய ப்ரூக் பாண்ட் தேயிலை புகழுடன் நடமாடுகிறது.

## ப்ரூக் பாண்ட்

"இரு இலையும் ஓர் மொட்டும்"

# இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸெண்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்

ஸிடி ஆபீஸ்கள்:

**சைனா பஜார், மாம்பலம், மைலாப்பூர்,**
**— திருவல்லிக்கேணி, பெரியமேட் —**

பிராஞ்சுகள்:

| | | | |
|---|---|---|---|
| அமதலவால்ஸா | கும்பகோணம் | சாலூர் | திருச்சிராப்பள்ளி |
| அனகாபள்ளி | மதுரை | சீயாழி | திலாறு (சிகாகோல்) |
| சிதம்பரம் | மருடேரு | தாடபள்ளிக்கூடம் | வேலூர் |
| சித்தூர் (கொச்சி) | பாலக்காடு | தஞ்சாவூர் | விஜயபுரம் (திருவாரூர்) |
| காஞ்சீவரம் | பார்வதிபுரம் | திருநெல்வேலி ஜங்ஷன் | விருதுநகர் |
| ஈரோடு | புதுக்கோட்டை | திருநெல்வேலி டவுன் | விஜயநகரம் |
| காரைக்குடி | | | |

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் நடத்தப்படும்.

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.



## ஜவுளி தினுசுகள்

:: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்
உடைக்குத் தக்க போட்டி விலையில்

## புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

# M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.

(மலைவாசல் உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சிராப்பள்ளி.

N.B.-உயர்ந்த பனாரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.


சிறந்த ஆபரணங்களுக்கும்
வைரங்களுக்கும்
P.A. ராஜுசெட்டியார் & பிரதர்
கடைத்தெரு, கோயமுத்தூர்
போன் 218A - தபால்பெட்டி 139 - தந்தி "ராஜா"


2000 வருஷங்களுக்குமுன்
முன்னோர்கள் சந்தனத்தை குறைவற்ற தன்மைக்கு ஒப்பிட்டார்கள். இன்று நாம், ஒரு நல்ல பொருளை அந்த வர்க்கத்தின் "ரோல்ஸ் ராய்ஸ்" என்று சொல்லுகிறோம். அதேபோல முன்னோர்கள் ஒவ்வொரு உயர்ந்த பொருளையும் சந்தனத்திற்கு சமமாகச் சொல்லுவார்கள். ஸ்நானத்திற்கு அனுகுணமான வாசனைத் திரவியங்களின் சேர்க்கைக்கு சந்தனத்தைலம் இன்றியமையாததாக இருப்பதின் காரணம் அதன் சுகந்த மணமும் குளிர்ச்சியளிக்கும் குணமுமேயாம். அசோகனாண்ட காலத்தின் உண்மை என்றும் உண்மையே.
மைசூர்
சந்தன சோப்
சந்தனம் குறிப்பது குற்றமற்ற குணமே
★★ மைஸூர் கவர்மெண்டு தயாரிப்பு ★★



டிரேட் மார்க்கை
கவனியுங்கள்!



ஒவ்வொரு
வீட்டிலும்
உட்வார்ட்ஸ்
க்ரைப் வாட்டர்
இருக்கவேண்டும்



**WOODWARD'S**
**GRIPE WATER**
*keeps baby well*

1-WW.112-111    W. WOODWARD LTD. LONDON ENGLAND

Agent:— **T. T. KRISHNAMACHARI,**
12A Lingha Chetty Street, :: G. T. MADRAS




# பொருளடக்கம்


தாரண மலர் 4 — பங்குனி இதழ் 8



படுதோல்வி ... 6

கதம்பம் ... 8

நோயற்ற வாழ்வு ... 10
திச. சே. சௌ. ராஜன்

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் 13
ராமய்யா

ஆகாயக்கப்பல்களும் விமானங்களும் 17
ஆர். கே. விசுவநாதன்

அறியாமையின் ஆனந்தம் ... 20
மாரார்

எனது முதல் சிறுகதை ... 23
க. சந்தானம்

வெற்றிக்கோபுரம் ... 25
ஜயலக்ஷ்மி நரஸிம்மன்

மனை வழக்கு ... 29
பூவாளூர் சுந்தரராமன்

கலைத்தெய்வம் ... 33
கௌரி

இறைவா ஏன்? ... 41
சாரி

மாயாலோகம் ... 46
யோகி சுத்தானந்த பாரதியார்

மல்லிகைச் செண்டு ... 50
கே. சுந்தரம்மாள்

இதென்ன உலகம்! ... 57
கிருத்திவாஸ்


குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

# காவேரி

| | | |
|---|---|---|
| தாரண<br>மலர் 4 | "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச்<br>செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார் | பங்குனி<br>இதழ் 8 |


# படுதோல்வி

வைஸிராய் வேவல் நிர்வாக சபையினருக்குப் படுதோல்வி! அவர்கள் சம்பளப் பட்டியல் மத்திய சட்டசபையில் நிராகரிக்கப்பட்டுவிட்டது. அவர்கள் நடத்தி வரும் நிர்வாகம் மக்களுக்குப் பலனளிக்கவில்லை, பண விரையம்தான் மிச்சம் என்று குற்றம் சாட்டப்பட்டது. பொறுப்புள்ள, மானமுள்ள, "தேசிய" அரசாங்கமாக இருந்தால் உடனே ராஜீனமா செய்திருக்கும். ஆனால் என்ன நடந்தது?

வைஸிராய் அவர்கள் நடத்துவது போலித் "தேசிய" நிர்வாக சபைதானே! அவர்களுக்கு அவ்வளவு ரோசம் வைத்துக்கொண்டால் கட்டாது. மக்கள் ஆதரவினால் பதவிக்கு வந்தவர்களல்ல அவர்கள். அதை எதிர்பார்த்தும் ஆட்சி நடத்தவில்லை அவர்கள். அது கிட்டாத வேப்பங்காய் என்பது அவர்களது சித்தாந்தம். எனவே என்ன வசைமொழிகள் பொழியப்படினும் அவற்றைப் பொருட்படுத்தாது அட்டைகள் போல் தங்கள் பதவிகளில் ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஒன்றுமட்டும் அவர்களுக்குத் தெரியும். தேசியத்தையும், மக்களின் நலனையும் வளர்ப்பதற்காகவே தாங்கள் பதவி வகிக்கிறோம் என்று அடிக்கடி பறைசாற்றுவார்கள். வைஸிராயின் கட்டளையை என்றும் சிரமேல் தாங்கி நடப்பார்கள். அவர்களைப் பொறுத்தமட்டில் மத்திய சட்டசபை என்று ஒன்று இருக்கவேண்டியதில்லை. அடிக்கடி அது கூடி அவர்கள் மானத்தை வாங்கவும் வேண்டியதில்லை.

சமீபத்தில் இந்தியா கவர்மெண்டு வருடாந்தர வரவு செலவுதிட்டத்தை நிறைவேற்ற அச்சபை கூட்டப்பட்டது. எதிர்பாராத விதமாகக் காங்கிரஸ் கட்சியினரும் முஸ்லிம் லீக் கட்சியினரும் ஒன்றுகூடிவிட்டார்கள். இந்தியா கவர்மெண்டின் கதி அதோகதிதான்! வைஸிராய் நிர்வாக சபையின் சம்பளம் ஒரு ரூபாய்க்குக் குறைக்கப்பட்டது.

கவர்மெண்டார்மீது ஏராளமான குற்றச்சாட்டுக்கள்! அரசியல் நெருக்கடியை நீக்க, அரசியல் காவல் கைதிகளை விடுவிக்க, யாதொரு முயற்சியும் செய்யாமல் இருந்துவிட்டதுபற்றி முதல் குற்றச்சாட்டு.

இதற்குப் பதிலளிக்கையில் ஹோம் மெம்பர் ஸர் பிரான்ஸிஸ் மோடி ஒரு விசித்திர சாக்குக் கூறினார். இன்னும் 1500 காவல் கைதிகள்தான் பாக்கி என்றும், அவர்களில் பெரும்பாலோரை மாகாண கவர்மெண்டார்தான் கைதுசெய்து வைத்திருக்கிறார்கள் என்றும், அவர்களை விடுதலை செய்தால் நாட்டில் குழப்பம் அதிகரித்துவிடுமென்றும், எனவே கொஞ்சம் கொஞ்சமாக அவர்களை விடுதலை செய்துவருகிறோம் என்றும் கூறினார்.

காங்கிரஸ் காரியக்கமிட்டி மெம்பர்களை விடுவிப்பதில் அபாயம் நேர்ந்துவிடும் என்று கருதுவதுதான் நமக்கு விளங்கவில்லை. இதுவரை விடுபட்டுள்ள அங்கத்தினர்கள் தேகநிலை குன்றியதால் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். அதேமாதிரி எஞ்சியுள்ள காரியக்கமிட்டி அங்கத்தினர்களின் உடல் நிலை குன்றினால்தான் அவர்களை விடுவிப்பார்களோ என்னவோ தெரியவில்லை. ஜெயிலில் ஜாஸ்தி நாள் இருக்க இருக்க அவர்களின் உடல் நலம் குன்றுவது இயல்பு. அப்படி எஞ்சியுள்ள தலைவர்களின் நிலை சீர்கெடவில்லையென்று காத்துக்கொண்டிருக்கிறார்களா நமது மத்திய கவர்மெண்டார்? காரணம் விளங்கவில்லை. இவர்கள் அனைவரும் வெளிவர இன்னும் எத்தனை வருடங்கள் ஆகும் என்பதும் தெளிவாகவில்லை.

காங்கிரஸ் காரியக்கமிட்டி மெம்பர்களுக்குப் பலாத்காரக் கொள்கையில் நம்பிக்கையில்லை என்பது நிதர்சனம். அப்படியிருந்தும் ஏன் அவர்களை விடுதலை செய்யவில்லை?

நேரான பதில் கிடையாது. அரசியல் நெருக்கடியைத் தீர்க்க வைஸிராய் சபையிலுள்ள இந்திய அங்கத்தினர்கள் பெரு முயற்சி எடுத்திருப்பதாகக் கூறினார் ஸர் ராமசாமி முதலியார். அது என்ன பலனளித்தது என்பதுதான் பிரச்னை.

இந்தியத் துருப்புக்கள் எவ்வகையில் நடத்தப்படுகின்றன? வெளிநாடுகளில் நடத்தப்பட்டுவரும் துஷ்பிரசாரம், அபாரமான யுத்தச் செலவு, இவைகளைக் குறித்து அனேக குற்றச்சாட்டுக்கள். இறுதியில் கவர்மெண்டாருக்குப் படுதோல்வி.

இம்மாதிரியே பற்பல கவர்மெண்ட் டிபார்ட்மெண்டுகளின் செலவு திட்டங்களில் "டோகன்" வெட்டுக்கள் கொண்டுவரப்பட்டுப் பொது மக்களுக்கு நிர்வாகத்திலுள்ள அதிருப்தியைத் தெரிவிப்பதற்காக நிறைவேற்றப்பட்டன.

ஆனால் எவ்வளவு சொன்னாலும் என்ன பயன்? மத்திய கவர்மெண்டார் போக்கு மாறப்போவதில்லை. சான் பிரான்ஸிஸ்கோ சமாதான மஹாநாட்டிற்கு மத்திய சட்ட சபையில் தோல்வியடைந்த ஸர் ராமசாமி முதலியாரும், ஸர். பிரோஸ்கான் நூனும் இந்தியாவின் சார்பில் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

சிலர் இதைக் குறித்து வருந்துகிறார்கள். பகுத்தறிவு உள்ளவர் இதில் ஆச்சரியப்பட இடமில்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மாறவில்லை; வெற்றி வெறி தலைக்கேறியிருக்கும் போது எப்படி மாறும்?

## முகப்புப் படம்

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்களைப் படித்து அனுபவிக்காத **காவேரி** வாசகர் எவரும் இருக்கமுடியாது. சங்கீத கோஷ்டிகளிலோ அம்மாஞ்சியை அறியாதார் யாரும் இல்லை என்று தைரியமாகக் கூறலாம்.

சங்கீதக் கச்சேரி விமர்சனங்கள் அநேகர் எழுதுகிறார்கள். அம்மாஞ்சிக்கு மட்டும் ஏன் இவ்வளவு புகழ்?

பாரபக்ஷமின்றி தயாதாக்ஷிண்யமின்றி நியாயாதிபதிபோல் கச்சேரிகளை மதிப்பிடும் சக்திவாய்ந்தவர் அம்மாஞ்சி. பிறருடைய புகழ்ச்சிக்கோ இகழ்வுக்கோ செவிசாய்க்காது, தம் மனதிலுதித்த அபிப்பிராயத்தை மழுப்பாமல் கூறும் திட சித்தம் கொண்டவர் அம்மாஞ்சி. கர்னாடக சங்கீதக் கலையின் எல்லையைக் கண்டவர் அம்மாஞ்சி. நல்ல ரஸிகர். காலப்போக்கினால் இழுக்கப்பட்டுப் பரிதவிக்கும் சங்கீத கோஷ்டியில் சேர்ந்தவரல்ல. சங்கீதம் மட்டுமின்றி மற்றக் கலைகளிலும் வல்லவர். நல்ல அறிவும் தீர்க்க திருஷ்டியும் உடையவர். விசால மனப்பான்மையும் உண்டு. இவை எல்லாவற்றைக் காட்டிலும் நல்ல கற்பனா சக்தியுடையவர். ஹாஸ்யமாகவும் ஆணித்தரமாகவும் தம் அபிப்பிராயங்களை எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்ற பெரிய எழுத்தாளர். அவர் நடை அவருடையதே. பிறரால் அதை அனுஷ்டிக்கமுடியாது. அதைக் கண்டுகளிக்காத தமிழனிருக்கமுடியாது.

அம்மாஞ்சி யார்? இக்கேள்வி **காவேரி** தோன்றியதுமுதல் கேட்டுவரப்படுகிறது. அதற்கு விடை இன்றுவரை நாம் அளித்ததில்லை. ஆனால் இனியும் வாசகர்களின் பொறுமையைச் சோதிப்பது தவறு என்பதை உணர்ந்து அம்மாஞ்சி யாரென வெளியிட நிச்சயித்துள்ளோம்.

அம்மாஞ்சி ஒரு கற்பனைப் புருஷர். சிருஷ்டி கர்த்தா "ராமையா". ராமையாவின் படம்தான் நமது அட்டைப் படத்தை அலங்கரிக்கிறது. அவர் முழுப்பெயர் **கடாம்பி ராமஸுப்பன்**. அவர் சென்னை இம்பீரியல் பாங்கியில் பிரபல ஆபீஸர். அம்மாஞ்சியின் உயரிய துணிசயமெல்லாம் யாரைச் சார்ந்ததென்று எடுத்துரைப்பது அனாவசியம்.

ராமையாவின் உத்தரவின்றி அவரை நமது வாசகர்களுக்கு அறிமுகப்படுத்திவிட்டோம். அவர் நமக்கு விதித்திருந்த வாய்ப்பூட்டை மீறியதற்கு மன்னிப்பாரென நம்புகிறோம்.

# கதம்பம்

## மிலிடரி மயம்!

"முதலியாரய்யா உள்ளே இருக்காங்களா?"

"உஸ், சத்தம் போடாதே. துரை காதிலே விளுந்திச்சின்னு வேட்டை நாய் கணக்கா கத்துவாரு"

"ஏனப்பா, முதலியார்தானே காட்டுஇலாகா ஆபீஸர்?"

"அவங்க அப்பவே போயிட்டாரே! இப்போ மிலிடரிலேருந்து துரை வந்திருக்காரு"

* * *

"இஞ்சினியர் சாமிநாதய்யர்வாளைப் பார்க்கணும்"

"அவர் போய் எந்தக் காலமாச்சு"

"இப்போ யார் ஸார் ஆபீஸர்"

"மேஜர் இடியட்!"

"மிலிடரி ஆசாமியா?"

"ஆமாம்"

* * *

"காப்டன் ஹண்டர்—போலீஸ்" என்ற பலகை காணப்படுகிறது.

"முன்பு ஆசீர்வாதம் பிள்ளை இருந்தாரே"

"இப்போ மிலிடரிலேருந்து துரை வந்திருக்காரு"

| | | |
|---|---|---|
| ரைபிள்மன் ராஸ்கல் | — | ரயில்வே இலாகா |
| மேஜர் ட்ரங்கர்ட் | — | கலால் இலாகா |
| கன்னர் பிளேக் | — | தபால் இலாகா |
| டாமி பாக்ஸ் | — | ரிஜிஸ்தரேஷன் இலாகா |
| கர்னல் உட் | — | நீதி இலாகா |

என்ன? எல்லாம் மிலிடரி மயமாகத் தோன்றுகிறதா?

இப்பொழுது ராணுவ வெள்ளை உத்தியோகஸ்தர்கள் பலர் சிவில் உத்தியோகங்கள் பலவற்றில் புகுத்தப்படுகின்றனர். காரணம்?

யுத்தகாலத்தில் ராணுவ அதிகாரிகளே சிவில் அரசாங்கத்தையும் வகித்து நடத்தல் யுத்தத்தை அதிக திறம்பட நடத்த உதவும்—இது ஒருவருடைய ஊகம்.

ராணுவ ஆசாமிகள் எல்லாம் வல்ல கடவுளா? இந்திய உத்தியோகஸ்தர்கள்பேரில் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு நம்பிக்கையில்லையா?—இப்படியாகப் பலருடைய அபிப்பிராயங்கள்.

விஷயம் மர்மமாகவிருக்கையில் ஒரு தேசிய பத்திரிகை தான் அறிந்து தெரிந்துகொண்ட காரணத்தை வெளியிட்டுள்ளது.

"இந்தியாவில் யுத்தம் ஏற்படலாமென்றிருந்த காலத்தில் பல வெள்ளை ஸிவில் உத்தியோகஸ்தர்கள் இந்தியாவை விட்டு வெளியேறிவிட்டனர். ஆகவே வெள்ளையர்களுக்குப் பதிலாகக் கறுப்பு மனிதர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஆனால் இதனால் விபரீதம் ஏற்பட்டது. கறுப்பு உத்தியோகஸ்தர்கள் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டும் வெள்ளை உத்தியோகஸ்தர்களின் தொகை அளவுக்கு மீறிக் குறைந்துகொண்டும் வந்தது. ஆகவே வேலையின்றிச் சும்மா தூங்கிக்கொண்டிருக்கும் ராணுவத்தைச்சார்ந்த வெள்ளையர்களைச்சிவில் உத்தியோகங்களில் இழுத்துக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்த நிலைமை ஏற்பட்டது. உயர்தர உத்தியோகஸ்தர்களைக் கணக்கிட்டதில் 2175 இந்தியர்களும் 1771 வெள்ளையர்களுமே இருந்தனர். 'இந்தியன் சிவில் சர்விஸ்காரர் தொகை 560 தான். இந்தியர்களோ 629 பேர்கள். இஞ்ஜினியரிங் இலாகாவில்ஐரோப்பியர்கள் 108, இந்தியர்கள் 199. ரயில்வே உயர்தர உத்தியோகங்களில் வெள்ளையர்கள் 334, இந்தியர் 378. ஆகவே வெள்ளை ஸிவில் உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டு வருவதை நிவர்த்திக்க ராணுவ இலாகாவிலிருந்து வெள்ளையர்கள் வெளியேற்றப்படுகின்றனர்."

மேலே சொன்ன காரணங்களைத் தவிர மற்றொரு பொருத்தமான காரணமொன்றும் நமக்குப் புலப்படுகின்றது.

ராணுவ உத்தியோகஸ்தர்கள் திறமைசாலிகளாகவும் மிகுந்த அறிவாளிகளாகவுமிருத்தல் அவசியம். சோம்பேறிகள், தூங்குமூஞ்சி அசடுகள் இவர்கள் ராணுவ இலாகாவை விட்டு உடனே அப்புறப்படுத்தப்பட்டாலே ராணுவ நிர்வாகம் செம்மையாக நடைபெறும். குப்பை கூளங்களெல்லாம் ராணுவத்துக்கு உதவா. ஆகவே உதவாக்கரை ஆசாமிகளை இராணுவ இலாகாவைவிட்டு அப்புறப்படுத்த முதல்தர சூழ்ச்சி! ஆனால் இந்தச் சூழ்ச்சியினால் ஆதாயமெல்லாம் வெள்ளையர்களுக்கு! விரயம் இந்தியர்களாகிய நமக்கு!

## கோட்டை இடிகிறது!

முஸ்லீம் லீக்கிற்கு மகத்தான சோதனைக்காலமிது. எல்லைப்புற மாகாணத்தில் ஜின்னா சாயப்பு மகா பிரயாசைப்பட்டு லீக் மந்திரி

சபையை அமைக்க ஏற்பாடு செய்தார். காங்கிரஸைக் குலைத்துவிட்டதாக மார்புதட்டிப் பேசினார். ஆனால் ஆண்டவனுக்குக் கருணையில்லை. லீக் மந்திரி சபையின்மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேறிவிட்டது. ஜின்னாவுக்கும் சுரம் கண்டுவிட்டதாம்!

சிந்து மாகாணத்திலும் லீக் மந்திரிசபை கலகலத்துவிட்டது.

வங்காளத்தில் ஐரோப்பிய மெம்பர்களின் ஆதரவில் லீக் மந்திரி சபை நடக்கின்றது. எந்தச்சமயத்தில் காலை வாரிவிடுவார்களோ என்ற பயம் எப்பொழுதும். மத்திய மகாணத்தில் லீக்கின் தூண்களாயிருந்த நவாப் இஸ்மெயில்கான் காலிகுஸாமன் முதலியவர்கள் விலகிக்கொண்டுவிட்டார்கள். ஜின்னாவின் பயமுறுத்தல் பயன்படவில்லை.

ஜின்னாவின் மனக்கோட்டை இடிந்து விழுவதைக்கண்டு நாமும் பரிதாபப்படத்தான் வேண்டும்.

சுயநலங்கொள்ளாமல் தேசிய நலங்கொண்டு காங்கிரஸுடன் சமரசம் செய்துகொண்டிருந்தால் ஜின்னாவுக்கு இத்தகைய கதி வாய்த்திருக்குமா?

## கேலிக் கூத்து

சான் பிரான்ஸிஸ் கோவில் நடைபெறவிருக்கும் உலக சமாதானப் பாதுகாப்பு மகாநாடு விஷயமாக ஸ்ரீமான் பொதுஜனம் அவர்களை நமது நிருபர் பேட்டிகண்டு அறிந்துகொண்ட விஷயத்தை வெளியிட்டுள்ளோம்!

நமது நிருபர் சென்றபொழுது பொதுஜனமவர்கள் அடியில்கண்ட பாட்டைப் பாடிக்கொண்டிருந்தாராம்.

பாட்டு

நமக்கினி யுத்தமேது— சான் பிரான்ஸிஸ் மகா நாடு கூடும்போது!

ந. நி; நல்ல சமயம். நமஸ்காரம்!

பொது: என்ன சமாசாரம்?

ந. நி: உலகில் சமாதானம் நிலவ என்ன செய்யலாம்?

பொது: மகா நாடு கூட்டலாம்!

ந. நி: அதனால் உலக சமாதானத்தைப் பாதுகாக்கமுடியுமா?

பொது: முடியுமென்று பெரிய கைகள் சொல்லுகின்றன.

ந, நி: அதெப்படி முடியும்?

பொது: அவர்களைத்தான் கேட்கவேண்டும்.

ந· நி: அவர்கள் என்றால் யார்?

பொது: சர்ச்சில்! மகா நாடகம் ஒன்றை நடத்தப்போகின்றார்!

ந. நி: மகாநாடு என்று சொல்லுங்கள்! போகட்டும், மகாநாட்டுக்கு யார் யார் விஜயம் செய்யப் போகின்றார்கள்?

பொது: யுத்த வேலைத் தொந்தரவுகளினால் ருஷ்யாபங்கெடுத்துக் கொள்வது சந்தேகமாம். வேறு முக்ய அலுவல்களிருப்பதால் பிரான்ஸ் வரமுடியாதாம். கானடாவுக்கு மகாநாட்டில் கலந்துகொள்ளச் சம்மதமில்லையாம். போலந்துக்கு அழைப்பு அனுப்பப்படவில்லையாம். ஆஸ்திரேலியாவைப்பற்றி நிச்சயம் ஒன்றும் சொல்வதற்கில்லையாம்!

ந. நி: ஹூம்! வருகிறவர்களைப்பற்றிச் சற்றுச் சொல்லுமே?

பொது: தங்கள் ஊரிலேயேமகாநாடு நடப்பதால் மகாநாட்டுக்கு விஜயம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் அமெரிக்காவுக்கு ஏற்பட்டுவிட்டது. மகாநாட்டைக் கூட்டுவதற்கு மூலகர்த்தா என்ற முறையில் பிரிட்டன் வந்து தொலைந்து ஆகவேண்டிது.

ந. நி: ஆள் கூட்டமாவது வேண்டுமே?

பொது: ஏன்? இந்தியாவிலிருந்து மூன்று ஆட்கள் போகின்றார்கள்.

ந. நி: எதற்கு? உல்லாசயாத்திரைபுரியவா?

பொது: உலக சமாதானத்தை நிலைநிறுத்த மகாநாட்டுக்குச் செல்லுகின்றனர்! சர். ஏ. ராமசாமி முதலியார், சர் பிரோஸ்கான் நூன் வி. டி. கிருஷ்ணமாசாரி இவர்களெல்லாம் சாமானியப்பட்டவர்களா!

ந. நி: இந்திய சர்க்கார் கவுன்சில் மெம்பர் ராமசாமி முதலியாரா? கவுன்சில் மெம்பர்களின் சம்பளத்தைக்கூட ஒரு ரூபாயாகக் குறைக்கவேண்டுமென்று தீர்மானம் இந்தியா சட்டசபையில் நிறைவேற்றப்பட்டதாமே? இன்னுமா அவர் பதவியில் இருக்கின்றார்?

பொது: ஓய்! நாவடக்கிப் பேசும். நீர் இருப்பது சீமையல்ல!

ந. நி: அப்படியென்றால்?

பொது: உமக்கு மூளை கட்டை! சீமையில் பார்லிமெண்டில் அந்தமாதிரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் சர்ச்சில் அரசாங்கம் தூள் தூளாகப்பறந்துபோயிருக்கும். ஜனநாயகஅரசாங்கம் அங்கு நடைபெற்று வருகிறது. மக்களின் நம்பிக்கையிழந்த மறுநிமிஷம் அரசாங்கம் மாறிவிடும். இங்கு? பொறுப்பற்ற சர்வாதிகார அரசாங்கம் அட்டகாச அமுல் நடத்துகின்றது.

ந. நி; அப்பொழுது மகாநாடு.........

பொது: மகாநாடாவது! கேலிக் கூத்துசெய்கிறார்கள்! மகா நாடாம். சுயநலம் கொண்டவர்களும், நாடாசை கொண்டவர்களும், சாம்ராஜ்யப் பித்தர்களும் உலக சமாதானத்தை நிலைநிறுத்துவதாம்! சுத்த ஹம்பக்! மகா நாடாம்!

ந. நி: சரி! ஏதோ கோபவேளை போலிருக்கிறது. மறு சமயம் வருகிறேன்!

# நோயற்ற வாழ்வு

தி. சே. சௌ. ராஜன்

ஒருநாள் காலையில் வைதிகப் பற்றுள்ள ஒருவரை வாய்க்காலில் வாய் கொப்புளித்துக்கொண்டிருக்கும் தருணத்தில் கண்டேன். கொப்புளித்து விடும் தண்ணீரை நேரில் வாய்க்காலில் விழாமல் தமது இடது கைவிரல்களின் மூலமாக விழும்படி செய்துகொண்டிருந்தார். "ஏன் இப்படிக் கொப்புளிக்கிறீர்கள்" என நான் கேட்டதற்குக் கபடமற்ற பதில் சொன்னார். "ஓடும் தண்ணீரில் எச்சில் மயமான வாய் கொப்புளிக்கும் தண்ணீரை விடக்கூடாதெனச் சாஸ்திரமென்று பெரியார்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதற்காக இடது கைவிரல்களின் மூலம் வடியவிட்டால் அந்தப் பாபம் சம்பவியாது அல்லவா" என்றார். இந்த வேடிக்கைக்கு அழுவதா சிரிப்பதா என்று எனக்குப் புரியவில்லை. சாஸ்திரத்தையும் பெரியோர் வாக்கையும் அவர் காப்பாற்றிவிட்டார் எனினும் ஓடும் தண்ணீரில்தான் அவர் எச்சில் அழுக்குத் தண்ணீர் கரைக்கப்பட்டுவிட்டது என்பதில் சந்தேகமில்லை. கரைக்குச் சென்று துப்பி வரவேண்டிய ஆசார விதியை மனக்கவலையின்றி அதிக சிரமமுமின்றி நிறைவேற்றிவிட்டதாக அவருடைய எண்ணம். இந்த மதியீனம் ஆசார அறிவினால் உண்டானதா அல்லது மூடத்தனமா? இவரைக் கற்றறிந்த மூடராகக் கூட நினைக்க இடமில்லை. சாஸ்திரத்தைப் பழுதுபட உபயோகப்படுத்தத் துணித்த அறிவிலியென்றுதான் சொல்லவேண்டும். சிறிது தூரத்திற்கப்பால் குடத்தை நன்கு விளக்கிக் குடிதண்ணீர் மொண்டுகொண்டிருக்கும் பெண்மணியின் செயல் இவருக்குக் கண்ணிருந்தும் கவலை கொடுக்கவில்லை. இது மாதிரி சம்பவம் தினந்தோறும் நாடெங்கும் ஆயிரக் கணக்காகத் தென்படும். இந்தக் குற்ற நடவடிக்கைக்கு யார் பொறுப்பாளி? சமூகம் சீர்குலைவுற்றுச் சுய நலத்தைக்கூட கைப்பற்றக்கூடாத நிலையில் நாம் வாழ்ந்து வருகிறோம். ஆடுமாடுகளைக் கழுவுவது, கந்தை குப்பைகளைக் கொட்டுவது, பாத்திரங்கள் துலக்குவது, அழுக்குத் துணிகள் பாய் படுக்கைகள் எல்லாவற்றையும் துவைப்பது, இவையெல்லாம் ஓடும் தண்ணீரில் தினசரி நடைபெறுகின்றன. ஆனால் அந்தத் தண்ணீரைக் குடிப்பதற்கு உபயோகப்படுத்தக் கூடாது. நல்லவெயிலில் ஒருமணி நேரம் தண்ணீர் புரண்டு ஓடினால் சுத்தமடைந்துவிடும். மேலும் தண்ணீரிலிருக்கும் மீன்கள் அழுக்கைத் தின்றுவிடும். இவ்வித முறைகளால் இயற்கையிலே ஓடும் தண்ணீர் சுத்தமாகிவிடுகிறது. இப்பாதுகாப்பு இல்லாவிட்டால் நமது மனித வர்க்கமே இதற்குள் தொலைந்துபோயிருக்கும். சிதபேதி, வயிற்றுக் கடுப்பு, முதலிய நோய்களும் குடிதண்ணீர் மூலமாகவும், பாலில் கலக்கப்படும் அசுத்தத் தண்ணீரினாலும் ஏற்படுகின்றன. கடையில் விற்கப்படும் காய் கறி, வெற்றிலை முதலியவைகள் வாய்க்கால் கழிவு தண்ணீரில்தான் கழுவப்பட்டு மார்க்கெட் வியாபாரத்திற்கு எடுத்து வருகிறார்கள். அவைகளை நாம் வாங்கி உபயோகப்படுத்தும் பொழுது நல்ல தண்ணீரில் நன்றாகக் கழுவிப் பிறகு உண்ணல் வேண்டும். பாலைக் காய்ச்சாமல் சாப்பிடக்கூடாது. காய்ச்சுவதினால் உயிர்ச்சத்துக்கள் சில போய்விட்டாலும் கூட பாதகமில்லை. காய்ச்சாமல் குடிப்பதிலுள்ள அபாயத்தைக் கவனிக்கும்பொழுது சில உயிர்ச்சத்துக்கள் குறைந்து போவதைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. வயிற்றிலுண்டாகும் பலவகைப்பட்ட பூச்சிகள் நன்றாக வேகாமலிருக்கும் உணவினாலும், சுத்தப்படுத்தப்படாத தண்ணீரைக் குடிப்பதினாலும் உண்டாகின்றன. நரம்புச் சிலத்தி, நாக்காம் பூச்சி, கொக்கிப் பூச்சி, நாடாப் பூச்சி, கீறிப் பூச்சி இவைகள் குடலில் புகுந்து, நமது உணவை உண்டு, ஆயிரக்கணக்காக அதிகரித்து, பலவித நோய்களை உண்டாக்குகின்றன. இவையெல்லாம் தடுக்கக்கூடியவையே. சுத்தம் என்று சொல்லும் காலையில் தேகசுத்தம் மாத்திரம் என்பதாகக் கருதக்கூடாது. உணவு, குடி தண்ணீர், பால், தயிர், மோர் இவைகளின் சுத்தமும் அதில் சேர்ந்தது. குடி தண்ணீர் வைப்பதற்குச் செம்புப் பாத்திரங்கள் மேலானவை. சொப்புப்பாத்திரங்கள் வாங்கவசதியில்லாதவர்களுக்கு மண் பானைகள் சிறந்தவை. தண்ணீரைக் காய்ச்சிக் குடிக்கச் செலவு அதிகம். சிரமம் அதிகம். இரண்டு கஷ்டமுமில்லாமல் சுத்தமான தண்ணீர் கிடைப்பதற்கு ஒரு முறையுண்டு. மணற்பரப்புக்களின் நடுவே ஓடும் ஆறுகளில் சிறு ஊற்றுகள் தோண்டி, கலங்கி வரும் தண்ணீரை நன்றாகத் தெளியும்வரை இறைத்துவிட்டுத் தெளிந்த தண்

ணீரைக் குடங்களில் நிரப்பிவைத்துக் கொள்ளலாம். மூன்று மூங்கில்களைக் குறுக்குச் சட்டங்கள் வைத்து இணைத்து நிறுத்தி, ஒவ்வொரு தட்டிலும் ஒரு பானையை வைத்து, மூன்று அடுக்குப் பானைகளை ஒன்றின்மேல் ஒன்ருக நிறுத்தவேண்டும். மேல் இரண்டு பானைகளுக்கு அடிப்புறத்தில் சிறு துவாரம் செய்து அதில் சுத்தமாக வெயிலில் காய்ந்த வைக்கோல் துரும்பைச் சொருகிவிடவேண்டும். மேல் பானையில் சுத்தமான அடுப்புக்கரித் துண்டுகளையும் தெள்ளிய ஆற்று மணலையும் சரிசமானமாகக் கலந்து வைக்கவேண்டும். இரண்டாவது பானையில் பாதிக்கு மேலாகத் தெள்ளிய மணலைமட்டிலும் நிரப்பிய பிறகு மேல்பானையில் ஒரு குடம் தண்ணீரை ஊற்றவேண்டும். அடிப்பக்கம் துவாரத்திலிருந்து தண்ணீர் சொட்டுச்சொட்டாக இரண்டாவது பானையில் விழும். இரண்டாவது பானை நிரம்பியதும் அதன் அடித் துவாரத்திலிருந்து மூன்ருவது பானைக்குச் சொட்டுச் சொட்டாக விழும். மூன்ருவது பானையிலிருக்கும் தண்ணீர் சுத்தமாகிக் குடிப்பதற்கு உபயோகமாகவிருக்கும். ஆனுல் இந்த முறை சோம்பேறித்தனமான வர்களுக்கு உபயோகமில்லை. கவலை எடுத்துக்கொண்டு வாரம்தோறும் பானையையும், மணல், கரி எல்லாவற்றையும் வெளியே எடுத்துச் சுத்தப்படுத்தி வெயிலில் காயவைக்க வேண்டும். இல்லாவிட்டால் மணலிலும், கரியிலும் அழுக்கடைந்து, வடிக்கட்டியும் தண்ணீர் சுத்தமில்லாமல் போய்விடும். பானைகளின் சுத்தத்தைக் கவனியாவிட்டால் அசுத்தமான தண்ணீரைக் குடிப்பதைக் காட்டிலும் கெடுதல் அதிகமாகும். ஆகையால் நல்ல குடிதண்ணீர் கிடைப்பதற்குப் பணச்செலவைக் காட்டிலும் முயற்சியே அதிகம் தேவை. தண்ணீரைக் கொதிக்க வைத்துக் குடிப்பதுதான் அபாயமற்றமுறை. ஆனுல் தண்ணீருக்குள்ள ருசி போய்விடும். கொதிக்கவைக்க விறகு செலவு வேறு. க்ளோரிநேஷன் (Chlorination) என்ற முறையினுல் சொற்பச்செலவில் ஏராளமான தண்ணீரைச் சுத்தம் செய்யமுடியும். பிளீச்சிங் பௌடரி(bleaching powder)லிருந்து க்ளோரின் கிடைக்கும். இவ்வளவு தண்ணீருக்கு இவ்வளவு மருந்து சேர்க்கவேண்டுமென்கிற அளவுப்படி குடி தண்ணீரில் கலந்துவிட்டால் சிறிது நேரத்திற்குள் தண்ணீர் சுத்தமாகிவிடும். இந்தக் கணக்கைச் சுகாதார அதிகாரிகளிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

கோதாவரி நதி தீரத்திலுள்ள பத்ராசலம் என்னும் ராமக்ஷேத்திரத்தில் ஸ்ரீராமநவமி




யின்பொழுது ஏராளமான ஜனங்கள் கூடுவது வழக்கம். 1938ஆம் வருஷம் அந்தத் திருவிழாவின்பொழுது அங்கே காலரா நோய் கண்டு, பல ஆயிரம் ஜனங்களுக்குமேல் இறந்துவிட்டார்கள். சுகாதாரத் தலைமை ஆபீஸரைக்கண்டு இந்தச் சம்பவத்தை யொட்டி விசாரித்தேன். சுகாதார இலாகா இந்தச் சாவிற்குக் காரணம் என்பது எனது முடிவு. சுகாதார அதிகாரி, தமக்குப் போதுமான பணம், ஆள், உதவி கிடையாதென்றும் நிஜாம் சர்க்கார் இலாகாவிலிருந்து வரும் ஜனங்களைச் சரியான முறையில் தடுக்கமுடியவில்லை யென்றும் சொன்னார். 1939 ஆம் வருஷம் இந்த நோய் வராமல் தடுக்கவேண்டும் என உத்தரவு போட்டு அதற்குத் தேவையான சகல செலவும் முற்கூட்டியே நடத்தவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. சுகாதார அதிகாரி சுமார் ஏழாயிரம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் தயாரித்து அனுப்பினார். அதற்குத் தேவையான தொகை உடனே சாங்கிஷன் செய்யப்பட்டது. அங்கே நடத்திய முறையின் விபரம் இங்கே சொல்லவேண்டியது அவசியம்.

(1) திருவிழாவிற்குச் சிலநாட்கள் முன்னதாகவே கோதாவரி நதிக்கரையில் காவல் போட்டு ஊருக்கு மேற்கிலும், கிழக்கிலும் ஒரு மைல் தூரத்திற்கு மேலாக அசுத்தம் செய்யாமல் தடைபடுத்தப்பட்டது.

(2) யாரும் நதித்தண்ணீரை எடுத்துக் குடிக்காமல் தடைசெய்யப்பட்டது.

(3) குடத்தில் எடுத்துப்போகும் தண்ணீரில் நச்சுக்கொல்லி மருந்தில் கொஞ்சம் கொஞ்சம் கட்டாயமாகக் கலந்துவிடுவது.

(4) காலராநோய் தடைஊசி மருந்து யாத்திரிகர்கள் எல்லோருக்கும் கட்டாயமாகக் குத்தப்பட்டது.

(5) ஆங்காங்கு கக்கூஸ்கள் கட்டி, ஜனங்கள் மலஜலம், கழிப்பதை அங்குச் செய்யும்படி பந்தோபஸ்து செய்யப்பட்டது.

இந்த வருஷத்தில் இந்த நோய் ஒருவருக்குக்கூட வராமல் தடை செய்யப்பட்டு விட்டது. ரூபாய் ஏழாயிரமும் நன்கு செலவழிக்கப்பட்டது என்பதற்கு வேறு ருஜு தேவையில்லை. அகால மரணத்தைச் சுகவழிகளால் தடுக்க முடியும் என்ற உண்மைக்கு இது ஒரு சான்று. விதியின் பயனால் மனிதன் இறக்கிறான். அதனால் இறந்துபோகிறவர்களைப் பார்த்து வேதாந்தம் பேசிக்கொண்டு வாளா இருப்பது சோம்பேறித் தனத்தைத் தவிர வேறில்லை. அது மதியீனமும்கூட. ஒவ்வொரு வருஷத்திலும் இந்த நோய் திருவிழாக்காலத்தில் வந்துதான் தீரவேண்டுமென்கிற அவசியமில்லையே. அதுபோல் இந்த வருஷத்திலும் நேர்ந்திருக்கக்கூடாதென எப்படிச் சொல்ல முடியும். அப்படியிருக்க எல்லாம் சுகாதார அதிகாரியின் முயற்சியால் தடைபட்டது என்று எப்படிச் சொல்லக்கூடும் என ஆட்சேபிக்கக்கூடும். நஷ்டம் ஏற்படாதிருப்பதினால் இது கட்சிவாதம் என்பது தெளிவு. அதற்காகச் செய்யவேண்டிய பாதுகாப்பு முறைகளை செய்யாது வாளாவிருப்பதற்குக் காரணமாகாது. மனிதன் முயற்சி செய்யவேண்டும். முயற்சியும் அறிவுடன் அறிந்துசெய்தால் பலனளிக்கும். இயற்கை முறைகளுக்கு விரோதமாக வாழ்வு நடத்தினால் அதனின்று உண்டாகும் நஷ்டத்தைத் தவிர்க்க முடியாது. நமது ஒழுங்கீனத்தின் விளைவை நாம் அனுபவித்துத்தான் தீரவேண்டும். அதற்கு ஒழுங்கீனத்தின் அறிவும் அதைநீக்க முறைகளும் மக்களுக்குத் தெரியவேண்டும். சமுதாயக் கட்டுப்பாடு, சாத்திர உணர்ச்சி இவைகள் சரியாக இருந்தால் நலன் ஏற்படக்கூடும். இவை இரண்டும் சீர்குலைந்திருக்கும்பொழுது, இந்த அறிவைப் புகட்ட வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். பொறுப்புள்ள ஆட்சி இதைத் தட்டிக்கழிக்க முடியாது. அறிவைப் புகட்டக் கட்டாயமான சட்ட திட்டங்கள் தேவை. ஒரு தனி மனிதனுடைய அறிவீனத்தினால் ஒரு சமூகமே உயிரிழக்க நேர்ந்தால், இந்தக் குற்றத்திற்குத்தகுந்த தண்டனை சிந்திக்கவேமுடியாது. எனினும் குடிதண்ணீரைச் சோம்பேறித் தனத்தினாலோ, அறிவின்மையாலோ, தகுந்த சட்டங்களின் பராமரிப்பு இல்லாததினாலோ அசுத்தம் செய்யும் கொடுமை வழக்கமாகிவிட்டால் இதைத் தடுப்பது ஆட்சி செலுத்துவோரின் முதல் கடமையாகும். இதை அன்னிய அரசாங்கம் எவ்விதம் நடத்தக்கூடும்? சுதந்திரம்பெறவேண்டியதின் அவசியம் மனிதன் உயிரைக் காப்பாற்றும் முறையில் தான் ஏற்படுகிறது. நமது மூடத்தனத்திற்கும், நமது அற்ப ஆயுளுக்கும் தற்போதைய அரசாங்கமே பொறுப்பாளி. இது எவ்வளவு சீக்கிரமாக மாறுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நாட்டிற்கு க்ஷேமமுண்டாகும்.

4 - APR 1945

# அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்



ராமய்யா

முப்பது வருஷங்களுக்கு முன் வியாபகத்திலிருந்த கர்ணாடக சங்கீதத்துக்குத் தற்கால சங்கீதத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், பின் சொல்லியது மிகவும் க்ஷீணித்து இருக்கிறது என்றல்லவோ பெரும்பாலோர் சொல்லுகின்றனர்? நானும் அம்மாஞ்சியும் இந்த அபிப்பிராயத்தை ஆமோதித்துப் பல முறை எழுதியிருக்கிறோமல்லவா? இதற்கு உதாரணமாகச் சிலவிஷயங்களை இந்த வியாசத்தில் எழுதுகிறேன், கவனியுங்கள் :—

வயலின் என்றும் பிடில் என்றும் சொல்லப்படும் வாத்தியம் ஐரோப்பிய தேசத்து வாத்தியம் என்பது யாவரும் அறிந்த விஷயம். இந்த வாத்தியத்தைத் தென்னிந்தியாவில் முதன்முதல் கையில் எடுத்து வாசித்தவர் வடிவேலு நட்டுவனார் என்பவர். பொன்னையா நட்டுவனார், சின்னையா நட்டுவனார், வடிவேலு நட்டுவனார் என்ற மூன்று பேர்களும் அண்ணன் தம்பிமார்கள். இம்மூவரும் முத்துசாமி தீக்ஷிதர் அவர்களுடைய சிஷ்யர்கள். இவர்களில் ஒருவருக்கு வயிற்றுவலி பீடிக்க, தம் குருவாகிய தீக்ஷிதர்வாளைத் தமக்குச் சனீசுவரப் ப்ரீதியாகத் தோத்திரம் செய்வதற்கு வேதபாராயணம் படிப்பிக்கும்படி வேண்டிக்கொள்ளவும் அவர் வேதபாராயணம் படிப்பிக்கச் சம்மதப்படாமல், அப்பிராமணரானவருக்கு ஐந்தாம் வேதமாகிய காந்தர்வ வேதசாஸ்திரமே அடுக்கும் என்றும் அதில் ஒன்றாகிய சங்கீதத்தில் நவக்கிரஹ கீர்த்தனைகளை இயற்றி, அவைகளைப் படிப்பித்து, பாடவைத்து, வயிற்றுவலியைத் தீர்த்துவைத்ததாகவும் வதந்தி. வடிவேலு நட்டுவனார் வெகு சமர்த்தர்; சங்கீதத்திலும், நட்டுவத்திலும், வாத்திய சாதகத்திலும் நிபுணர்; ஸ்தல யாத்திரைகள் பல விடங்களில் செய்தவர்; சங்கீத சம்பந்தமாக அநேக பெரியவர்களைக் கலந்து விவஹாரம் அறிந்தவர். திருவாங்கூரில் மஹாராஜா ஸ்வாதித் திருநாளைச் சிநேகித்தவர்; ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளிடத்தில் அதிக பக்தியும் அன்பும் வாய்ந்தவர். அவர் ஐரோப்பிய வாத்தியமாகிய 'வயலின்' என்ற வாத்தியத்தைக் கையாண்டு, கர்ணாடக சங்கீதத்துக்குத் தகுந்த வாத்தியம் என்று நிர்ணயித்து, அதை வெகு அழகாக வாசித்து வந்ததாக நாம் அறிகிறோம். இது நடந்து சுமார் 100 அல்லது 120 வருஷங்கள் கழிந்தன.

வடிவேலுவுக்குப் பிறகு பிடில் வாத்தியத்தைப் பிரபலமாகக் கையாண்டவர் மனம்புச்சாவடி வெங்கடசுப்பய்யர் என்பவர். இவர் தியாகய்யருடைய சிஷ்யர்களில் ஒருவர். மஹா வைத்தியநாதய்யர், பட்டணம் சுப்பிரமணிய அய்யர், சரப சாஸ்திரியார், பிடில் வெங்கோபராவ் இவர்களெல்லாம் வெங்கடசுப்பய்யரிடம் சிக்ஷை சொல்லிக்கொண்டார்களாம். ஆனால் சிஷ்யர்களுக்கெல்லாம் காத்ர சங்கீதம் மாத்திரமே ஊட்டினாரே ஒழிய, பிடில் வாத்தியத்தைப் பயிற்றுவிக்கவில்லையென்பதாகச் சொல்லுகிறார்கள். நூதனமாகத் தாம் கற்றுக்கொண்ட வித்தையை வேறொருவருக்கும் பயிற்றுவிக்க அவர் மனங்கொள்ளவில்லை போலும்! அதுவுமல்லாது பிடில் வாத்தியத்தை ராக்ஷச சாதகத்துடன் தாம் கற்றுக்கொண்டதால், அவ்வளவு மனோ வலிமையும் தேக வலிமையும் உள்ள சிஷ்யர்கள் வாய்க்காததால் பிறருக்கு அந்த வித்தையை அரைகுறையாக ஏன் ஊட்டவேண்டும் என்ற வெறுப்புடன் காலத்தைக் கழித்தார்போலும்! எக்காரணத்தாலோ அவருடைய வித்தை அவருடன் அழிந்தது. ஆனால் அவர் சாதகம் செய்யும்போது கள்ளத்தனமாகத் திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர் வெகுமுறை அவருடைய தெருத் திண்ணையில் உட்கார்ந்து கேட்டுப் பயன்பெற்றனராம். வெங்கடசுப்பய்யருடைய விரல் சாதகம் அபாரமானதாம். அதை நன்றாகக் கற்கவேண்டும் என்ற அவாவுடன் திருக்கோடிக் காவல் கிருஷ்ணய்யர் ஒருநாள் தெருத் திண்ணையிலுள்ள ஜன்னலின் மூலமாக எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தபோது வெங்கட

சுப்பய்யர் பிடில் வில்லினுல் கிருஷ்ணய்யருடைய கண்ணைக் குத்திவிட்டாராம். தெய்வச் செயலாக, கிருஷ்ணய்யருடைய கண்ணுக்குள் வில் குத்தாமல், இமையின் ஓரத்தில் குத்துப்பட்டு, அந்த அடையாளம் அய்யருடைய ஆயுள் முழுதும் இருந்ததாக அவருடைய மருமகனுன ஸ்ரீ செம்மங்குடி நாராயணசாமிய்யர் அம்மாஞ்சியிடம் சொல்லியிருக்கிருர். "அப்படியெல்லாம் கஷ்டப்பட்டு வித்வத் சம்பாதித்தார். ஸார், எங்க மாமா" என்று நாராயணசாமி அய்யர் பல முறை என்னிடம் கண்களில் நீர் ததும்பச் சொல்லியிருப்பது என் ஞாபகத்துக்கு வருகிறது. இப்படி நடந்தும், அந்தப் பிடில் வாத்தியத்தில் எத்தகைய சாமர்த்தியம் வாய்ந்தவர் மஹாவித்துவானுன கிருஷ்ணய்யர் என்பது யாவரும் அறிந்த விஷயம். அவருடைய யோக்கியதைக்குச் சற்றேறக் குறைய, சமயோக்கியதை வாய்ந்தவர் வித்வான் கோவிந்தசாமி பிள்ளையவர்கள். கிருஷ்ணய்யர் பிடில் சிம்மம் என்ருல், பிள்ளைவாள் பிடில் புலி. அய்யர்வாள் விரல் சாதகத்தில் பெரிய யோக்கியதை பெற்ருர்; பிள்ளைவாள் வில் சாதகத்தில் சமமான யோக்கியதை பெற்ருர். அவர்களிருவரிடத்திலும் அந்த வாத்தியம் சரஸ்வதி கடாக்ஷத்துடன் தாண்டவமாடிற்று. அவர்கள் இருவருக்கும் பிற்காலத்தில் பிடில் வாத்தியத்தை அவர்களுடைய யோக்கியதையுடன் கையாண்டவர்கள் ஒருவரும் கிடையாது; இனியிருப்பார்கள் என்றும் எண்ணத்தகாது என்கிருன் அம்மாஞ்சி.

இதற்குக் காரணம் என்ன என்று அம்மாஞ்சியைக்கேட்டால், அவன் சொல்லுகிருன்: முதலாவது யோக்கியதைக் குறைவு, இரண்டாவது சாதகக்குறைவு, மூன்ருவது அனுபவக் குறைவு, நான்காவது பகுத்தறிவுக் குறைவு, ஐந்தாவது சகவாஸ தோஷம், ஆருவது பாமர ஜனங்களின் ஞானமற்ற கொள்கைகள். கிருஷ்ணய்யர், கோவிந்தசாமிபிள்ளை இருவர்களுடைய காலத்திலும் சகாவாக விளங்கி வந்த வித்வான்கள் எல்லோரும் ஸிம்ம ஜாதி புலி ஜாதியைச் சேர்ந்தவர்கள்; எலிகளும், தவளைகளும் அல்ல. மஹா வைத்திய நாதய்யர் என்ன, பட்டணம் சுப்பிரமணிய அய்யர் என்ன, பூச்சி அய்யங்கார் என்ன, சரப சாஸ்திரிகள் என்ன, கோனேரிராஜபுரம் வைத்தாவென்ன, புஷ்பவனம் என்ன, நாகஸ்வரத்தில் நடேசனும், செம்பொன்னுர் கோவில் ராமஸ்வாமியுமென்ன, மிருதங்கத்தில் நாராயணசாமியப்பாவும் மாமுண்டியா பிள்ளையும் தக்ஷிணுமூர்த்தியும் அழகநம்பியும் என்ன, கடத்தில் சுந்தரய்யரென்ன, வீணையில் தனம்மாள் என்ன, என்ன வித்துவத் சங்கம்—இத்தகைய வித்வத் சங்கம் இனி எங்கிருந்து வரும்? இவர்களுடைய யோக்கியதை யென்ன, இப்பொழுது உள்ளவர்களுடைய யோக்கியதை யென்ன? இவர்களுடைய ஊக்கம் என்ன, சாதகம் என்ன, சம்பிரதாயம் என்ன, பகுத்தறிவு என்ன, வினயம் என்ன, இப்பொழுது உள்ளவர்களுடைய ஊக்கக் குறைவு என்ன, பாமர ஜனஸ்துதி யென்ன, அனுபவஹீனம் என்ன? அந்த நக்ஷத்திர மண்டலம் எங்கே? தற்காலத்துக் கோஷ்டி எங்கே?

முப்பது வருஷங்களுக்குமுன் விளங்கி வந்த சங்கீதத்தில் ரக்தியும் பாவமும் குடிகொண்டிருந்தன. இப்பொழுதிருக்கும் சங்கீதத்தில் குயுக்தியும், வேகமும் ஜாஸ்தி இருக்கின்றன. முப்பது வருஷங்களுக்குமுன் ஒரு கச்சேரியில் காத்ர வித்வான் பிரதான கர்த்தாவாகவும் பக்கவாத்தியக்காரர்கள் அவருக்குச்சிஷ்ருஷைசெய்து கச்சேரியை ஒப்பேற்றும்படி செய்யவும் பத்ததியாயிருந்தது. தற்காலத்தில் காத்ர வித்வானும் பக்கவாத்தியக்காரர்களும் மல்ல யுத்தம் முஷ்டியுத்தம் செய்து பாமரஜனங்களை ஏவிவிட்டுக் கரகோஷம் பெறுவதிலேயே முயற்சி செய்கின்றனர்.

முப்பது வருஷங்களுக்குமுன் வித்வான்களுக்குச் சாரீர ஸம்பத்து என்பது முற்றிலும் குடிகொண்டிருந்தது. ஸாதாரணமாக எல்லா வித்வான்களுக்கும் மூன்று கட்டைக்குமேல் ச்ருதியும், பலருக்கு நாலு அல்லது நாலரைக் கட்டைவரையிலும் ஆதார ச்ருதி இருந்ததாகவும் அறிகிருேம். ஆதலால் கச்சேரிகளில் ரக்தியும் ரீங்காரமும் நன்ருக வாய்ந்திருந்தன. பிடில் வாத்தியக்காரருக்கு உயர்ந்த ச்ருதியினுல் வாத்தியத்தை ரக்தியுடன் பிணைப்பிக்க அவகாசம் கிடைத்தது. தற்காலத்தில் இந்த ஒரு அவகாசம் குன்றியிருப்பதாலேயே பிடில் வாத்தியம் பக்கவாத்தியமாகச்சோபிக்காமல், வாத்தியத்தின் வலிமை குறைந்து, ரக்திகுன்றி, கச்சேரிகள்களைகட்டாமல்போய்விடுகின்றன என்கிருன் அம்மாஞ்சி. திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர் காலத்திலேயே ஒன்று இரண்டு சம்பவங்களில் இம்மாதிரி ஏற்பட்டதாகவும் அவர் அதைக்குறித்து வருத்தப்பட்டதாகக் கேள்வி. இரண்டரைக் கட்டை ச்ருதிக்குக் குறைவாக ஏற்பட்டால், இரும்புத் தந்தி ஒன்றில் தவிர மற்றத் தந்திகளில் வில்லை அழுத்தி வாசிப்பதும் நல்ல நாதத்துடன் ஜீவ ஸ்வரங்களை எடுத்துக் காட்டுவதும்

வெகு கடினம் என்றும் அந்தக் காரணத்தைக் கொண்டே பல முறைகளில் தனிக் கச்சேரி செய்வதற்கே பிரியப்பட்டதாகவும் பக்க வாத்தியமாக வாசிப்பதற்குப் பிரியப்படாமலிருந்ததாகவும் வதந்தி. கிருஷ்ணய்யர் வாத்தியத்தையும் கோவிந்தசாமி பிள்ளை வாத்தியத்தையும் தனிக் கச்சேரிகளில் கேட்டவர்கள் ஆனந்தித்த மாதிரி பக்க வாத்தியத்தில் கேட்டவர்கள் ஆனந்தப்படவில்லையாம். அக்காலத்திலோ வித்வான்கள் எல்லோருக்கும் சம்பிரதாயமும் சிக்ஷையும், விவஹார நிர்ணயமும் சற்றேறக் குறைய ஒரேமாதிரி ஆதார ச்ருதியும் ஏறக் குறைய எச்சு ச்ருதியாகவே இருந்ததாக வைத்துக்கொள்ளலாம். அப்படியிருந்தும் அந்த இரண்டு பிடில் வித்வான்களுக்கும் சங்கடங்கள் ஏற்பட்டனவென்றால் தற்காலத்தில் அவஸ்தைகள் அதிகமாயிருக்கின்றன என்பதற்கு ஆச்சரியமா? தற்காலத்தில் வித்வான்கள் எத்தனைபேரோ அத்தனை வித சம்பிரதாயங்கள் ஏற்பட்டுவிட்டன. ஒவ்வொருவருக்கும் ஆதார ச்ருதி அரைக்கட்டை, முக்கால் கட்டை; அதிகமாகப் பார்த்தால் ஒன்றரைக்கட்டை. அதற்குமேல் ச்ருதி இருந்தால் "அப்பா, என்ன ச்ருதி, மண்டை கிழித்துவிடும்போல் இருக்கிறதே" என்கிறார்கள். கீழ் ஸ்தாயியில் பாடும்போது எண்ணெய் வாணியனுடைய செக்கு மோட்டுச் சப்தமும் மேல் ஸ்தாயியில் பாடும்போது வான்கோழியினுடைய இரட்டைத் தொண்டையும் கேட்கின்றன. பெவர்லி நிக்கல்ஸ் துச்சமாக எழுதினானென்று மாத்திரம் வருத்தப்பட்டுப் பிரயோஜனமென்ன? கர்னாடக சங்கீதத்துக்கு இனிய த்வனி முக்கியமல்ல என்ற கொள்கையை நாம் விபரீத எல்லைக்கு ஏற்றிவிட்டோம் என்கிறான் அம்மாஞ்சி. கார்வையும் ரக்தியுமில்லாத சப்தம் சங்கீத சப்தமாகாது. ச்ருதிக்கு ஒட்டியிருந்தால்மட்டும் போதாது. கமக சம்பந்தமாக வெளிப்படுத்தவேண்டிய சப்தங்கள் சாத்தியமான வரையில் சிறிதேனும் எச்சு ச்ருதியில் வெளிப்படுத்தினால்தான் கானமென்பது ஏற்படும். அப்பொழுதுதான் பக்கவாத்தியங்களும் சோபிக்கும். பிடில் வாத்தியத்திலுள்ள தந்திகளும் மிருதங்கத்திலுள்ள தோலும் இழுத்துப் பிடித்தால்தான் ரக்திகொடுக்கும்.

ஐரோப்பிய சங்கீதத்தில் voice culture அதாவது சாரீர ஸாதகம் பிரதானமென்றும், கர்னாடக சங்கீதத்தில் அனாவசியமென்றும் ஏற்பட்டிருக்கிற கொள்கை முற்றிலும் பிசகு என்கிறான் அம்மாஞ்சி.

கர்னாடக சங்கீதத்தில் சாரீர சாதகமென்பது ஐரோப்பிய சங்கீதத்தில் உள்ளதைவிட பத்துமடங்கு அதிகமென்பதை அறியவேண்டும். நமது சங்கீதத்தில் ச்ருதி சாதகம் தவிர, அகார ஸாதகமென்றும் கமக ஸாதகமென்றும் காலப்பிரமாண சாதகமென்றும் பலவித சாதகங்கள் உண்டு. இவை அனைத்தும் தவிர, கச்சேரி சம்பிரதாய ஸாதகமென்பது அலாதியாக ஒன்றிருக்கிறது. இத்தனைவித ஸாதகங்களும் முற்றிலும் குன்றிவிட்டதினால் தற்காலத்திலுள்ள கச்சேரிகள் அதிகமாகச் சோபிக்காமல், மொத்தத்தில் சங்கீதமே க்ஷீண தசையிலிருப்பதாகவும் பெரும்பாலாருடைய அபிப்பிராயம்.

சாஸ்திர சம்பந்தமாக ஸங்கீத ஒழுக்கம் க்ஷீணித்திருப்பதுடன் ச்ருதி சம்பந்தமாகவும் சாரீர சம்பந்தமாகவும் மிகவும் க்ஷீணித்திருப்பதாகவல்லவோ கூறியிருக்கிறோம்? இதற்கு என்ன வழி? முதலாவது Voice culture அதாவது சாரீர ஸாதகம் என்பதை வித்வான்கள் முக்கியமாகக் கவனிக்கவேண்டும், அதன்பொருட்டு தம்முடைய பழக்க வழக்கங்களை நல்ல ஒழுக்கங்களில் ஈடுபடுத்தவேண்டும். இதை விஸ்தரித்து எழுத முடியாததால் பூடகமாகத்தான் எழுதவேண்டியிருக்கிறது. இரண்டாவது எச்சு ச்ருதியில் பாடமுடியாத வித்வான்கள் பிடில் பக்கவாத்தியத்தை வைத்துக்கொள்ளக்கூடாது. அதாவது தக்கு ச்ருதியில் பிடில் வித்வான்கள் தத்தம் வாத்தியங்களைச் சோபிக்கும்படி வாசிப்பது துர்லபமானதால், அவர்கள் தனிக் கச்சேரிகளைச்செய்யவேண்டுமல்லாது ஒத்து வாசிக்கச் சம்மதிக்கலாகாது.

இதனிடையில் காத்ர வித்வான்களுக்குப் பக்கவாத்தியம் வேண்டியபக்ஷத்தில், பிடில் வாத்தியத்துக்குமுன் ஏற்பட்ட ஸாரங்கி வாத்தியத்தைத் திரும்பவும் தென்னிந்தியாவில் பழக்கத்தில் கொண்டுவரவேண்டும். இந்த வாத்தியம் வயலின் வாத்தியத்துக்கு முன் தென்னிந்தியாவில் பிடில் என்று பழக்கத்திலிருந்ததாக நாம் அறிகிறோம். இந்த வாத்தியத்துக்கு மூன்று நரம்புத் தந்தி இருந்ததாகவும் இது காத்ர வித்வானுக்கு ஆதாரமாகப் பக்கவாத்தியமாக விளங்கி வந்ததாகவும் நாம் அறிகிறோம். தேசிய ஸங்கீதத்தில் இன்னும் இந்த வாத்தியம் பழக்கத்திலிருந்து வருகிறது.

சங்கீத அபிமானிகள் இந்த யோசனைகளை ஊக்கத்துடனும் தீவிரமாகவும் யோசிப்பார்களா என்று நான் கேட்கிறேன்—மாட்டவே மாட்டார்கள் என்கிறான் அம்மாஞ்சி.

---

சமீபத்தில் விடுதலையான எல்லைப்புற காந்தி

**கான் அப்துல் காபர்கான்**









## இவர்களுக்கு என்று விடுதலை ?

# ஆகாயக் கப்பல்களும் விமானங்களும்

ஆர். கே. விசுவநாதன்

பறவைகளைப்போல வானத்தில் பறந்து செல்லவேண்டுமென்று மக்களிடையே வெகுகாலமாக இருந்த விருப்பம் இந்நூற்றுண்டில்தான் நிறைவேறிற்று. விக்ஞானம் அடைந்த பெரும் வெற்றிகளில் இதுவே முக்கியமானது. இதன் விளைவாகத் தரைமீதும், கடல்மீதும் செல்லப் போக்குவரத்துச் சாதனங்கள் இருப்பதைப்போல வானத்திலும் செல்ல வானக்கப்பல்களும் விமானங்களும் இயற்றப்பட்டிருக்கின்றன. இவ்விரு வகைச் சாதனங்களும் வெவ்வேறுவிஞ்ஞான தத்துவத்தைக்கொண்டிருக்கின்றன. இவற்றின் அமைப்பையும் செயல்முறையையும் இக்கட்டுரையில் விளக்குவோம்.

முதலில் காற்றைவிட லேசான ஆகாயக் கப்பல்களை எடுத்துக்கொள்வோம். ஒரே பருமன் கொண்ட பல பொருள்கள் வெவ்வேறு நிறைகொண்டிருப்பதைக் காணலாம். உதாரணமாக ஓரளவு இரும்பின் நிறை அதே பருமன்கொண்ட நீரைவிடச் சுமார் எட்டுமடங்கு இருப்பதைப் பார்க்கலாம். இவ்வேற்றுமை இரண்டு பொருள்களிலும் உள்ள நெருக்க வேற்றுமையினுல் ஏற்பட்டதாகும். இதையே செறிவு (Density) வேற்றுமை என்று கூறுவார்கள். நீரில் அதைவிடச் செறிவு மிகுந்த இரும்புபோன்ற பொருள்கள் அமுங்குவதைப் பார்க்கிறோம்; அதைவிடச்செறிவுகுறைந்த நெட்டித்துண்டு, மரக்கட்டைபோன்ற பொருள்கள் அமுங்காமல் மேற்பரப்பில் மிதப்பதைக் காண்கிறோம். இதிலிருந்து காற்றில் ஒரு பொருள் மிதக்கவேண்டுமென்றால் அப்பொருளின் செறிவு காற்றின் செறிவைவிடக் குறைவாக இருக்கவேண்டுமென்று அறியலாம். குழந்தைகள் விளையாடும் "பலூன்" ஒன்றில் காற்றைவிட லேசானதொரு வாயுவை நிரப்பி அக்கூண்டைப் பறக்கவிட்டால் அது காற்றில் மேலெழும்பிச் செல்வதைக் கவனிக்கலாம். பலூன் அல்லது கூண்டின் நிறையும் அதனுள்ளிருக்கும் வாயுவின் நிறையும் சேர்ந்து கூண்டின் பருமனளவு உள்ள காற்றின் நிறையைவிடக் குறைந்திருப்பதால் கூண்டு மேலெழும்பி மிதக்கின்றது. இதை உணர்ந்து சென்ற நூற்றுண்டின் இறுதியில் பிரான்ஸ் தேசத்தில் 'யாண்ட் கோல்பர்" என்ற இரு சகோதரர்கள் சோதனைகள் செய்தார்கள். அவர்கள் காகிதம் செய்யும் தொழிற்சாலை ஒன்று நடத்திவந்ததினுல் பெரிய காகிதக் கூண்டுகளை அவர்கள் சுலபமாகத் தயாரிக்க முடிந்தது. அவ்வாறு கூண்டுகளைத் தயாரித்து அவற்றில் சூடான காற்றை நிரப்பிச் சோதனைகள் செய்து வெற்றி அடைந்தார்கள். ஒரு கூண்டில் ஆடு, கோழி முதலியவற்றை வைத்துப் பறக்கவிட்டார்களாம். கூண்டிலிருக்கும் காற்றுக் குளிர்ந்தவுடன் தரைக்கு வந்துவிடுவதைக் கண்டார்கள். இவர்கள் செய்த சோதனைகளைக் கேள்வியுற்று மற்றவர்களும் ஆங்காங்கே சோதனைகள் செய்யலானுர்கள். சிலர் சூடான காற்றுக்குப் பதிலாக நீரக வாயு (Hydrogen) வை நிரப்பிச் சோதனைகள் நடத்தினுர்கள். பின்னர் கூண்டுகள் செல்லும் திசையையும் வேகத்தையும் கட்டுப்படுத்துவதற்கு அவற்றுடன் முடுக்கு விசிறிகளையும், என்ஜின்களையும் இணைத்துச் சோதனைகள் செய்யலானுர்கள். முதலில் சிறு நீராவி இயந்திரங்களையே உபயோகித்தார்கள். நீரகவாயு நெருப்பைப் பற்றும் இயல்புடையதால் நீராவி இயந்திரத்தை இக் கூண்டுகளில் இணைக்கும்போது விபத்து நேரிடுவதை அறிந்தார்கள். இதை நீக்க நீராவி இயந்திரத்தைக்காட்டிலும் லேசானதும் திறமை வாய்ந்ததுமான எண்ணெய் என்ஜின்களைக் கூண்டுகளில் சேர்த்துக்கொண்டார்கள். இவ்வாறு சோதனைகள் நடத்தி வெற்றி அடைந்தவர்களில் ஜெர்மனி தேசத்து "ஸெப்ளின்" என்பவரை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். இவர் இயற்றிய கப்பலில் கூண்டைக் கோளவடிவமாக இராமல் முட்டை வடிவத்தில் தயார் செய்துகொண்டார். இதன் நீளம் நானூற்று இருபது அடியும் விட்டம் முப்பத்தெட்டு அடியும் ஆகும். இவர் கூண்டை அலுமினிய உலோகத்தில் செய்து அதன்மீது துணியைப் பரப்பிக்கொண்டார். பெரிய பைகளில் நீரக வாயுவை அடைத்து அவற்றைக் கூண்டுக்குள் வைத்துக்கொண்டார். கூண்டின்

முன்னே முடுக்கு விசிறிகளையும் பின்னே சுக்கான்களையும் அமைத்துக்கொண்டு "காஸோலின்" என்ஜின்களைக் கொண்டு இம்முடுக்கு விசிறிகளை இயக்கிக் கப்பல் செல்லும் வேகத்தையும் திசையையும் கட்டுப்படுத்திக் கொண்டார். இவர் அமைத்ததுபோல அனேக வானக் கப்பல்களை இயற்றி அவற்றின்மூலம் பிரயாணிகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு ஏற்றிச்சென்றார்கள். இம்மாதிரி பல கப்பல்களை உலகெங்கும் இயற்றலானார்கள். அமெரிக்காவில் உபயோகிக்கும் கப்பல்களில் நீரக வாயுவுக்குப் பதிலாக பரிதியம் (Helium) என்னும் ஒரு ஜடவாயுவை நிரப்புகிறார்கள். இதற்கு நீரகத்தைப்போல் நெருப்பைப் பற்றும் இயல்பு இல்லாததினால் இதை உபயோகிக்கின்றார்கள். கூண்டுகளில் வெவ்வேறு வாயுக்களை அடைப்பதினால் அவற்றின் தூக்கும் சக்தியும் (Lifting power) மாறுபடும். பரிதியத்தை அடைத்தால் அதன் தூக்கும் சக்தி நீரகத்தின் தூக்கும் சக்தியைவிடக் குறைந்துவிடுகிறது. ஏனெனில் பரிதியம் நீரகத்தைப்போல இரண்டு மடங்கு கனமுள்ளது. நிற்க, இக்கூண்டுகள் காற்றில் ஓர் உயரத்துக்குமேலே எழும்பாமல் நிற்கும். இதன் காரணம் யாது என்று விளக்குவோம். காற்றின் செறிவு தரைக்கு அருகிலே உச்சநிலையில் இருக்கும். மேலே செல்லச்செல்லச் செறிவு குறைந்துகொண்டே போகும். கூண்டின் நிறையும் அதனுள்ளிருக்கும் வாயுவின் நிறையும் சேர்ந்து கூண்டினளவுள்ள காற்றின் நிறைக்குச் சமமாக ஆகும் வரையிலே கூண்டு உயரக்கிளம்பிச் சென்றுகொண்டிருக்கும். இக்கப்பல்கள் மணிக்குச் சுமார் எண்பது மைல் வேகத்துடன் செல்லக்கூடும். தற்காலம் இவற்றைவிட ஆகாய விமானங்களே பிரபலமடைந்து வருகின்றன. அவற்றின் தத்துவத்தை இப்பொழுதுபார்ப்போம்.

ஆகாய விமானங்கள் காற்றைவிடக் கனமானவை. இவை காற்றிலே மிதக்கவேண்டுமென்றால் ஏதேனுமொரு சக்தி இவற்றை மேனோக்கித் தள்ளவேண்டும். இத்தகைய விமானங்களில் சிறகுகள் (wings) என்று சொல்லப்படும் பெரிய தளவடிவான பலகைகள் பொருத்தப்பட்டிருப்பதைக் கவனிக்கலாம். இவை ஏறக்குறைய நேரக (Rectangular) வடிவங்கொண்டிருக்கும். இவற்றின் நீளம் அகலத்தைவிடப் பன்மடங்கு அதிகமாக இருக்கும். ஒற்றைச் சிறகு விமானத்தில் (Monoplane) ஒரு சிறகும், இரட்டைச் சிறகு விமானங்களில் (Biplanes) இரண்டு சிறகுகளும் உண்டு. இவ்விரண்டு சிறகுகளும் ஒன்றின்மேலொன்றாக அமைக்கப்பட்டிருக்கும். மேலும் இவை இரண்டும் ஒன்றோடொன்று நடுவே சிறு குச்சிகளால் இணைக்கப்பட்டிருக்தும். சிறகு என்று கூறும்போது விமானத்தின் இடது வலது புறங்களிலுள்ள இரண்டையும் சேர்த்தே கூறுவது வழக்கம். விமானத்தில் சிறகு அதன் முன் விளிம்பு சற்று மேலே தூக்கி இருக்குமாறு பொருத்தப்பட்டிருக்கும். பெரிய சக்திவாய்ந்த என்ஜின்கள் விமானத்தின் முன்புறமுள்ள முடுக்கு விசிறிகளைச் சுழற்றுகின்றன. இதனால் விமானம் வெகு வேகமாக முன்னோக்கி இழுக்கப்படுகிறது. சிறகு அதிக வேகத்துடன் முன்னேறிச் செல்லும்போது காற்று அதற்கு எதிர்ப்புறமாக வீசிச்செல்வதாகத் தோன்றும். சிறகின் தளம் சற்று முன்னோக்கி இருப்பதினால் அதைப் பின்னோக்கித் தள்ளும் சக்தி ஒன்று அதன் மீது தொழிற்படுகிறது. இச் சக்தியின் திசை காற்று வீசும் திசைக்கும் நிமிர்வைத் திசைக்கும் (Vertical direction) நடுவே இருக்கும். இது இரண்டு பாகமாகப் பிரிந்து ஒன்று மேனோக்கியும் மற்றொன்று காற்று வீசும் திசையிலும் தொழிற்படும். மேனோக்கி இழுக்கும் பாகத்தின் அளவு விமானத்தின் எடையைவிட அதிகமாக இருப்பதால் விமானம் உயரக்கிளம்புகிறது. முடுக்கு விசிறிகளின் சக்தி மற்றப் பாகத்தின் அளவைவிட அதிகமாக இருப்பதால் விமானம் முன்னேறிச்செல்லுகிறது. இவ்வாறு சிறகின்மீது தொழிற்படும் சக்தியின் முழு விவரத்தையும் அறியப் பலசோதனைகள் நடத்தினார்கள். இதற்கு ஒரு பெரிய இரும்புக் குழலில் (Wind tunnel) காற்றை விசையுடன் அனுப்பி, சிறகைப்போல் சிறியதொரு அமைப்பை மரத்தில் தயார்செய்து, அதைக் குழலில் தொங்கவிட்டு, அவ்வமைப்பின்மீது தொழிற்படும் சக்திகளைத் தக்க கருவிகளைக்கொண்டு அளந்தார்கள். சிறகின் பரப்பு, சாய்வு, காற்றின் வேகம் இவை ஒவ்வொன்றுக்கும் இடையே உண்டான தொடர்பைப் பரிசோதனை வாயிலாக அறிந்தார்கள். இவற்றைப் பயன்படுத்தியே விமானங்கள் செய்யப்பட்டு வருகின்றன. பறக்கும்போது விமானத்தின் போக்கைக் கட்டுப்படுத்துவதற்குண்டான சோதனைகளை "ரைட்" (Wright) சகோதரர்கள் என்ற விஞ்ஞானிகள் நடத்தினார்கள். விமானங்கள் ஏற்படுவதற்கு இவர்களது ஆராய்ச்சிகளே முக்கிய காரணமாயிருந்தன. இவர்கள் கண்ட முடிவுகளின் பயனாகவே சுக்கான்களின் அமைப்பு எத்தகையதாக இருக்கவேண்டுமென்று அறியப்பட்டது.

அவற்றைக்கொண்டு விமானத்தின் போக்கை எளிதாகக் கட்டுப்படுத்த முடிந்தது. எனவே காற்றில் விமானம் சம நிலைமையுடன் செல்லுவது சாத்தியமாயிற்று. இனி, முடுக்கு விசிறிகளை இயக்குவதற்கு வேண்டிய என்ஜின்களைப்பற்றிச் சிறிது கூறுவோம். முதலில்] நீராவி என்ஜின்களைப்பற்றிச் சிறிது கூறுவோம். முதலில் நீராவி என்ஜின்களை உபயோகித்து வந்தார்கள். இதில் சில குறைபாடுகள் இருப்பதை உணர்ந்தார்கள். நீராவி என்ஜின் மிகவும் கனமானது. மேலும் அவ்வளவு திறமை வாய்ந்ததல்ல. விமானத்துக்குத் தகுந்தவாறு லேசாயும் மிகுந்த சக்தியும் வாய்ந்த என்ஜின்கள் எண்ணெய் என்ஜின்களாகத்தானிருக்க வேண்டுமென்று அறிந்து அதற்கு வேண்டிய சோதனைகள் செய்யலானார்கள். இவற்றின் விளைவாகத் திருந்திய முறையில் என்ஜின்கள் தயாரிக்கப்பட்டன. இவ்வென்ஜின் ஒன்றின் செயல் முறையைச் சற்று விளக்குவோம். இதில் ஒரு குழல் உண்டு. அதில் பீச்சான் ஒன்று முன்னும் பின்னுமாகச் செல்லும்படி இயற்றப்பட்டிருக்கும். பீச்சான் பின்னோக்கிச் செல்லும்போது குழலினுள் பெட்ரோல் எண்ணெயின் வாயுவும் காற்றும் கலந்த கலவை உறிஞ்சப்படும். பீச்சான் மீண்டும் முன்னேறிச்செல்லும் போது கலவையை நெருக்கும். எனவே கலவையின் இறுக்கம் வரவர உயர்ந்து கொண்டு செல்லும். இறுக்கம் உச்ச மதிப்பை அடைவதற்குச் சற்று முன்பு கலவையில் மின்பொறி (Electric Spark) பாயுமாறு செய்யப்படும். அதனால் கலவை அனல் மூண்டெரியும். எரியும்பொழுது கலவையின் சூடு உயர்ந்துவிட அதனால் ஏற்படும் பெருக்கத்திற்கு இடமில்லையாகையால், கலவையின் இறுக்கம் முன்பு இருந்ததைவிடப் பன்மடங்கு அதிகரித்துவிடும். இதனால் பீச்சான் வேகமாகப் பின்னோக்கி உதைத்துத் தள்ளப்படும். இப்பொழுது இறுக்கம் குறைந்துவிடும். பின்னர் பீச்சான் மறுபடியும் முன்னோக்கி வரும்போது எரிந்த காற்றெல்லாம் வெளியேற்றப்படும். பீச்சான் பின்னோக்கி மீளும்போது மறுபடியும் காற்றும் பெட்ரோல் எண்ணெய் வாயுவும் கலந்த கலவை குழலினுள்ளே சென்று முன்போலவே நிகழும். பீச்சான்களின் உதைப்புக்களைத் துலைநேமி (Fly whell) என்ற சக்கரம் பதப்படுத்தி என்ஜினைச் சீராக ஓட்டும். இதனால் விமானத்திலுள்ள முடுக்கு விசிறிகள் இயங்குகின்றன.

கடைசியாக ஓட்டுபவன் எப்படி விமானத்தை பூமியிலிருந்து மேலே எழுப்பிக்கீழேகொண்டு வருகின்றான் என்று பார்ப்போம். முதலில் என்ஜினைத் துவக்கித் தரையில் விமானம் சீரான கதியுடன் ஓடுமாறு செய்வான். சிறிது தூரம் சென்றவுடன் சுக்கானிலுள்ள (Elevator) என்னும் பாகத்தைச் சாய்த்து விமானத்தின் முன்பக்கம் உயர்ந்து மேலெழும்புமாறு செய்து, வேண்டுகிற உயரம் கிளம்பியவுடன், சுக்கான்களைச் சரிப்படுத்தி விமானத்தை மட்டமாக இருக்கச்செய்து கொள்ளுவான். பின் இஷ்டம்போல் வேகமாகவோ மெதுவாகவோ போய்க்கொண்டிருப்பான். கீழே இறங்கச் செய்வதற்கு என்ஜினின் விசையைக் குறைத்து, சுக்கானிலுள்ள (Elevator) என்னும் பாகத்தை எதிர்ப்புறமாகச்சாய்த்து விமானத்தின் முன்பக்கம் கீழ்நோக்கி இறங்குமாறு செய்துகொள்ளுவான். தரைக்குச் சிறிது உயரத்துக்கு வந்தவுடன் சுக்கான்களைச் சரிப்படுத்தி விமானம் மட்டமாக இருக்குமாறு செய்துகொள்ளுவான். என்ஜின் விசையை நன்றாகக் குறைத்து தரையில் சிறிது தூரம் விமானத்தை ஓடச் செய்தே நிறுத்துவான். நிற்குமுன் தரைமீது சுமார் முப்பது மைல் வேகத்துடன் சென்று நிற்கும். இதுவே விமானத்தின் அமைப்பும் செயல் முறையும் ஆகும்.


சேலத்தில்

கல்யாணப் பட்டு ஜவுளி ரகங்கள் வாங்க சிறந்த இடம்

கோபால பத்ம விலாஸ்

385, கடைவீதி, சேலம்.

*Proprietors :*

S. N. PATHMANABA CHETTIAR

P. R. JAYAGOPALA CHETTIAR

# அறியாமையின் ஆனந்தம்

மாரார்

"அறியாமையே ஆனந்தத்துக்குக் காரணமாயிருக்குமிடத்து அறியப்புகுவது மூடத்தனமாகும்" என்றார் ஓர் ஆங்கிலக் கவி. யோசித்துப்பார்த்தால் இவர் கூறுவது நம் எல்லோருடைய அனுபவத்தை ஒத்திருக்கிறது. விஷயங்களின் உண்மையான தத்துவத்தை அறியாதிருக்கும் வரை ஆனந்தமாக அவைகளை அனுபவிக்கிறோம். அவைகளின் உருவத்தை உள்ளபடி அறியப்புகுந்தால், முன் இருந்த சுகமும் மன நிம்மதியும் குன்றுகின்றன.

நான் பாலியத்தில் உறவினர் வீட்டுக் கலியாணங்களுக்கு என் பெற்றோருடன் போயிருக்கிறேன். அயல் ஊருக்கு வண்டியிலோ, ரெயில் மார்க்கமாகவோ, போவதிலும் புதிய புதிய ஊர்களையும் ஜனங்களையும் வழியில் காண்பதிலும் சிறுவர்க்கு ஒரு பேரானந்தம். கலியாணவீட்டில் மற்றப் பையன்களுடன் விளையாடிக் கொண்டிருப்பதில் மனத்தில் யாதொரு கவலையுமின்றி மகிழ்ச்சியே மிதந்திருக்கும். சிற்றுண்டிகள் கிடைப்பதைத்தின்னுவதும் ஆனந்தத்திற்கு வேறு காரணமாகும். இப்போது அதே மாதிரி கலியாணங்களுக்குப் பயணஞ் செய்ய நேரும்போது பாலியத்தில் அனுபவித்த சந்தோஷத்தில் நூற்றில் ஒரு பங்குகூடக் கிடைப்பதில்லை. வழிப்பிரயாணத்திலுள்ள சங்கடங்கள், ரெயில் வண்டியின் கூட்டத்தின் நடுவே அழுக்கு, அசுத்தம் நிறைந்த இடங்களில் உட்காரவேண்டியிருக்கிறதே என்ற வெறுப்பு, பணச்செலவு ஆகிறதே என்ற கவலை, இவைகள் எல்லாம் சேர்ந்து மனத்தில் ஒரு சோர்வை விளைக்கின்றன. உறவினர் வீடு சேர்ந்ததும், அவர்கள் கலியாணத்திற்காகப் படும்பாடு, பணச்செலவு, சம்பந்திகளால் நேரிடும் மனஸ்தாபம் இவை எனக்கு அப்போதைக்கப்போது தெரியாமல் இருப்பதில்லை. தெரிவதால் கலியாணத்தில் பலவிதமான விருந்தும் உபசாரமும் பெற்றாலும் உள்ளத்தில் ஒரு சலிப்பு உதிக்கின்றது. இளைஞர் மனத்தில் ஒன்றும் அறியாத நிலையினால் உண்டாகும் ஆனந்தம் பிராயமானவர்க்கு ஒருகாலும் ஏற்படுவதில்லை.

சுமார் முப்பது வருடங்களுக்கு முன் நான் வைத்திய புஸ்தகங்களையோ, சுகாதார நூல்களையோ, வாசித்ததில்லை. அக்காலத்தில் நான் பசித்த போதெல்லாம் கிடைத்த உணவுப் பொருள்களை ருசியுடனும் ஆவலுடனும் புசித்து, தாகம் வந்தால் குளிர்ந்த நீர் கிடைத்ததைக் கவலையின்றி அருந்தி, பழமோ, காயோ, பக்ஷணமோ எதுவானாலும் சரி, அதை மகிழ்ச்சியுடன் உண்டு களிப்பேன். இப்போது சுகாதார நூல்களையும் வைத்தியர் ஆராய்ச்சிகளையும் படித்து வியாதிகளின் காரணங்களை நன்கு அறிந்துவருகிறேன். அதனால் உண்டான பிரயோஜனம் என்னவென்று சொல்ல வெட்கமாயிருக்கிறது. பந்துக்கள் வீட்டுக்கு விருந்துண்ணச்சென்றால், அவர்கள் சமையற்காரன் குடி தண்ணீரை நன்றாகக் காய்ச்சினானோ இல்லையோ என்ற சந்தேகம் மனத்தில் தோன்றி, நீர் குடிக்காமலே வந்துவிடுகிறேன். பலவியாதிகள் கண்ணுக்குப் புலப்படாத சிறுசிறு கிருமிகள் நம் தேகத்திற்குள் பிரவேசிப்பதால் உண்டாகின்றன என்று விஞ்ஞானிகள் எழுதுகிறார்கள். அதை அறிந்ததின் காரணமாக நகரங்களின் வீதிகளில் நடக்கும்போது தூசியுடன் கிருமிகள் நம் நாசிக்குள் நுழைந்துவிடுமோ, வியாதிகள் வருமோ, என்ற பீதி உள்ளம் கலங்கச் செய்கிறது. ஊரில் காலராவோ, வைசூரியோ கண்டால் சரியான தூக்கம்கூட இரவில் வருவதில்லை. அவ்வளவு பயம் இந்நோய்களுக்குக் காரணமான கிருமிகளிடம். கும்பகோணம் மகாமகத்திற்கு மாபெரும் கூட்டம் வந்து புண்ணியம் பெறுவதற்காக மகாமகக் குளத்தில் ஸ்நானம் செய்து பரமானந்தம் அடைந்து உற்சாகமாக ஊர் சுற்றி, கோயில்களுக்குள் கூட்டத்துடன் கூட்டமாக இடிபட்டுத் தரிசனம் செய்து, அளவில்லாத மகிழ்ச்சியுடன் தங்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்பினவர் லக்ஷக்கணக்குக்கும் மேலானவர். வைசூரியின் கிருமி எவ்விதம் காற்றின் வழியாகப் பரவிப் பலருக்கு நோயை விளைவிக்கின்றது என்று அறியாமலிருந்ததே அவர்கள் ஆனந்தத்தின் காரணம். விதி இருந்தால் வியாதி எங்கிருந்தாலும் வரும்; மகாமகம் பன்னிரண்டு வருஷத்துக்கு ஒருதரம்தான் வரும் என்று கிளம்புகிறார்கள். கூட்டத்திற்கு நடுவே சென்றால் எங்கே நோயின் கிருமி நமக்குள் வந்துவிடுமோ என்று விதறிக் கொண்டு, சங்கீத விழா, தொழிற்காட்சி முதலிய மகாமக உற்சவத்தின் அங்கங்களான நிகழ்ச்சிகளில் எவற்றிலும் கலந்துகொள்ளாமல் வீட்டுக்குள்ளேயே அடைபட்டு நிற்கும் அறிஞனைப் புகழ்வதா? பழிப்பதா?

மேகங்களின்றி நிர்மலமாகப் பிரகாசிக்கும் வானத்தை இரவில் பார்க்கும்போது மகிழாதவர் உண்டோ? வான சாஸ்திரம் கற்றறியாதவன் அனுபவிக்கும் ஆனந்தத்துக்கு அளவில்லை. நக்ஷத்திரங்களெல்லாம் பூமியிலுள்ள நமக்கு வெளிச்சம் தருவதற்கென்றே கடவுளால் ஆகாயத்தில் பதிக்கப்பட்ட திபங்கள் என்று எண்ணுகிறான் பாமரன். சந்திரன் தன் குளிர்ந்த கிரணங்களை வீசி, உலகத்தோர் உள்ளத்தில் ஓர் ஆனந்தைத் தருவதற்காகவே படைக்கப்பட்டிருக்கிறான் என்று நினைக்கிறான். ஜ்யோதி சாஸ்திரத்தைக் கற்ற



# வின்ஸெண்ட் கம்பெனி லிமிடெட், திருச்சி.

பிராஞ்சுகள்: } மதுரை, திருநெல்வேலி, காரைக்குடி, கும்பகோணம், கோயம்புத்தூர், சேலம்.

வின்ஸெண்ட் ஸோடா, கலர், விம்டோ, ரொட்டி, கேக்குகளை எல்லோரும் தாராளமாய் வாங்கி, குடும்பத்தில் யாவருக்கும் பந்துமித்திரர்களுக்கும் கொடுங்கள். ஏனெனில், இவைகள் கடந்த 30 வருஷமாய், பொதுஜனங்களின் நன்மதிப்பை நன்றாய் அடைந்திருக்கும் **வின்ஸெண்ட் கம்பெனியாரால்** தயார் செய்யப்பட்டவை. மேலும் ஷை சரக்குகள் கல்யாணம், டீபார்ட்டி, திருவிழாக் காலங்களிலும் விருந்தினர்களுக்குச் சிற்றுண்டியாக வழங்க நேர்த்தியாய் அமைந்துள்ளன.

# ★ ஜாப்கோ ஸ்னோ ★




**மங்கையர்களின்**
**முக**
**விலாசத்திற்கே**
**அர்ப்பணம்**
**செய்யப்பட்டது**

வனுக்கோ வானத்தில் உள்ள கோளங்களின் உண்மையை அறிந்ததின் காரணமாக, பாமரனின் களிப்பில் கலந்துகொள்ள முடிவதில்லை. "ஒவ்வொரு நக்ஷத்திரமும் ஒரு தீயின் மண்டலம். அதனருகில் இரும்பும் உருகிக் காற்றாக மாறக்கூடிய ஜ்வாலை இருக்கும். இந்தத் தீ மண்டலங்கள் ஆகாயத்தில் வாயு வேகம், மனோவேகம் என்று சொல்லப்படும் பயங்கரமான வேகத்துடன் சுற்றிச் சுழல்கின்றன. சூரியன் இவ்வகையான தீ மண்டலமே" என்றெல்லாம் வான தத்துவ நூலாசிரியர்கள் கூறுகிறார்கள். இதை அறிந்தவருக்கு ஒருவிதமான திகைப்பும் வியப்பும் கிளம்பி மனத்தில் குழப்பம் வருகிறதே ஒழிய, களிப்புக்கு இடமில்லை. நம் பூமியும் சூரிய மண்டலத்திலிருந்து பிரிந்து அதைச் சுற்றிச் சுழன்ற தீ மண்டலமாக ஒரு காலத்திலிருந்தது. லக்ஷக் கணக்கான வருஷங்களுக்குப் பின்னர் வெப்பம் குன்றி, அதன் மேற்புறம் கொஞ்சங் கொஞ்சமாகத் தரை ரூபமாகியது. பிறகு அதன்மேல் நீர் உண்டாயிற்று. மற்றும் அநேக லக்ஷம் வருஷங்களுக்குப் பின், சிறிது சிறிதாகக் கீழ்த்தரத் தாவரங்களும் கீழ்த்தரப் பிராணிகளும் ஜனித்தன. பிறகு பெரிய பெரிய தாவரங்களும் மேல்வர்க்கத்தைச் சேர்ந்த பிராணிகளும் உற்பத்தியாயின. கடைசியில் மனிதவர்க்கம் தோன்றிற்று என்று விக்ஞான சாத்திரங்கள் கூறுகின்றன. இவையெல்லாம் அறிந்ததின் காரணமாகப் பல கேள்விகள் மனத்தில் எழுகின்றன. மனிதனே இல்லாத கோடிக் கணக்கான வருஷங்கள் உலகத்தில் கடந்தனவே. மனிதன் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டான், என்பதற்கு அத்தாக்ஷி ஏதேனும் உண்டோ? அவனுடலுக்குள் ஆத்மா என்ற தனித் தத்துவம் ஒன்று உளது என்பதற்குத் தக்க ஆதாரங்கள் காணப்படுகின்றனவா? உடல் உதிர்ந்தவுடன் அப்படி ஓர் ஆத்மா உண்டெனில் அதன் நிலை யாதாகிறது? கடவுளால் மனிதர்கள் எல்லோரும் படைக்கப் பட்டிருப்பின், ஏன் பிறவிக் குருடு, சப்பாணி, மூடம், ரோகம் முதலிய வேற்றுமைகள் தோன்றுகின்றன? கடவுளுக்குப் பக்ஷபாதம் உண்டோ? இவ்வுலகத்தில் காணப்படும் கண்ணராவியான கொடுமைகளும் கொடூரங்களும் கருணைக் கடலெனக் கூறப்படும் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவன்களில் காணப்படுவது எங்ஙனே? இவையும் மற்றும் பல பிரச்னைகளும் அறிஞன் மனத்தில் கிளம்பி அவனைக் கலக்கமடையச் செய்கின்றன.

இந்தச் சந்தேகங்களும் மனக்குழப்பமும் பாமரனுக்கு வருவதில்லை. கடவுள் நம்மைப் படைத்திருக்கிறார். நம்மைக் காப்பாற்றுவது அவர் கடமை; மரம் வைத்தவன் நீர் வார்க்கமாட்டானா? நாம் கோயிலில் சுவாமி தரிசனம் செய்து, தேங்காய் பழங்களுடன் அர்ச்சனை செய்வித்து வேண்டிக்கொண்டால் கடவுள் நமக்கு இந்த ஜன்மத்தில் சுகத்தைக் கொடுப்பார்; இறந்த பிறகும் நல்ல கதியை அருளுவார் என்று பூர்ண நம்பிக்கையுடன் வழிபட்டு ஆனந்தமடைகிறான். அறிஞன் தன் மனத்தில் கிளம்பிய கேள்விகளுக்குச் சமாதானம் தேடுகிறான்; மத நூல்களைப் படிக்கிறான். சில மதநூல்களில் இக் கேள்விகளுக்குப் பதிலே கிடையாது. கடவுள் கிருபா மூர்த்தியாயிருக்கையில் பிணி, பசி, குருடு, மரணவேதனை முதலிய தீமைகள் உலகில் உலாவுவதற்குக் காரணம் இந்நூல்களில் கிடைப்பதில்லை. சிற்சில சாஸ்திரங்களில் முன் பிறவிகளில் செய்த தீவினைகளைக் காரணமாகக் கூறுகிறார்கள். ஆனால் அந்தத் தீவினைகள் எங்ஙனம் விளைந்தன என்று வினவினால், அதற்கு முன் ஜன்மத்தின் வினையினால் என்கிறார்கள். இப்படி மேல் மேல் பிரச்னை செய்தால் 'கருமம் என்பது அநாதி. அதற்கு மூல காரணம் சொல்லமுடியாது' என்று கையை விரிக்கின்றார்கள். படித்ததின் பலன் அக்ஞானம் முற்றுவதேயாகும். பாமரனின் ஆனந்தம் படித்தறிந்தவனுக்குக் கிடைப்பது அரிது. நாஸ்திகம், உண்மையை அறிவது அசாத்தியம் என்ற துணிவு இவைகளே பெரும்பாலும் ஏற்படுகின்றன. எவ்வளவுக்கெவ்வளவு உலகத்தின் தத்துவத்தை ஆராய்ந்து அறிய முயலுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நாம் அறியாத விஷயங்கள் மிதமின்றிக் கிடப்பதே புலப்படுகிறது.

ஆனால் அறிவிலியின் ஆனந்தத்தைக் காட்டிலும் அறிஞனின் கலக்கமே சிறந்தது என்று எண்ணக்கூடும். அதன் உண்மை அவரவர் மனப்பான்மைக்குத் தக்கபடி தோன்றுமானதால், எல்லோரும் ஒத்துக்கொள்ளக்கூடிய பதில் சொல்லமுடியாது.


## நின்றுபோன மாதவிடாய்

எந்த முதிர்ந்த நிலையானாலும் குமாரி மாத்திரைகளை உபயோகியுங்கள். கர்ப்பத் தடை நிச்சயம். யாதொரு அபாயமுமில்லை. திருப்தி நிச்சயம். விலை ரூ. 3/-

முதிர்ந்த பிடிபடாத கேஸுகளுக்கு ரூ. 5/-
(வி. பி. பி. அணா 12 உபரி.)

Mrs. P. DEVEE, F. D. S., (C. M.
Tollygunge, Calcutta.

கீழ்க்கண்ட ஸ்டாகிஸ்டுகளிடமும் கிடைக்கும்:—

(1) ஹாரி & ஸன்,
93, சைனா பஜார் ரோடு, மதராஸ்.

(2) நாதம் & கோ.,
மட்டஞ்சேரி, கொச்சின்.

(3) ராஜா மெடிகல் ஹால்,
31, தர்மராஜா தெரு,
பங்களூர் கண்டோன்மெண்ட்.

# எனது முதல் சிறுகதை

க. சந்தானம்

பல வருஷங்களுக்கு முன் ஓர் இரவு. நான் எனது அறையில் மிகவும் கவலையுடன் உட்கார்ந்திருந்தேன். பக்கத்து அறையில் ஒரு குழந்தை இம்மைக்கும் மறுமைக்கும் மத்தியில் ஊசலாடிக்கொண்டிருந்தது. ஜ்வரம் 105°. பிரக்ஞை இல்லை. அன்றிரவு தப்பினால் ஒரு வேளை பிழைக்கலாம், என்று சொல்லிவிட்டு டாக்டர் போய்விட்டார். அது என் குழந்தை இல்லை. ஆனால் ஐந்து வருஷங்களாக என் குழந்தைகளைவிட அருமையாக அதை வளர்த்துவந்தேன். துக்கத்தால் பைத்தியம் பிடித்தவன்போல் ஒன்றும் தோன்றாமல் திகைத்திருந்தேன். எனக்கு மந்திரத்திலும் மாயத்திலும் நம்பிக்கை கிடையாது. மனித அறிவு மின்மினிபோல் மங்கலாகவிருந்தாலும் அதைத் தவிர நம் வாழ்க்கைக்கு வேறு வழிகாட்டி இல்லை என்னும் கொள்கை கொண்டவன். ஆனால் அன்று சாஸ்திரிகள் மந்திரிக்கவந்தபொழுது நான் ஒன்றும் கூறவில்லை. அக்கம் பக்கத்துப் பாட்டிமார்கள் வந்து தந்திரங்கள் செய்து, திருப்பதி வேங்கடேசனுக்கு வேண்டிக் கொண்டபொழுதும் அதை வெறுக்கவில்லை. அவ்வித நெருக்கடியான காலங்களில் மனத்தின் ஒற்றுமை குலைந்து அதன் வெவ்வேறு பாகங்கள் வெவ்வேறுவிதமாகச் சிந்திப்பதுண்டு. அவற்றிற்குள் தீவிர தர்க்கங்கள் ஏற்படுவதுமுண்டு. அன்று பின்வரும்விவாதம் என்மனத்துள் நடந்தது. அது இன்றும் நன்கு ஞாபகமிருக்கிறது.

இக்குழந்தை எப்படியாவது பிழைக்க வேண்டுமென்றது என் உள்ளம்.

உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? பிறப்பும் இறப்பும் உன் இஷ்டத்தைப் பொறுத்த விஷயங்களல்ல, என்றது என் பகுத்தறிவு. இது உண்மையல்ல. அன்புக்கும் பக்திக்கும் அபூர்வ சக்தியுண்டென்று கூறிற்று நான் பாலியத்தில் கற்ற மதம்.

வெறும் அன்பு போதாது; அத்துடன் தியாகமும் சேர்ந்தால் புதிய சக்தி பிறக்கலாம் என்றுரைத்தது மூலையில் கட்டுண்டு கிடந்த மற்றோர் உணர்ச்சி.

இதெல்லாம் வீண் மயக்கம். குழந்தை இறப்பதும் இருப்பதும் உன்கையிலில்லை. வைத்தியம் செய்து உன் கடமை ஆற்றிவிட்டாய். மனதைத் திடம் செய்துகொண்டு பொறுமையுடன் இருப்பதே உன்னாலான காரியம் என்று வாதத்தை முடித்தது என் பகுத்தறிவு.

ஆனால் மனதில் சமாதானமுண்டாகவில்லை. பாபர் சக்ரவர்த்தியின் கதை ஞாபகம் வந்தது. ஹுமாயூன் சாகுந்தறுவாயிலிருந்தபொழுது தன்னுயிரை ஏற்றுக் கொண்டு மகனைக் காப்பாற்றும்படியாகப் பாபர் கடவுளைப் பிரார்த்தித்ததாகவும், அப்படியே ஹுமாயூனுடைய நோய் பாபரிடம் சென்றதாகவும் சரித்திரத்தில் கூறப்படவில்லையா? இது மதி மயக்கமாகவிருக்கலாம். ஆனால் எவ்வளவு கம்பீரமான எண்ணம்! உண்மையில் ஓருயிர் தந்து மற்றோருயிரைக் காப்பாற்றக்கூடுமானால் எவ்வளவு நன்றாகவிருக்கும் என்று முடிவு கட்டப்போகுந் தருணத்தில் திடீரென்று ஒரு சந்தேகம் பிறந்தது. இக்குழந்தைக்குப் பதிலாக உன் குழந்தைகளில் ஒன்றைப் பலி கொடுத்தால் இது பிழைக்குமென்று ஒரு தெய்வம் வந்துகூறினால் என்னசெய்வாய்? கொடுப்பாயா, மறுப்பாயா? மறுத்தால் உன் அன்பின் தன்மை என்ன? கொடுத்தால் உன் கதி என்னவாகும்? விதியின் கொலைத் தொழிலை நீ வலுவில் ஏற்றுக்கொண்டவனாகமாட்டாயா?

இப்படியே இரவு முழுதும் பலவா தாறுமாறாகச் சிந்தித்துப் பொழுது போகினேன். அடுத்த நாள் குழந்தைக்கு ஜ்வரம் தணிந்து சில நாட்களில் சுகமாய்விட்டது. ஆனால் தினம் படுக்கப்போகும்போழுது இந்தப் பிரச்னை என் மனதில் எழுந்தது. என் தூக்கத்தைக் கெடுத்தது. ஒரு நாள் அதை ஒரு சிறு கதையாக்கிய பின்னரே நிம்மதியடைந்தேன். மூன்று குழந்தைகளுடைய ஒரு குடும்பத்தில் பந்துக்களின் அகால மரணத்தால் ஓர் அநாதைக் குழந்தை வந்து சேருகிறது. முதலில் மனைவி அதை வரவேற்கவில்லை. ஆனால் அவளை அறியாமலே அதன் மீது அளவில்லாத அன்பு பெருகிவிடுறது. அக்குழந்தை திடீரென்று நோய்வாய்ப்படவே, தெய்வத்தை வேண்டிக்கொள்கிறாள். கனவில் தெய்வம் வந்து உன் குழந்தைகளில் ஒன்றைக் கொடுத்தால் உயிர்ப்பிச்சை கொடுக்கிறேன் என்கிறது. தெய்வ பக்தியுள்ள அம்மாதின் மனநிலை எப்படியிருக்குமென்பதே அச்சிறு கதையின் சாராம்சம். அதைச் ‘சோதனை’ என்று பெயரிட்டுப்

பலநாள் வீட்டிலேயே வைத்திருந்தேன். பிரசுரத்திற்கு அனுப்பினால் பைத்தியக்காரப் பட்டம் வருமோவென்ற பயம். கடைசியில் ஒரு வாரப்பத்திரிகையின் ஆசிரிய நண்பருக்கு அனுப்பினேன். உண்மையாகச் சொன்னாரோ, தாக்ஷிண்யத்தால் உரைத்தாரோ தெரியாது. நன்றாகவிருக்கிறதென்று பிரசுரித்தார். அது முதல் கொஞ்சம் தைரியம் வந்தது. எதாவது புதிய சம்பவம் நேரிட்டால், நூதன உணர்ச்சி மனத்தில் உதித்தால், அபூர்வ கற்பனை தோன்றினால் அதைச் சிறு கதையாக்கவேண்டுமென்ற ஆவல் பிறக்கிறது. சிறு கதை ஓர் அரிய கலை. நீண்ட புத்தகங்களைப் படிக்கச் சாவகாசம் இல்லாத இந்நாட்களில் மனத்தில் விநோதத்திற்கு அது ஒப்பற்ற உதவியாயிருக்கும். தமிழ் நாட்டில் இனிய நடையில் நல்ல சிறு கதைகள் எழுதும் ஆசிரியர் பலருண்டு. அவர்களுள் நான் ஒருவனல்ல. ஆயினும் சிறு கதையின் வளர்ச்சியைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் சிறு கதைக்கு ஆனந்த விகடன் கல்கி போன்ற சில வாரப் பத்திரிகைகள் செய்த சேவையைப் போற்றாமலிருக்க முடியாது. ஆனால் இவ்விதத் தமிழ்ப் பத்திரிகைகளையும் இப்பொழுது தொடர் கதை பிடித்துக் கொண்டதைப் பார்த்து எனக்குச் சிறிது வருத்தந்தான். அதன் பலனாகச் சிறு கதைகளின் தராதரம் ஓரளவு குறைந்து வருகிறதென்று எனக்குத் தோன்றுகிறது. காகித நெருக்கடி தீர்ந்தால் இக்குறையும் மறையலாம். இதைப் பற்றித் தமிழ் நாட்டிலுள்ள எழுத்தாளர்கள் ஆலோசிக்கவேண்டும். இப்பத்திரிகைகள் செய்த பெரிய சேவை சிறு கதைக்கும் விலையுண்டு என்ற சம்பிரதாயத்தை உண்டாக்கியதே. மற்ற எவ்வித வேலைக்கும் கூலியுண்டு, மூளையின் வேலைக்கு மட்டும் மதிப்பில்லை என்ற மூடக்கொள்கையால் நமது இலக்கிய விருத்தி தடைபட்டிருக்கிறது. தமிழ் மொழிக்குத் திறமையுடன் சேவை செய்வோருக்குத் தகுந்த சன்மானம் கிடைத்தால், அதன் வளர்ச்சி நிச்சயமாகும். சிறு கதை எழுதுவோரின் சன்மானம் இன்னும் மிகக் குறைவாகவே இருக்கிறது. ஆதலால், அதைத் தமிழ் எழுத்தாளர்கள் ஒரு பொழுதுபோக்காகவே பாவித்து வருகிறார்கள்; கவுரவமான தொழிலாகக் கருதவில்லை. எக்கலையும் அதில் முழுமனதுடன் ஈடுபடும் பல பக்தர்களிருத்தால்தான் முன்னேறும்.

சிறு கதையை ஒரு குட்டி நாவலாகச் செய்வது தவறு என்பது என் அபிப்பிராயம். வாழ்க்கையின் பலவித ரசங்களைத் தொகுத்து ஒரு பெரிய மனவிருந்தளிப்பது நாவலின் நோக்கம். காதலும், குடும்பமும், சரித்திரமும் அதன் முக்கிய விஷயங்களாவன. சிறு கதையோ சிற்றுண்டி போன்றது. ஒரு தனி உணர்ச்சியையோ, சம்பவத்தையோ கற்பனையையோ ஆதாரமாகக்கொண்டு எதிர்பாராததோர் ருசியை உண்டாக்குவதே அதன் ஸூக்ஷ்மம் என்று நினைக்கிறேன். தெருவில் போகும் பையனிடம் மாடியில் நிற்கும் பெண்ணுக்குக் காதலுண்டாக்கி, காகிதத்தில் கலியாணம் செய்துவிடுவது சுலபம். வாராவாரம் பல கதைகள் தேவையுள்ள பத்திராசிரியர்கள் இக் கதைகளை ஏற்றுப் பிரசுரிப்பதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை. ஆனால் வாழ்க்கையின் பெரிய சம்பவங்களிலிருந்தும் ஆழ்ந்த சிந்தனைகளிலிருந்தும் தோன்றும் சிறு கதைகளே உண்மையான கதைகளாவன. யுத்தத்தின் கொடுமைகளிலிருந்து தமிழ்நாடு தப்பியது பெரிய அதிர்ஷ்டம்தான். ஆனால் யுத்த சம்பவங்கள் சிறுகதைக் களஞ்சியமாகக் கூடும். யுத்தத்தில் பங்கெடுத்துக்கொண்ட தமிழர்களும், யுத்தப் பிரதேசங்களில் வசிக்க நேரிட்ட தமிழர்களும் தம் அனுபவங்களைச் சிறுகதை வாயிலாக வெளியிடக் கூடுமானால் அது தமிழ் மொழிக்குச் சிறந்த சேவையாகும். எனக்கு எழுதத் தெரியாதே என்று எவரும் கலங்கவேண்டாம். எழுதுவதற்கு விஷயமிருந்தால், தாய்ப்பாலுடன் உட்கொண்ட தமிழ்ச்சொல் பேனா முனையில் வந்து நிற்கும். பெரிய அனுபவங்களை அரைகுறையாகச் சொன்னாலும், குழந்தைகளின் மழலைபோல் இனிமை குன்றாது.

சிறு கதைகளில் கொச்சைப் பேச்சு உபயோகிக்கலாமா வென்பது மற்றோர் கேள்வி. நாடகத்தில் அது பொருந்தும் என்பதில் சந்தேகமில்லை. நீண்ட நாவல்களிலும் நகைச்சுவையைப் பெருக்க அது பயன்படலாம். ஆனால் சிறுகதையில் அதை உபயோகிப்பதால் அதன் சாரத்திலிருந்து மனம் கலைக்கப்பட்டுவிடுகிறதென்பது என் அபிப்பிராயம். பண்டிதர்களின் செந்தமிழோ, அற்புதச் சொற்றொடர் மலிந்த அலங்கார நடையோ சிறு கதைக்கு ஒவ்வாது. பாலர்களும் எளிதில் உணரும் தெள்ளிய வசனத்தில் எழுதவேண்டும். ஆனால் அழகிய தமிழைக் கெடுக்கும் கொச்சைச் சொற்களை உபயோகிக்கலாகாது. நமது கல்வி அதிகரிக்கும்பொழுது கதைகளைப் படிப்போரும் அதன் நடையைப் பின்பற்றி எழுதுவோரும் அதிகரிப்பர். ஆதலால் தமிழ் வளர்ச்சிக்கு இவ் விலக்கு முக்கியமாகும்.

# வெற்றிக்கோபுரம்

ஜயலக்ஷ்மி நரஸிம்மன்

வெற்றியடைந்த அன்னிய சேனை பாரத தேசத்துச்சரித்திரப் பிரசித்திபெற்ற தலை நகருக்குள் நுழைந்தது. மஹாராஷ்டிரரின் தலைமையின்கீழ் தேசீய சேனை பரிபூரணமான தோல்வி அடைந்தது. இப்பொழுது அஹ்மத்ஷா அப்தாலிக்கும், ஹிந்துஸ்தானத்து ஏகாதிபத்தியத்துக்கும் ஒன்றும் நடுவில் நிற்கவில்லை.

அஹ்மத்ஷா அப்தாலி திருப்தியுடன் ஹூக்காவைப் பிடித்துக்கொண்டு கூடாரத்தில் உட்கார்ந்திருந்தான். பொழுது சாயங்காலம். ஆனால் அவனுடைய பரிவாரத்தில் நிசப்தம் இல்லை. சிப்பாய்கள் நிராயுதபாணிகளான ஜனங்களிடமிருந்து வெற்றியின் வட்டியாக அவர்களிடமிருந்ததைப் பிடுங்குவதில் சுறுசுறுப்பாயிருந்தார்கள். அஹ்மத்ஷா மெத்தென்றிருக்கிற திண்டில் சாய்ந்தான். வாசனைப் புகை மேல்நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. பெரிய கனவாகிய காபுலிலிருந்து கல்கத்தாவரைக்கும், தெற்கில் கன்னியாகுமரி வரைக்கும் தன் ராஜ்ஜியம் நிலைப்பதைத் தன் மனதில் எண்ணிப்பார்த்தான்.

அவனுடைய காவல்காரன் அவன் முன்னிலையில் வந்து நின்று வணங்கி, "ஒரு சந்நியாசி தங்களுடன் பேச விரும்பிக் காத்துக்கொண்டிருக்கிறார்" என்றான்.

"சந்நியாசியா? நல்லது. அவரை உள்ளே அழைத்துவா. நமக்குப் பெரியோர்களுடன் பேசுவதில் எப்பொழுதும் சந்தோஷம்"

காவல்காரன் சென்று, மெலிந்த தாடியுடன் கூடிய வெள்ளை வஸ்திரம் தரித்த கிழவனுருடன் திரும்பிவந்தான். அவரைப் பார்த்தாலே மரியாதை தோன்றியது. அரசன் முன்னிலையில் வந்து அவர் அவனை ஆசீர்வதிப்பது போல் கைகளைத் தூக்கினார்.

"உட்காருங்கள்" என்று அஹ்மத்ஷா கர்வம் தொனிக்கும் குரலில் கூறினான். "நீர் எங்களைச் சேர்ந்தவரா?"

"இல்லை ராஜாதிராஜனே! நான் ஹிந்துஸ்தானத்தைச் சேர்ந்தவன். அங்கேயே பிறந்து வளர்ந்தவன்"

"உங்களுடைய வயதென்ன?"

"ஔரங்கஸீப் என்னுடைய முப்பத்தைந்தாவது வயதில் இறந்தார்" என்று சந்நியாசி விடை பகர்ந்தார்.

"உங்களுக்குளெங்களுடைய முன்னோர் நாதிர்ஷாவை ஞாபகம் இருக்கிறதா?" என்று அரசன் கேட்டான்.

"அவரைப்பற்றி எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. அவருடைய தீரச்செயல்கள் நேற்று நடந்தவைபோல் என் நினைவில் இருக்கின்றன"

"ஆ பெரியவரே, உண்மையைச் சொல்லுங்கள். எங்கள் மூவரில் யார் பெரிய பராக்கிரமசாலி."

சந்நியாசி சிறிதுநேரம் யோசித்துச் சொன்னார். "ராஜனே, பதில் சொல்லுவதற்குக் கஷ்டமான கேள்வி. எவனின் தீரச்செயல்கள் ஜனங்களின் மனதில் பதிந்திருக்கின்றனவோ, அவர்கள் நினைவில் வெகுநாள் இருக்கின்றனவோ, அவன்தான் பெரிய பராக்கிரமசாலி, நீங்கள் மூவரும் பராக்கிரமசாலிகள். காலம்தான் யார் பெரிய வீரன் என்று நிச்சயிக்கும். உங்களுக்கு இஷ்டமிருந்தால், நான் புராணத்தில் படித்த தீரனைப்பற்றிச் சொல்லுகிறேன். அவன் வீரசுல்தான். அவன் மலைகளிலிருந்து பெருஞ்சேனையோடு வந்தான். ஒரு வருட முழுவதும்—"

"ஒரு கதையா? நல்லது. நாம் கொஞ்சநாட்களாக அதிக வேலை செய்கிறோம். ஒரு நல்ல கதை வரவேற்கத்தகுந்தது. ஆரம்பிக்கலாம்" சுல்தான் திண்டில்மேல் இன்னும் சுகமாகச் சாய்ந்துகொண்டான்.

சந்நியாசி திரும்பி ஆரம்பித்தார். "ஒரு வருஷ முழுதும் அவன் சத்ருக்களை ஹிம்சித்து ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்று, மீதியுள்ளவர்களை மலைக்காற்றின்முன் உமியைப் போல் சிதற அடித்தான். சமுத்திரத்திலிருந்து சமுத்திரம் வரைக்கும் தேச முழுவதும் அவன் காலடியில் விழுந்தது. அவனுடைய இரவுகள் எரிகின்ற கிராமங்களின் வெளிச்சத்தினால் பகலாயின; அவனுடைய சிப்பாய்களின் பாதங்கள் ஜனங்களுடைய ரத்தத்தினால் சிவப்பாயின. பல ஊர்களைக் கொள்ளையடித்ததினால் அவன் தன் நாட்டிற்குத் திரும்பிப் போகும் பொழுது பத்தாயிரம் வண்டிகளும், பத்தாயிரம் ஒட்டகங்களும் அவன் கொள்ளைகளைத் தூக்கிக்கொண்டு போவதற்கும் போதவில்லை. ஆயிரக்கணக்கானவர்கள் சிறைப்பட்டனர். நூற்றுக்கணக்கான பெண்மணிகள் அவனுடைய அந்தப்புரத்துக்குக் கொண்டுபோகப் பட்டனர். பாடகர்கள் அவனுடைய பராக்கிரமத்தைப்பற்றிப் பாடினார்கள். கவிகள்

அவனைப்பற்றிக் கவிதைகள் கட்டினார்கள். ஜனங்கள் இம்மாதிரி வீரனை ஸிகந்தர் காலத்திற்குப் பிறகு பார்த்ததில்லை என்றார்கள்.

சுல்தான் தன் தலைநகருக்குத் திரும்பிவந்தான். அவன் கொண்டுவந்த அதிசயமான பொக்கிஷங்கள் தன் முன் குவிந்திருப்பதைப் பார்த்தான். ஹிந்துஸ்தானத்துத் திரவிய முழுதும் அவன் முன்னிலையில் குவிந்திருப்பது போல் இருந்தது. நன்றியோடு அவன் கடவுளை வணங்கினான்; துஷ்டர்களை நிக்ரகித்து உண்மையை நிலைநாட்டத் தன்னை ஓர் ஆயுதமாகத் தேர்ந்தெடுத்ததற்குக் கடவுளிடம் நன்றியினால் அவன் ஹிருதயம் வெடித்து விடும் போல் இருந்தது. பெரியோர்களினால்தான் விடக்கூடிய கண்ணீர் அவன் கன்னங்களில் வழிந்தோடிற்று. அவனுடைய அதரங்களுக்கு வந்த புகழ் பிரார்த்தனை முன்னால் சிரித்துக் கொண்டிருந்த பிரதேசங்களில் செய்யப்பட்ட வீரதீரச்செயல்களின் நினைவால் பாதியிலேயே நின்றுவிட்டது. ஒரு பெரிய தீர்மானம் அவன் மனதில் தோன்றியது. கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, சிற்பிகளின் தலைவனைத் தன்முன் கொண்டு வரக் கட்டளையிட்டான்.

சிற்பிகளின் தலைவன் அரசனின் கருணையினால் கொல்லாமல் விடப்பட்ட சிலபேர்களில் ஒருவன். ஸுல்தான் சண்டை வீரனாயிருந்தாலும் கலைகளிலும் சிற்பங்களிலும் ஆர்வங் கொண்டவன். ஒரு தேசத்தை ஜயித்தவுடன் கைதேர்ந்த வேலைக்காரர்களையும், அழகிய பெண்மணிகளையும் ஒன்றும் செய்யக்கூடாது என்று கட்டளையிட்டிருந்தான். ஆதலால் அவனுடைய அந்தப்புரத்தில் அழகும், சபையில் கவிதையும் கலைகளும் விளங்கின.

சிற்பித் தலைவனுடைய உயிர் சுல்தானின் கலை ஆசைக்குக் கடமைப்பட்டிருந்தது. ஆதலால் கூப்பிட்டனுப்பினவுடன் எழுந்தான். வருத்தத்தில் இருக்கும் தன் தோழர்களிடம் விடைபெற்றுக்கொண்டு ராஜதூதனைப் பின் தொடர்ந்தான்.

அவன் அரசன் முன்னிலையில் வந்ததும் சுல்தான் சொன்னான். 'நம் வெற்றியின் ஞாபகார்த்தமாக ஒரு ஜயக்கோபுரத்தைக்கட்ட வேண்டும். என்னுடைய ராஜதானியில் உன்னுடைய முழுத்திறத்தாலும், உன் கீழிருக்கும் வேலையாட்களின் திறத்தாலும் கட்டவேண்டும். செலவைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். நம்மிடம் ஹிந்துஸ்தானத்துச் செல்வமெல்லாம் கட்டுவதற்கு இருக்கிறது. அது முடிந்தவுடன் உலகமுழுதும் ஆச்சரியத்தினால் திகைத்து இம்மாதிரியான ஜயஸ்தம்பத்தை எந்த அரசனும் உலகம் ஆரம்பித்ததிலிருந்து நிறுவவில்லை என்று சொல்லவேண்டும்'

அரசனின் வாயிலிருந்து வந்த வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த சிற்பி நடுங்கினான். ஏனெனில் அரண்மனைக் காற்று சில்லென்று இருந்தது. அவனுக்குச் சமவெளியின் உஷ்ணம்தான் பழக்கமாயிருந்தது. அவன் பூமியைத் தன் தலையினால் மூன்றுதரம் தொட்டுச் சொன்னான். "உங்கள் புத்தி உங்கள் பராக்கிரமத்தைப்போன்றது. என்னிடம் கட்டுவதற்கு ஒப்படைக்கப்பட்டிருப்பதினால் என் ஹிருதயம் ஆனந்தத்தினால் பொங்குகிறது. இருந்தாலும் அரசனே, உங்களுடைய இராஜதானியில் கட்டுவதில் பிரயோசனமில்லை. நீங்கள் எப்பொழுதும் இங்கிருப்பதினால் உங்கள் மாஹாத்மியத்தை நினைவுபடுத்த வேறு என்னவேண்டும்? நீங்களே அதிசய ஜயஸ்தம்பம். உலகம் ஆரம்பித்ததிலிருந்தே உங்களுடைய வெற்றிக் கோபுரத்திற்கு ஹிந்துஸ்தான் சமவேளிதான் தகுந்த இடம். நீங்கள் திரும்பி வந்ததிலிருந்து அச்சமவெளியில் வசிக்கும் ஜனங்கள் உங்களைப் பார்க்க முடிவதில்லை, உங்கள் முகஜ்ஜோதி அவர்கள் மேல் பிரகாசிக்கவில்லை. மனிதர்களுக்கு ஞாபக சக்தி கொஞ்சம்தான். சில வருஷங்களுக்குள் அக்னியோடும், கத்தியோடும் வந்து போன வீரனைப்பற்றி மறந்துவிடுவார்கள். உங்கள் பலத்தையும், தீரத்தையும் பார்த்த பிரதேசத்தில் ஜயஸ்தம்பத்தை நாட்டவேண்டுமென்று கட்டளையிடுங்கள்.'

சிற்பியின் வார்த்தைகள் சுல்தானுக்குத் திருப்தியளித்தன. 'நீ சொல்வது சரி. என் வீரத்தின் பழங்களை ருசி பார்த்த துஷ்டர்களின் முன்னிலையில் கட்டு. இவ்வளவு நாட்கள் உலகம் பார்த்திராத அதிசயமாக இருக்கவேண்டும். இல்லாவிடில் உன்னைப் பிணமாக்குவேன்—' சுல்தான் எங்தெந்தச்சித் திரவதைக்குச் சிற்பி ஆளாவான் என்பதை விவரித்தான்.

சிற்பி வணங்கி, தன் நெற்றியினால் பூமியை மூன்றுதரம் தொட்டு, வெளிவாசல்வரை பின் நடந்து அரசன் முன்னிலையிலிருந்து அகன்றான்.

சிற்பித் தலைவனும், வேலையாட்களும் சமவெளிக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்கள். பணம், தங்கம், நகைகள், இவைகளை எடுத்துக்கொண்டு நூற்றுக்கணக்கான வண்டிகளும், ஒட்டகங்களும் சுல்தானின் ராஜதானியிலிருந்து தினமும் அனுப்பப்பட்டன. மாதங்கள் பல சென்றன. இன்னமும் கோபுரம் முடியவில்லை. சிற்பித் தலைவன் அதிதப் பணம் அனுப்பும்படி எழுதிக்கொண்டிருந்தான். வேலை சரிவர நடந்துகொண்டிருப்பதாகவும், ஜனங்கள் ஆச்சரியத்தில் மூழ்கியிருப்பதாகவும் எழுதினான். சுல்தான் பணம் அனுப்பிக் கொண்டே இருந்தான். கடைசியில் கொள்ளை அடித்த பொக்கிஷங்களெல்லாம் முடிவடைந்தன. பலகாலம் காத்திருந்த பிறகு ஞாபகச் சின்னம் கட்டி முடிந்தது என்ற செய்தி சுல்தானுக்கு எட்டியது. அதைப்பார்க்க ஹிந்துஸ்தான் சமவெளியை நோக்கித் தன் பரிவாரங்

களுடன் புறப்பட்டான். தான் படையெடுப்பதற்கு முன்பு எப்படி இருந்ததோ அப்படியே பச்சைப்பசேலென்று பூ, காய், கனிகளுடன் சிரித்துக்கொண்டிருக்கும் பிரதேசத்தைப் பார்த்தான்.

சுல்தான் சொன்னான். 'சிற்பி சொன்னது சரி. மனிதர்களுக்கு நினைவு குறைவுதான். அதற்குள் என் வெற்றிகளை மறந்து தங்களுடைய நித்திய வேலைகளாகிய உழுதல், பயிரிடுதல், அறுத்தல் இவைகளில் முனைந்துவிட்டார்கள். வீரன் வந்துபோன சுவடுகளே தெரியவில்லை.

சிற்பித் தலைவன் அரசன் முன்னிலையில் வந்து நின்றான்.

'எங்களை ஜயக்கோபுரத்திற்கு அழைத்துப் போ' என்று சுல்தான் கட்டளையிட்டான்.

'அரசனே, இங்கிருந்தே அதைக் கொஞ்சம் பார்க்கிறீர்கள். என்னுடன்கூட வந்தீர்களானால் அவ்வதிசயத்தை இன்னும் நன்றாகப் பார்க்கலாம். உங்களுடைய கண்களுக்குச் சந்தோஷத்தை அளிக்கும்' என்று சிற்பி பதிலுரைத்தான்.

சிற்பித் தலைவனால் அழைத்துக்கொண்டு போகப்பட்டு, அரசனும், அவன் ஜனங்களும் பிரயாணத்தைத் தொடங்கினார்கள். பல மைல்கள் சென்றார்கள். ஆனாலும் இன்னும் ஜயக் கோபுரத்தைப் பார்க்கவில்லை.

சுல்தான் ஆத்திரமடைந்தான். 'நாயே, கோபுரம் எங்கே? நாம் இவ்வளவு தூரம் வந்தும் இன்னும் தென்படவில்லையே.' என்று அதட்டினான்.

சிற்பித் தலைவன் வணங்கிச் சொன்னான். 'ராஜாதி ராஜனே! நீங்கள் அதைப்பார்த்துவிட்டீர்கள்.'

'பார்த்தாய்விட்டதா? எங்கே? எப்பொழுது? இதற்கு என்ன அர்த்தம்? 'சுல்தானின் கோபம் ஏறிக்கொண்டிருந்தது. அவனுடைய ஜனங்கள் பயத்தினால் நடுங்கினார்கள்.

சிற்பித்தலைவன் நடுங்கவுமில்லை, பயப்படவுமில்லை. அவன் வணக்கத்துடன் பதிலுரைத்தான். 'அரசனே! அதில் கொஞ்சம் பார்த்திருக்கிறீர்கள். நீங்கள் இன்னும் கொஞ்சம் போனால் மீதியிருப்பதையும் பார்ப்பீர்கள். உங்கள் வேலைக்காரன் ஜயஸ்தம்பத்தை நாட்டுவதற்குவந்தபொழுது ஜனங்களிடத்தில் உங்கள் வெற்றியின் செயல்கள் நிரம்பியிருப்பதைப் பார்த்தான். எரிந்த கிராமங்கள், நாசமான நகரங்கள், அழுகின பிணங்கள், தரிசானவயல்கள், பாழடைந்த வீடுகள், பசியினாலும், பிணியினாலும்- செத்த ஜனங்கள், பஞ்சமும் பிணியும் இவையெல்லாம் உங்களுடைய பலத்தையும் கீர்த்தியையும்பற்றிப் பேசின. கல்லும் சலவைக்கல்லும் இல்லாமலேயே உங்கள் வீரச்செயல்கள் பிரகாசிப்பதைப் பார்த்து உங்கள் வேலைக்காரனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அவன் யோசித்து, யோசித்து உங்கள் மாஹாத்மியத்துக்குத்தக்கவாறு வெற்றி ஞாபகார்த்தத்தைக் கண்டுபிடித்தான். நீங்கள் கொடுத்த பணத்தையும் தங்கத்தையும்கொண்டு வேலைசெய்வதற்கு ஆரம்பித்தார்கள். நகரங்களும் கிராமங்களும் வசிக்கக்கூடியவையாயின. வயல்கள் உழுவதற்குக் கொண்டுவரப்பட்டன. ரஸ்தாக்களும், கால்வாய்களும் சரிசெய்யப்பட்டன. பஞ்சமும் பிணியும் மறைந்தன. எப்பிரதேசமானது உங்களுடைய பலத்தினுடையவும் வெற்றியினுடையவும் சின்னங்களைத் தரித்ததோ அது இப்பொழுது உங்கள் கருணையையும், விசால புத்தியையும் நிரூபிக்கிறது. இதுதான் அதிசய
ஜயக்கோபுரம். இதைத்தான் உங்க
அழியாதிருக்கும்படி உங்களுடை
காரன் அதிமகிழ்ச்சியுடன் க
அரசனும், உலகம் ஆரம்பித்
நினைத்ததில்லை'

இதற்குமேல் சரித்திரக்
சப்படுகிறார்கள். சிலர்
தலைவனையும், அவன் கீழ்
யும் சித்ரவதை செய்து
சொல்லுகிறார்கள். ஆனா
ஆதாரங்களின்மேல் ப
சொல்லுகிறார்கள். அ
வது, சிற்பத் தலைவனின் பேச்சைக் கேட்டு சுல்தான் மண்டியிட்டுக் கடவுளை வணங்கி இப்படியான ஜயஸ்தம்பம் நாட்டப்பட்டதற்காக ஆனந்தமடைந்தான். எல்லா ஜனங்களும் சிகந்தர் காலத்திலிருந்து இப்படிப்பட்ட வீரன் இருந்ததில்லை என்று புகழ்ந்து பாடினார்கள்'' என்று.

சந்நியாசி நிறுத்தினார். அஹ்மத்ஷா தன் தாடியைத் தடவிக்கொண்டு கொஞ்சநேரம் மௌனமாயிருந்தான். பிறகு சொன்னான். ''சந்நியாசியே நீர் தைரியசாலி. உங்கள் கட்டுக்கதை நம்மைக் குறித்தே சொல்லப்பட்டது. அதனுடைய நீதி நன்றாகத் தெரிகிறது. 'சேனையின் வெற்றி உண்மை வெற்றியல்ல, ஆத்ம வெற்றிதான் நித்தியமானது என்று. இப்பொழுது நான் இனிமேல் கொள்ளையடிக்கக் கூடாது, கொள்ளையடித்தவைகளைத் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று கட்டளையிட்டால் நீங்கள் என்ன நினைப்பீர்கள்? இப்படிச் செய்தால் ஜனங்களுடைய நினைவில் இருப்பேனா?''

''இப்படிச் செய்தால் சந்தேகமில்லாமல் உங்களைத்தான் அரசர்களில் மேன்மையானவன் என்பார்கள். கோடிக்கணக்கானவர்கள் உங்கள் பெயரை ஆசீர்வதிப்பார்கள். இப்பொழுது அழுகையும், நாசமும் குடிகொண்டிருக்கும் கணக்கிட முடியாத வீடுகளில் நம்பிக்கையும், சந்தோஷமும் நுழையும். வெற்றிக் காலத்தில்கூட கருணையை மறக்காத

வேந்தன் என்று உங்கள் பெயர் அழியாப்புகழ் அடையும்.''

அஹ்மத்ஷா சத்தமாக வெகுநேரம் சிரித்தான். கர்ணகடூரமாக இருந்தது. ''சந்நியாசி! எங்கள் கத்திகளின் பலத்தினால் அடைந்ததைத் திருப்பிக்கொடுக்க என்னை முட்டாளென்று நினைத்துக்கொண்டீரோ? எதற்காக? உலகம் பார்த்துச் சிரிக்கவா? எனக்கு இந்த இந்த ஆசை கிடையாது. ஆ, ஆயிரக்கணக்கானவர்கள் நம் பெயரை ஆசீர்வதிப்பார்களா? அவர்களுடைய ஆசீர்வாதமும், அன்பும், நமக்கு வேண்டியதில்லை. என் பெயரைக் கேட்டமாத்திரத்தில் அவர்கள் நடுங்கவேண்டும். நம்மைப்போன்ற வீரனுக்கு அவர்கள் பயமே சரியான கப்பம். நாம் இங்கு ஏன்
[illegible] கிறோம் என்று தெரியுமா? இது தெய்
[illegible] மட்டாள்களாகிய மஹாராஷ்டி
[illegible] கியர்கள், ரஜபுத்திரர்கள் தங்
[illegible] யிட்டுக்கொண்டு அன்
[illegible] வதற்கு இடம் கொடுக்கி
[illegible] ரி கடவுளினால் கொடுக்கப்
[illegible] முடியுமா? நாம் கடவு
[illegible] கள். விதியின் ஏவலைத்
[illegible]

[illegible] ய ஆசை வெறியினால்
[illegible] லாத கஷ்டங்களைச்
[illegible] ஆனால் வெற்றி என்ற
[illegible] வ உண்டவனுக்கு அறிவு எப்படி இருக்கும். சந்நியாசி தம் வார்த்தைகளினால் சிறிதும் பிரயோசனம் இல்லை என்று கண்டு மௌனமானார்.

அஹ்மத்ஷா திரும்பியும் சொன்னான். ''எல்லாம் விதியின் கூத்து. விதியை எதிர்க்க யாரால் முடியும்?''

காவல்காரன் பரபரப்புடன் உள்ளே நுழைந்து சொன்னான், ''அரசே, நம் சேனை கலகம் செய்கிறது.''

''விதி, விதியைவெல்ல யாரால் முடியும்'' என்று சந்நியாசியின் குரல்கேட்டது.

''கலவரமா? என்னுடைய சேனையிலா?'' அஹ்மத்ஷா ஹுக்காவைக் கீழேவைத்தான். ''சேனாதிபதியை இதற்குக் காரணமாயிருந்தவர்களைச் சுட்டுவிடச்சொல்,'' என்று கட்டளை இட்டான்.

''இதனால் அடக்கமுடியாது, முழுச்சேனையும் கலகம் செய்கிறது.''

''விதி. எல்லாம் விதி,'' என்று மறுபடியும் சந்நியாசியின் குரல் தூரத்து எதிரொலிபோல் வந்தது.

''ஏன்? அவர்களின் குறை என்ன?'' என்று சுல்தான் வினவினான்.

''நீங்கள் கொள்ளையடித்தவைகளைத்திருப்பித் தரவேண்டுமென்று கட்டளையிட்டீர்களென்று அவர்கள் சொல்லுகிறார்கள்'' என்று காவல்காரன் விடை பகர்ந்தான்.

''இப்படி யார் பொய்க்கதை கட்டிவிடுகிறார்கள். அவர்களை இப்பொழுதே கொண்டுவா. நாம்—''

''அவர்கள் நீங்கள் இப்பொழுது சொல்லியதாகச் சொல்லுகிறார்கள். வெளிக்கூடாரத்தில் சிலர் நீங்கள் சந்நியாசியிடம் சொன்னதை ஒற்றுக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.''

''என்ன, நாம் வேடிக்கை செய்யக்கூடாதா? உடனே உண்மையென்று கருதிவிடுவதா? அவர்களுடைய நாக்குக்களை வெட்டிவிடுகிறேன். நாம்வேடிக்கையாகச் சந்நியாசியோடு பேசிக்கொண்டிருந்தோம். அவன் எங்கே? அவனைக் கொண்டுவா. அவன்தான் இதற்குக் காரணம். அவனைத் தூக்கிவிடுகிறேன்.''

சுல்தான் கேட்டான், அல்லது கேட்டதாக நினைத்தான். தன்னுடைய உத்தரவுக்குப்பதிலாக ஒரு தூரத்துச் சிரிப்பு, அச்சிரிப்பில், ''விதி'' எல்லாம் விதிஎன்று தொனித்தது.

கலகத்தின் சப்தம் அரசன் கூடாரத்து அருகில் வந்துவிட்டது. அஹ்மத்ஷா எழுந்து கத்தியைக் கையில் பிடித்துக்கொண்டு கூடாரத்தை விட்டு வெளியே வந்தான். காவல்காரன் பொய் சொல்லவில்லை. சேனை வீரர்கள் அத்தனை பேரும் கலகத்தில் சேர்ந்திருந்தார்கள். அதெல்லாம் பொய் அந்த எண்ணமே அவனுக்குக் கிடையாது என்று சொல்லி அவர்களின் பயத்தைத் தெளிவிப்பதற்கு மிகவும் அஹ்மத்ஷாவுக்குக் கஷ்டமாகிவிட்டது. கடைசியில் அமைதி நிலவியது. ஆனால் சேஷ்டை செய்யப்பட்டுவிட்டது. பிறகு என்ன நடந்தது என்று சரித்திரக்காரர்களுக்குத் தெரியும், தம் தாய் நாட்டிற்குப் போகவேண்டுமென்று சேனை வீரர்கள் பிடிவாதம் பிடித்தார்கள். அஹ்மத்ஷா அவர்களுடைய இஷ்டத்திற்கு இணங்கவேண்டியதாயிற்று.

சந்நியாசியைப் பற்றி ஒன்றும் கேள்விப்படவில்லை. அவர் எங்கிருந்து, எப்பொழுது வந்தார் என்று யாருக்கும் தெரியாது. பவானி தேவியே சந்நியாசி ரூபத்தில் வந்து தேசத்தைக் காப்பாற்றினாள் என்று மஹாராஷ்டிரர்கள் நம்புகிறார்கள். ஆனால் ஒன்றுமாத்திரம் நிச்சயம். அதிசய சந்நியாசியினால்தான் இந்தியா இன்னுமோர் அந்நிய ஆட்சியிலிருந்து தப்பியது.

# மனை வழக்கு

பூவாளூர் சுந்தரராமன்

வடமலையின் குடிசையையும் அதைச் சுற்றியிருக்கும் தோட்டத்தையும் பார்க்கும் பொழுதெல்லாம் கங்காணி கார்மேகம் பிள்ளைக்குக் கண்ணில் துரும்பு விழுந்த மாதிரி கரித்துக்கொண்டிருந்தது. தள்ளாத வயதில் தன் மனைவி இறந்த துக்கத்தை அந்தத் தோட்டத்தையும், அதற்குத் தண்ணீர் இறைத்துக் கொட்டும் தன் மகள் அஞ்சலையையும் பார்த்துத்தான் வடமலை மறந்திருந்தான். ஊரில் எந்த இடத்தில் விழுந்த சாணியும் சாம்பலும் இவன் தோட்டத்திற்கு வருவது தவறாது; அதனாலே தோட்டத்தின் செழுமைக்கோ, செழுமை பிறருடைய பொறாமையைக் கிளப்பினதற்கோ ஆச்சர்யப்படத்தேவையில்லை.

கங்காணி நாலு வருஷங்களுக்கு முன் அக்கரைச் சீமையிலிருந்து வந்து சேர்ந்தான். அதற்குள் ஊரில் நில புலன்களை வாங்க ஆரம்பித்து, இன்று அந்த ஊரிலேயே பெரிய மிராசாகவும், ரொக்கப்புள்ளி புரளுகிறகையாகவும் இருந்தான்; தான் குடியிருந்த தெருவிலும் ஒவ்வொரு மனையாக வாங்கிவிட்டான். இவ்வாறு அவனுடைய ஆதீனத்திற்கு உட்பட்ட மனைகளுக்கு நடுவில்தான் வடமலையின் குடிசைத்தோட்டம் இருந்தது. அதையும் வாங்கிவிட்டால் தன் வீட்டை அடுத்து ஒரே சதுக்கமாக இருக்கும் என்ற எண்ணத்துடன் கங்காணி வடமலையிடம் நேரடியாகவும் மறைமுகமாகத் தரகு ஆட்களை வைத்துப் பேரம் பேசிப் பார்த்தும் கூட வடமலை அதை விற்கச் சம்மதிக்கவில்லை. கங்காணி வேறு இடத்தில் அதேமாதிரி மனை ஒன்றுக்கு இரண்டாகக் கொடுப்பதாகச் சொல்லியும் வடமலையின் மனது மாறவில்லை.

வடமலையின் மனது மாறாததற்குக் காரணம் இல்லாமலும் இல்லை. வடமலை பரம்பரை ஏழைக்குடி அல்ல, இரண்டு தலைமுறைகளுக்கு முன்னால் ஊரில் நல்ல செல்வாக்கான பண்ணையுடன் வாழ்ந்தவர்கள்; கால மாறுபாட்டால் வடமலையின் குடும்பம் நலிந்துவிட்டது. கடைசியில் வடமலைக்கு அந்தக் கிராமத்தில் சமுதாயப் பங்குக்கு அத்தாட்சியாக மீந்தது அந்தத் தோட்டம் தான். எனவே அது தன் பிதிரார்ஜித சொத்து என்ற பாசத்துடனும் தன் முன்னோர்கள் ஒரு காலத்தில் திருடர் பயத்திற்காகத் தங்களுடைய ஆஸ்தியை அந்த மனைக்குள் எங்கோ புதைத்து இருக்கிறார்கள் என்ற வதந்தியைப் பலமாக நம்பிக்கொண்டும் தான் வடமலை அதை விற்கச் சம்மதிக்க வில்லை.

ஆனால் கங்காணி எதன் மீதாவது மனது வைத்துவிட்டால் அவ்வளவுதான், கிழக்கே உதிக்கிற சூரியன் மேற்கே உதித்தாலும் அவனுடைய மனம் அதை விட்டு மாறாது என்பது யாவருக்கும் தெரியும். நாள் தவறாமல் தன் வீட்டுப் புறக்கடையிலிருந்து பார்க்கும் பொழுது வடமலையின் தோட்டம் அவனுடைய கண்ணில் விழத்தவறுவதில்லை. முள் வேலிகளைத் தள்ளிக்கொண்டு, புதர்போலத் தளதளவென்று கிளம்பும் காய்கறிச்செடிகள், ஒருநாள் தன்னுடைய மனையையும் ஆக்ரமித்துக் கொண்டேவிடும் என்று நினைத்துக் கலங்கிப் பெருமூச்சுவிடுவான்.

தன்னுடைய சாமதான பேத முறைகளால் வடமலையினுடைய தோட்டத்தை வாங்க முடியாமல் போகவே, கடைசியில் கங்காணி 'கோர்ட்' மூல்யமாக அதை அடைய வழிதேடினான். இத்தனை வருஷகாலமாகக் கங்காணி எவ்வளவோ 'கொடுத்தல் வாங்கல்' கள் செய்திருக்கிறான். ஆனால் மழைக்குக்கூடக் 'கோர்ட்' டில் ஒண்டிக்கொண்டது கிடையாது. வக்கீல் என்பவர் பணத்தைக் கரைக்கும் ஒரு வஸ்து என்பது அவனுடைய தீர்மானம். கங்காணி இந்த உலகில் அஞ்சக்கூடியவர் எவராவது இருந்தால் அது (கடவுள் கூட இல்லை!) வக்கீல் ஒருவர் தான்! ஆனால் இப்பொழுது விஷயமே வேறு; வக்கீலைக்கண்டு பயப்படவோ பணத்தைச் செலவழிக்கப் பின்வாங்கவோ இதுவா சமயம்?

— 2 —

கங்காணி வெகு நிதானத்துடன் ஆலோசித்தான்; வக்கீல் ராவ்பகதூரிடம் சென்றான்; விஷயத்தைப் பூராவும் சொன்னான். ராவ்பகதூர் லேசுப்பட்டவரல்ல; வக்கீல் ஞானத்தை விட கட்சிக்காரர்களின் மன நிலைமையைக் கரைத்துக் குடித்தவர். கங்காணியின் பதட்டமில்லாத பேச்சிலிருந்தே இது ஒரு பெரியகை என்று சுலபமாகத் தெரிந்து கொண்டுவிட்டார்.

'உம்... பிள்ளைவாள்! அவனுடைய மனை உங்கள் கைக்கு வந்து சேர வேண்டும். அது தானே உங்கள் எண்ணம்?' என்றார் மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கொண்டே.

'ஆமாங்க... சரியாக சொல்லிட்டிங்களே' என்று முகத்தில் அசடுவழியச் சிரித்தான் கங்காணி.

'இந்தக்காலத்தில் ஒத்தர் உடைமையை ஒத்தர் எப்படி அடையமுடியும்?'

'அதுக்குத் தானே 'கோர்ட்'டுக்கு வந்தேன்' வக்கீலினுடைய சட்டஞானம் கங்காணியிடத்தில் தோற்று விட்டது!

‘என்ன செய்யணும்?......’

‘வடமலையினுடைய தோட்டத்திலே எனக்கு ஐந்தடி ‘அத்து’ இருக்கிறது என்று வழக்குத் தொடுக்கிறேன்.

ராவ்பகதூர் கங்காணியின் உட்கிடக்கையைக் கண்டுகொண்டுவிட்டார். வீண் வலுச் சண்டை இழுத்து வடமலையை அந்த இடத்தை விற்கக் கங்காணி வழிகோலுகிறான் என்பது அவருக்குப் புலப்பட்டது.

‘ஆமாம், அதற்கு ஆதாரங்கள் இருக்கா?’ என்று வக்கீல் சந்தேகத்துடன் கேட்டார்.

‘எல்லாம் உண்டாக்கிக் கொண்டால் போவுது!’ என்று தைர்யமான சமாதானம் சொன்னான் கங்காணி.

— 3 —

விவகாரம் கோர்ட்டிற்குப் போயிற்று. கங்காணி சாட்சிகளைத் தயாரித்தான். சம்மன்கள் பறந்தன. கண்டியிலிருந்து தன் மகன் நல்லமுத்து வருவதற்குள் வடமலையைக் கிளப்பி விடுவதாக எல்லாரிடமும் சபதம் கூறினான்.

ஆனால் கங்காணி உள்ளூரப் பயந்தபடியே ‘கேஸ்’ சுலபத்தில் முடியவில்லை. மூன்று வருஷங்கள் முடிந்தும் ‘கேஸ்’ விசாரணைக்கே வரவில்லை. வடமலைக்கும் பாரிச வாயு கண்டு விட்டது. அதனால் அவன் கோர்ட்டிற்கு அடிக்கடி போகமுடியவில்லை. கடைசியாக நாலாவது வருஷக் கடைசியில் கேஸ் கங்காணி பக்கம் திர்ப்பு ஆயிற்று.

சந்தோஷ சமாசாரமே தனித்து வருவதில்லை! கேஸ் ஜயித்த சந்தோஷத்தை நன்றாக அநுபவிக்க முடியாதபடி கங்காணியினுடைய மனைவியின் மரணம் செய்துவிட்டது. ஒரு உரிமை வர, மற்றொன்று பறிபோயிற்று. ஊரில் உள்ளவர்கள் பலவிதமாகப் பேசிக்டார்கள். வீணாகக் கோர்ட்டுக்குப் போய் அநியாயமாக வடமலையின் சொத்தை அபகரித்துக்கொண்டது சுவாமிக்கே அடுக்கவில்லை. என்பது ஊராருடைய எண்ணம். தாயின் சடங்குகளுக்காகக் கண்டியிலிருந்து நல்லமுத்து வந்திருந்தான். தன்னுடைய தகப்பனாரின் கோர்ட் விவகாரங்களையெல்லாம் கேள்விப்பட்டான். ஊரார் அவனுடைய தாயாரின் மரணத்தைப்பற்றிப் பரப்பும் வதந்திகளும் அவன் காதிற்கு எட்டின. அதனால் அவனுடைய மனம் கலவரமடைந்திருந்தது. உண்மையில் தன் தகப்பன் நடத்தும் ‘அடாவழக்கு’ அவனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை; அதே சமயத்தில் தன் தகப்பனிடம் தன் அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்ளவும் தைர்யமில்லை.

— 4 —

நல்லமுத்து களத்துமேட்டுக்கு ஏரிகரையின்மீது போய்க்கொண்டிருந்தான். படித்


பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷங்காலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு

துறையில் சில பெண்டிர்கள் தன் குடும்ப சம்பந்தமாகப் பேசுவது அவனுடைய காதில் விழுந்தது.

'ஹூம்...... பணமிருந்தால் எதுவேணுமானு லும் நடக்குமடீ! அம்மா, இந்தக் காலத்தில்...'

'இதையெல்லாம் தெய்வம் கேட்காமல் இருக்காதடீ!'

'அதான் பாரேன்! அநியாயமாக ஏழையின் வயிற்றெரிச்சலைக் கொட்டிண்டதற்கு குண்டு மாதிரியிருந்த பொண்டாட்டியைச் சாகக் கொடுத்தான்......'

'இனிமேல் என்னடி செய்யப்போறே, அஞ்சலை?'

'நான் என்ன அம்மா செய்ய இருக்கிறது? என் அப்பன்தான் தன் மூச்சு இருக்கிறவரையிலும் தன் நிலத்திலே நூலிழை கொடுக்க மாட்டேன்னு போராடிக் கொண்டிருக்கு.........'

நல்லமுத்துவுக்குத் தன் எதிரி வார்சான அஞ்சலையைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை அப்பொழுதுதான் பூர்த்தி ஆயிற்று. சோகமும் கோபமும் கலந்த தோற்றத்துடன் அஞ்சலை நின்றுகொண்டிருந்த காட்சி அவனுக்குப் பெரும் வியப்பை அளித்தது. வேலை செய்து வலிவு பெற்ற அவளுடைய அவயவங்களைத் தோல் போல ஒட்டிக்கொண்டிருந்த ஈரப்புடைவை—அவளுடைய அழகை—அதிகரிக்கத்தான் செய்தது. தன்னுடைய தகப்பன் வடமலையுடன் சிநேகமாகவே இருந்திருக்கக் கூடாதா என்று நல்லமுத்து நினைத்துப் புழுங்கினான். இரு குடும்பத்தாரும் சிநேகமாக இருந்திருந்தால்.........இரண்டு குடும்பங்களுக்கும் சம்பந்தம்; அழகான கிளி போன்ற அஞ்சலையை மனைவியாக அடைந்திருக்கலாம்; தன் தகப்பனாரின் பொருமைக் கனலைக் கிளப்பின தோட்டம் தன் குடும்பத்திற்கே வந்திருக்கும்; தன் தாயார் இறந்திருக்கமாட்டாள்......ஒரு வேளை வடமலையின் புதையல்கூட கிடைத்திருக்கும்!

இந்தமாதிரி எண்ணங்கள் வலுக்க வலுக்க நல்லமுத்துவுக்குத் தன் தகப்பனைப் பார்க்கக்கூட இஷ்டமில்லை. கார்மேகம் பிள்ளை தன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு தன் நண்பர்களுடன் வெற்றிலைப்பாக்கை வாயில் குதப்பிக்கொண்டே 'கங்காணியை என்னமோனு நினைச்சுட்டானே, இந்த கிழப்பயல்!' என்று விருப்புப் பேசும்பொழுதெல்லாம் அதை நல்லமுத்துவால் காது கொண்டு கேட்க முடியவில்லை.

அன்று இரவு நல்லமுத்து தைர்யமாகவே தன் தகப்பனிடம் நீங்கள் நடத்தும் இந்த 'கோர்ட்' விவகாரத்தைப்பற்றி ஊரிலே என்ன பேசிக்கொள்ளுகிருர்கள் தெரியுமா?' என்று கேட்டான்.

'என்னடா பேசிப்பாக? ஒருத்தன் நல்ல வேட்டி கட்டிக்கிட்டா அதைக்கண்டு வயிறு எரிந்து சாவான்க; அதைப் போய் பெரிசா நினைக்கிறியே?'

'நியாயமாகவே நமக்கு அடுத்த மனையிலே என்ன பாத்யதை இருக்கு? நாம்ப செய்யறது சுவாமிக்கு அடுக்குமானு யோசிக்கவேண்டாமா?'

கங்காணிக்குக் கோபம் வந்துவிட்டது.

'நீ எனக்குப் பிள்ளைதானே? இதைப்பத்தி உன்னை நியாயம் கேட்கிறபோது சொல்லு' என்று எழுந்து சென்று விட்டான்.

கங்காணிக்கு வேறொருபக்கம் பயம் ஏற்பட்டது. எங்கு தன் மகனே இந்த மனை விவகாரத்தில் தனக்கு விரோதமாகக் கிளம்பி விடப்போகிறானோ என்ற பயத்தால் நிலத்தைச் சீக்கிரத்திலேயே சுவாதீனப் படுத்த ஏற்பாடுகள் செய்தான்.

5

அன்றுதான் மனையை ஸ்வாதீனப்படுத்தக் குறிப்பிட்ட நாள். பொழுது விடிந்ததுமே வடமலையின் குடிசைக்கு வெளியே வேடிக்கை பார்க்க ஊர்முழுவதும் கூடியிருந்தது. வடமலை கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தபடியே கடவுள், நியாயஸ்தலம், மனிதர்கள் யாவற்றையும் வைதுகொண்டிருந்தான். ஆத்திரத்தால் அவனுடைய உடம்பு ஆடிக்கொண்டிருந்தது. வாயிலிருந்து சொற்கள்கூடத் தெளிவாக வரவில்லை.

கடைசியில் கங்காணியினுடைய வேலையாட்கள், யமகிங்கரர்களைப் போல, இடுப்புத் துணியை வரிந்து கட்டிக் கொண்டு தங்களுடைய வேலையை ஆரம்பித்தார்கள். வடமலையின் மனையில் கங்காணியின் வீட்டின்பக்கமாக ஐந்தடிக்குளல்லைகோலி அஸ்திவாரம்தோண்ட ஆரம்பித்தார்கள். இதுகாறும் கண்போல வளர்த்து வந்த செடிகளைக் காலால் மிதித்து மண்வெட்டியால் வெட்டி எறிந்தபொழுது வடமலையால் அதைப்பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. இரு விழிகளிலும் கண்ணீர் சோர, நடுக்கம் கண்ட கையில் தடியை எடுத்துக்கொண்டு, தள்ளாடி விழுந்துகொண்டே அந்த வேலையாட்களைத் தடுக்க வந்தான். 'ஏன் கிழவா, சும்மா கத்தறே? சக்தியிருந்தால் கோர்ட்டிலே போய் பார்த்துக்கயேன்' என்று ஒரு வேலைக்காரன் வடமலையை இளக்காரமாகச் சொன்னதும் வடமலை தன் கையிலிருந்த தடியை ஓங்கினான். அதற்குள் அந்த வேலைக்காரன் வடமலையைப் பிடித்துக் கீழே தள்ளிவிட்டான். அருகிலேயே பெண் புலிபோலக் குமுறிக்கொண்டிருக்கும் அஞ்சலை அடுத்த நிமிஷம் பக்கத்தில் இருந்த ஒரு பந்தல் காலைப் பிடுங்கி அந்த வேலைக்காரனை ஓங்கி அடித்தாள். ஆனால் கீழே விழுந்த வடமலையைத் தூக்க ஓடி வந்த நல்லமுத்துவின் தலையில் அந்த அடி பலமாக விழுந்தது. ரத்தம் பீரிட்டு அடிக்க, நல்லமுத்து அப்படியே கீழே சாய்ந்துவிட்டான், இது வரையிலும்



உங்கள் கூந்தலைக் காப்பாற்ற

மூலமந்திரம்

உங்கள் கூந்தலைக் காப்பாற்றுவது உங்கள் கையிலேதான் இருக்கிறது......மிகவும் எளிதான முறை, ஆயினும் உங்கள் கூந்தலை இயற்கையாக வளர உதவியளித்து, அதன் அழகைக் காக்கும் தன்மை வாய்ந்தது. ஒரு பாட்டில்

## காமினியா ஆயில்

(ரிஜிஸ்டர்டு)

இந்த வித்தையைச் செய்யும். ஒருமுறை உபயோகித்தால் மறக்கமுடியாது. அதன் நிகரற்ற மணம் அதைத் தேடிச்செல்லத் தூண்டும்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். ஒரு அணு தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

## ஆட்டோ டில்பகார்

(ரிஜிஸ்டர்டு)

மணங்களுக்குள் தலைசிறந்த அரசன். இதன் வசீகர மணம் நிகரற்றது. மதுசார சம்பந்த மற்றது.

### எங்கும் கிடைக்கும்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம், 2 அணு தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்,

சோல் ஏஜண்டுகள் :

### ஆங்கிலோ - இந்தியன் டிரக் & கெமிகல் கம்பெனி,

பம்பாய்—2


வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றவர்களும் வேலைக்காரர்களும் கூட பயந்து அசையாமல் நின்றுவிட்டனர்.

வீட்டுத் திண்ணையிலேயே ஒய்யாரமாக உட்கார்ந்துகொண்டு அமுல் நடத்தின கங்காணிக்கு அந்தச் சமாசாரம் தெரிந்ததும் "விட்டேனுபார், அந்த சிறுக்கியை" என்று ஓடி வந்தான். ஓடி வந்தவன், தன் கண்களையே நம்பாமல் அப்படியே நின்றுவிட்டான். நல்லமுத்துவின் தலை அஞ்சலையின் மடியில் இருந்தது. அவள் தன் சேலைத் தலைப்பால் அவன் தலையிலிருந்து ரத்தம் பெருகாதபடி அமிழ்த்திக்கொண்டிருந்தாள். 'ஐயோ, கடவுளே! உனக்குக்கூடவா கண்ணில்லை? நான் அந்த வேலைக்காரனை அடித்த அடி இவர் தலையிலா விழவேண்டும்?' என்று அழுதுகொண்டிருந்தாள்.

கங்காணி அருகில் வருவதற்கும், நல்லமுத்துக்குச் சுய ஞாபகம் வந்து கண் விழிப்பதற்கும் சரியாக இருந்தது. தன் தகப்பனை அருகில் கூப்பிட்டு 'வீணாக விவகாரத்தை அதிகப்படுத்தாதீர்கள்? நம்ம கையே நம்ம கண்ணை வேணும்னு குத்தும்?' என்று சொன்னபொழுதுதான் கங்காணிக்கு விஷயம் புரிந்தது. ஆனால் மேலே மனை விவகாரத்தை எப்படி நடத்துவது என்றுதான் புலப்படவில்லை.

திடீரென்று ஒரு மூலையில் இருந்து 'சாமீ, இங்கே வாங்க, ஓடிவாங்க' என்று ஒரு வேலைக்காரன் சத்தமிட்டுக் கூப்பிட்டது கேட்டது. யாவரும் அஞ்சலையையும் நல்லமுத்துவையும் அப்படியே தனியாகவிட்டு வேலைக்காரனிடம் ஓடினர்.

அங்கே இரண்டு தலைமுறைகளாகப் பூதேவியிடம் அடைக்கலமாக இருந்த வடமலையின் குடும்பத்துப் புதையல் அகப்பட்டிருந்தது.

இந்த நல்ல விஷயத்தை நல்லமுத்துவினிடம் சொல்லவந்தபொழுது நல்லமுத்துவும் அஞ்சலையும் விஷமச் சிரிப்புப்பொங்கப் பேசிக்கொண்டிருந்தது எல்லோருக்கும் ஆச்சரியமாகவிருந்தது.

'நீங்க என்னை மன்னிப்பீங்களா? நான் வேணும்னு உங்க தலையிலே போடல்லே!...' என்றாள் அஞ்சலை.

'நீதான் எங்களை மன்னிக்கணும் அஞ்சலை! நாங்க உங்களுக்கு இவ்வளவு கஷ்டம் கொடுத்தூட்டமே......!' என்றான் நல்லமுத்து.

அப்பொழுது இருவர் முன்னிலையிலும் புதையல் குடத்தை வைத்தபொழுது ஒரு கிழவன் 'ஸ்திரீதனம் கூடவர்ரது' என்று சொல்லிவிட்டுச் சிரித்தான்.

வடமலையினிடத்தில் அஞ்சலையும் நல்லமுத்துவும் புதையலை எடுத்துக்கொண்டுபோனபொழுது, 'தம்பி! என் பெண்ணையும் பொன்னையும் உன்னிடத்தில் கொடுத்துவிட்டேன். பத்திரமாகப்பார்த்துக் கொள்!' என்று சொல்லி ஆசீர்வதித்தான்.

# கலைத்தெய்வம்

கௌரி

காலை நேரம். பறவை இனங்கள் மரங்களின் மீது ஊசலாடிய வண்ணம் இன்னிசைக் கீதங்கள் இசைத்துக்கொண்டிருந்தன. மனோகரமாய் இளங்காற்று நறுமணத்துடன் வீசிக்கொண்டிருந்தது. நந்தவனத்தின் நடுவே வானை அளாவிக்கொண்டு மகிழமரமொன்று நின்றது. வானினிழலிலே படம் விரித்தாடும் சர்ப்பம்போன்ற அம்மரத்தின் அடியே நல்முத்துக்களோ என மகிழ மலர்கள் பாய் விரித்திருந்தன. வீரவர்மனின் உள்ளத்தில் மகிழ்ச்சி பெருகிக்கொண்டிருந்தது. ஆடும் சர்ப்பத்திற்கு மகுடி ஊதுபவன்போல் இன்னிசையைப் பரக்கவிட்டுக்கொண்டு வந்துகொண்டிருந்தான். நந்தவனத்தின் வழியே பாய்ந்துசென்றால் அவனுடைய இருப்பிடத்தைச் சீக்கிரம் அடையலாம். மேல் வஸ்திரம் காற்றில் பறக்க வேகமாய்ப்போய்க்கொண்டிருந்தான். அரசன்மீது அன்று அவனுக்கேற்பட்ட மதிப்பிற்கு அளவே இல்லை.

"எங்கே ரொம்ப வேகம்? ராஜபேட்டியின் அவசரமாக்கும்? எதிரில் வருபவர்கூட வல்லவா தெரியவில்லை!" என்ற இனிய கொஞ்சும் மொழிகள் காற்றில் மிதந்து வந்து அவனை அறைந்தன.

"யாரது இவ்வளவு சீக்கிரம்? வித்யாவா?" வேகமாய்ப் பறந்துகொண்டிருந்த அவன் நடை தளர்ந்தது.

மகிழ மலர்களை மாலையாகத் தொடுத்துக் கொண்டு வித்யா அவன் முன் நின்றாள்.

"இவ்வளவு பனியில் ராஜகுமாரியா" என்றான்.

"ஏன் அவ்வளவு திகைப்பு? பார்த்தால் புலி போல் தோன்றுகிறதோ?" என்றாள் அவள் நகைத்துக்கொண்டே.

"சந்தேகமென்ன? இளவரசி என்றால்" என்று வீரவர்மன் முடிப்பதற்குள்,

"ஆமாம் இளவரசி! இதுதானே வேண்டாமென்கிறேன்! எங்கே அவ்வளவு அவசரம்?" என்றாள் குழந்தைபோல்.

வீரவர்மனின் முன் எழுந்திருந்த கற்பனை உலகம் ஒரு கணம் அகன்றது. வித்யாவின் மெருகு வாய்ந்த பொன் உருவம் அவ்விடத்தைப் பற்றிக்கொண்டது.

"அரசர் உடனே வந்து காணும்படியாகச் சொல்லி அனுப்பி இருந்தார். கண்டு செல்கிறேன்" என்றான்.

வித்:— விசேஷம்?

வீர:— இளவரசிக்குத் தெரியாத விஷயமா என்றுசொல்லிக்கொண்டு குறும்புத்தனமாய் நகைத்தான். இளவரசியைச் சீண்டி விடுவதென்றால் அவனுக்கு ஒரு வேடிக்கை.

"கூறிவிட்டால் வாயிலிருந்து முத்து உதிர்ந்து விடப்போகிறது! சொல்லாவிட்டால் வேண்டாமே" என்றாள் படபடப்புடன்.

"அவ்வளவு கோபமா இளவரசிக்கு?" என்று கடகடவென்று நகைத்தான் அவன்.

"மாலை யாருக்கு? எனக்குதானே?" என்று கேட்டவண்ணம் வித்யாவின் கையிலிருந்த மகிழ மலர் மாலையைப் பிடுங்கிக் கொண்டு வேகமாய்ச் சென்றுவிட்டான்.

இளவரசியும் வீரவர்மனும் சந்தித்து சுமார் ஆறுமாதங்களும் கடந்துவிட்டன. நந்தவனத்தில் வீரவர்மனை அவள் எதிர்பார்க்கவில்லை. வேதனை மிகுதியால் சீக்கிரம் எழுந்து நந்தவனத்திலே உலாவ வந்தாள். அவனிடம் எவ்வளவோ கேட்கவிரும்பினாள்; சொல்ல விரும்பினாள். ஆனால் அரசனுடைய கட்டளை! கோபம்! தைர்யம் வரவில்லை. வீரவர்மன் கண்ணிற்கு மறையும்வரையில் பார்த்துக் கொண்டு நின்றவள் அரண்மனையை அடைந்தாள்.

விந்தியமலையிலிருந்து குமரிவரையில் ராஜ வீரமார்த்தாண்ட வர்மனின் நீதிச்செங்கோல் சுழன்றுவந்தகாலம். எங்கும் லக்ஷ்மீ கடாக்ஷமும் கலா தேவியின் அருளும் மழையாய்ப் பொழிந்துகொண்டிருந்தன. ஆஸ்தானத்தில் கவிகளும், கலைஞரும் இசைவாணரும் நிறைந்திருந்தனர். - மேன்மை வாய்ந்த இசையரசு மேகநாதன் தோன்றிமறைந்த ஆட்சி. சங்கநாதம்போன்ற அவனுடைய கம்பீரமான இசையைக் கேட்ட அரசன் "மேகநாதன்" என்று பட்டத்தை அளித்தான். அவ்விசைச் சிங்கத்தின் மகன் வீரவர்மன். அப்பொழுது தந்தையின் கலையை இன்னும் ஆயிரம் மடங்கு செழிக்கச்செய்துவந்தான்.

வீரமார்த்தாண்டவர்மன் சக்ராதிபதி! அவன் கீழ் அநேக சிற்றரசர் இருந்தனர். அரசன் நீதிநெறி தவறாதவன். படைக்கு அஞ்சாதவன். அபாரமான தெய்வபக்தியுள்ளவன். கலைக்களஞ்சியத்தையே ஆராய்ந்து போற்றுபவன். தஞ்சை நகரத்தை அவனுடைய அழகிய உயர்ந்த அரண்மனை அலங்கரித்தது. நகரமும் அரண்மனையும் அரசனுடைய கலா

ஞானத்தை நன்கு எடுத்துக்காட்டின. எவ்விடம் பார்த்தாலும் அழகிய ஓவியங்கள், பதுமைகள். தச்சுவேலையும் சிற்ப சாஸ்திரமும் தலையோங்கி நின்றன. பெருமானுக்கு அனேக அரிய பெரிய கோயில்களை எழுப்பி இருந்தான். ஆகாயத்தை ஆளாவிய கோபுரங்களே கலைக்குச் சாட்சி அளித்தன. எழும் கோபுரங்களிலே கலையை நாட்டி இருந்தான்.

இம் மாமன்னனுக்கு வீரவர்மனிடம் ஒரு தனி மோகம். நாட்கள் ஓட இருவருக்கும் பழக்கம் அதிகரிக்க அரசனுக்கு மேகநாதனை விட வீர வர்மனிடம் அதிகமான பற்றுதலும் நம்பிக்கையும் ஏற்பட்டன. இதற்குக் காரணம், வீரவர்மன் அவன் தந்தையைப்போல் இசைவாணன் மட்டும் அல்ல. சிற்பம் ஓவியம் மற்றும் சிலைகள் வார்ப்பதிலும் அபாரமான பாண்டித்யமுடையவன். சிறிது காலத்திலேயே அரசனுடைய அரண்மனை அவனுடைய கலைத்திறமையால் மயனுடைய அரண்மனை போல் விளங்கியது. அரசனுடைய மகிழ்ச்சிக்கு எல்லைதான் உண்டா? இவ்வளவு திறமை வாய்ந்த கலைஞனைப் பெற்றால் என்னதான் செய்யமுடியாது? கலைஞன் அருமையை மற்றொரு கலைஞன் அல்லவா உணர முடியும்?

எவ்வளவோ காலமாக அரசனின் மனதில் தோன்றித்தோன்றி மறைந்த ஒரு கற்பனை வேர் விட ஆரம்பித்தது. கலைக்கே ஒரு புதிய யுகம்; சாம்ராஜ்யத்திற்கே ஒரு புகழ்! வீரவர்மனுடைய கைகளுக்கு அமரத்துவம்! ஆண்டவனின் ஆனந்தக்காட்சி! இதை இழந்தால் அவன் அரசனா? ராஜ வீரமார்த்தாண்டன் என்று புகழ்வதன் கருத்துத்தான் என்ன?

தன்னுடைய அரிய கருத்தை வெளியிடத்தான் அன்று வீரவர்மனை அவ்வளவு காலையில் வரவழைத்தான். இருவரும் வெகுநேரம் வரையில் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். வீரவர்மன் திரும்பும் சமயம் இளவரசி வித்யாவைச் சந்தித்தான்.

இளவரசி வித்யாகுமாரி பெயருக்கு ஏற்றபடி எல்லாக் கலைகளிலும் கரைகண்டவள். மார்த்தாண்டவர்மனின் மகள் அல்லவா? குழந்தைப் பருவத்திலேயே தாயை இழந்தவளாதலால் அரசனிடமே வளர்ந்தவள். புத்திரப்பேறு இல்லாத அரசன் மகளை வித்யா பீடத்திற்கே உரியவளாக்கவேண்டுமென்று முயன்றான். வருஷங்கள் உருள உருள ஆண்மைக்கு உரிய வீரமும் பெண்களுக்கு உரிய அன்பு அடக்கமும் ஒருங்கே அவளிடம் கண்ட மன்னன் மனமகிழ்ந்தான். இளவரசி இராஜ்ய விவகாரங்களிலும் அபாரமான ஊக்கத்தைக் காட்டினாள். நாளடைவிலே குடிகளின் இஷ்ட தேவதையாக விளங்கினாள். இளவரசியைக் கண்டு மகிழ்ந்த மன்னனுக்கு ஒரு பக்கத்தில் கவலையே ஏற்பட்டது. அவளுக்கு ஏற்ற கணவனைத் தேட வேண்டாமா? ராஜாதி ராஜர்களையும் சண்டைபோட்டுச் சலித்துக் கொண்டிருந்தான்.

ஆனால் நாட்கள் ஓட இளவரசியின் மனமே வேறு இடத்தில் லயித்துக்கொண்டிருந்தது. கலைஞன் வீரவர்மன் மேகநாதனின் மகன். சாமான்யமானவன். இளவரசியும் அவனும் மேகநாதனிடம் கலை பயின்று வந்தார்கள் குழந்தைப் பருவத்திலே. வீரவர்மன் உயர்ந்த கலைஞன் மட்டும் அல்ல. கலைக்கு ஏற்ற அழகும் அவனிடம் குடிகொண்டிருந்தது. முரடான கலைக்கருவிகளுடன் மன்றாடி வேலைக்கு ஊண் உறக்கமின்றி இருந்தபோதிலும் அவனுடைய கட்டழகு சிறிதும் குறையவில்லை. மேனிகுன்றவில்லை. பருவத்திற்கேற்ற பொலிவும், பேச்சும் அழகிய புன் முறுவலும் எல்லோரையும் மயக்கினது. அரசனுக்கே அவனிடம் மோகம் என்றால் கேட்கவேண்டுமா?

நாளடைவிலே கலைப்பழக்கத்திலே இளவரசி வித்யாகுமாரியின் உள்ளத்தைக் கவர்ந்தான். அவளும் அவனுடையவளாகிவிட்டாள். நிமிஷங்கள் ஓட நாட்கள் ஓட இருவருடைய இளங்காதலும் துளிர்த்துத் தழைத்தது. இது அரசனுக்குத் தெரியாமலா போய்விடும்?

சாம்ராஜ்யத்தையே வகிக்கவேண்டிய வித்யா சாமான்யமான ஒருவனை மணப்பதென்றால் எப்படி? அரசனுடைய குலப் பெருமைதான் என்ன? இதற்கு அவன் இணங்கவில்லை. இவ்விஷயத்தில் இளவரசியைப் பல விதத்திலும் தடுத்தான். நயத்தாலும் பயத்தாலும்


சேலத்தில்

கல்யாணப் பட்டு ஜவுளி ரகங்கள்

வாங்கச் சிறந்த இடம்

# ராம விலாஸ்

396, கடைவீதி சேலம்.

★

Proprietors:

S. N. Ramaswamy Chetty & Bros.

முயன்றான். வீரவர்மனை அரண்மனைக்குள்ளேயே பிரவேசிக்கக்கூடாதென்ற உத்தரவு போட்டான். "இராஜாதிராஜர்கள் உன் கை பிடிக்கச் காத்திருக்கையில் இது தகாது. இவ்வெண்ணத்தையே விட்டு விடு" என்று வித்யா குமாரிக்குக் கடுமையான தண்டனை போட்டான்.

அரண்மனையை அடைந்த இளவரசியின் மனம் நிலைகொள்ளவில்லை. உயர்ந்த பஞ்சணையில் படுத்தாள் என்றாலும் இருப்புக் கொள்ளவில்லை. எண்ணங்கள் ஒவ்வொன்றாக எழ எழ துக்கம் அவள் உள்ளத்திலே குமுறியது.

அன்று பகல் போஜனம் முடிந்து அரசன் சயன மஞ்சத்தில் வீற்றிருந்தான். அருகில் இளவரசி வித்யா உட்கார்ந்திருந்தாள். அவளுடைய கட்டழகினால் அவ்வறையே தனிப் பிரகாசத்தைப் பெற்றிருந்தது. சிறிதுநேரம் இருவரிடமே மௌனம் நிலவியது. பிறகு "இன்று வீரவர்மனை எதற்கு அழைத்தேன் உனக்குத் தெரியுமா குழந்தாய்?" என்றான் அரசன். அரசன் வார்த்தைகளின்மேல் மென்மை இருந்தது. அன்பு இருந்தது. ஆனால் இதைப்பற்றித் தன்னை கேட்கும் காரணம்? கட்டளையை மீறியது! வித்யாவின் முன் உலகம் சுழன்றது. அவளால் ஒன்றும் பேசமுடியவில்லை. அரசனைப் பார்த்தாள். திகில் அவள் கண்களிலிருந்து வீசியது.

"குழந்தாய் ஒரு அற்புதமான விஷயம்" என்றான் அரசன் மறுபடியும். இளவரசியின் கையை எடுத்துத் தன் கைமேல் வைத்துக் கொண்டான். இனி எவ்விதம் பேசாமலிருக்கமுடியும் வித்யா?

"என்ன விஷயம் தந்தையே?" என்றாள் தாழ்ந்த குரலில். "ஏதாகிலும் படையெடுப்போ" என்றாள். அதற்கு வீரவர்மன் எதற்கு. அதுவும் அவளுக்கு விளங்கவில்லை.

"இல்லை குழந்தாய்! அரசன் என்றால் எப்பொழுது பார்த்தாலும் படையெடுப்பும் சண்டையும்தானா? உனக்குக்கூட ஏன் இந்தக் கவலை. கேள். அபூர்வமான ஒரு கற்பனை. வெகு நாட்களாக நான் அடக்கி வைத்திருந்த ஆர்வம்! சாம்ராஜ்யத்திற்கே ஒரு அழியாப் பெயரையும் புகழையும் நிலை நாட்டப் போகின்றேன்" என்றான் அரசன் பெருமையுடன்.

தாமரை இதழ்போன்ற வித்யாவின் விழிகள் அவனை நோக்கின.

"கலைத்தெய்வம் நடராஜப் பெருமானின் அரிய விக்கிரகம் ஒன்றை நம் வீரவர்மன் சிருஷ்டிக்கப்போகின்றான்" என்றான் மறுபடியும் இளவரசியால் ஒன்றும் பேசமுடியவில்லை. ஆனந்தம் அவள் உள்ளத்தில் கொந்தளித்தது. தந்தையை அன்புடன் நோக்கினாள்.

"குழந்தாய்! வீரவர்மனின் கலைக்கு இது ஒரு சோதனை. வெற்றியடைவானேயாகில் அமரத்துவத்தைப் பெறுவான். அண்டம் அதிர ஆனந்தத் தாண்டவம் புரிந்த புண்ணிய மூர்த்தியை நாம் எல்லோரும் காணும் பெரும் பாக்கியத்தைப் பெறுவோம்" என்றான் அரசன் மேலும். பெருமையும் நம்பிக்கையும் அவன் முகத்திலே தவழ்ந்து விளையாடின.

வேறு ஒன்றும் கூறத் தோன்றாதவளாய் "தந்தையே அரிய கருத்து" என்றாள்.

"வீரவர்மன் வெற்றி பெறுவானாகில் நான் என்ன கூறுவேன். அவனுக்குச் சன்மானம் என்னவென்பதை இப்பொழுது என்னால் கூறமுடியாது" என்றான் அரசன் அளவிலாப் பெருமையுடன்.

வித்யாவின் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கி எழுந்தது. கலைத் தெய்வத்தை மனதிலே வாழ்த்தினாள்.

மாதங்கள் ஓடின. வீரவர்மன் ஒருவர் கண்ணிலேயும் படவில்லை. அவன் வேலையில் ஆழ்ந்துவிட்டான். ஆராய்ச்சி உலகத்தில் புகுந்து கற்பனைக் கடலிலே துளைய ஆரம்பித்தான். தேவரும் அசுரரும் அமிருதத்தைக் கடைந்தெடுக்கும் சமயம் மந்தர பர்வதத்தை மத்தாக வைத்து வாசுகியைக் கயிறாக உபயோகப்படுத்தினார்களாம். நம் வீரவர்மன் ஆராய்சிக் கடலைக் கற்பனை என்னும் மத்தால் கடைந்தான். பெருமாளின் அழகிய உருவம் உருண்டு திரண்டு வருவதை ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தான். கடையக் கடைய அக்கடலிலிருந்து அனேகவிதமான மூர்த்திகள் கிளம்பின. செஞ்சடையாடும் சிவபெருமானின் பயங்கரமான தாண்டவங்கள்! மண்டை ஓட்டை மாலையாய் அணிந்து சுடுகாட்டில் ஆடும் தெய்வம்! காளியுடன் ஆடும் கோர தாண்டவம்! எல்லாம் ஒவ்வொன்றாக எழும்பின. ஆனால் பயங்கரமான இச்சொரூபங்களைக் காண அவன் உள்ளம் பதறியது. அவன் தேடியது அக்கோரச் சொரூபத்தை அல்ல. முப்பத்து முக்கோடி தேவர்களுடன் பதஞ்சலி வியாக்கிரபாதர் கண்ட ஆனந்தத்தாண்டவ மூர்த்தியைக் காணவேணுமென்று கடைந்தான். இன்னும் வேகமாய்க் கடைந்தான். கற்பனைக் கடலையே கலக்கிச் சல்லடை போட்டுச் சலித்துவிட்டான். அப்பொழுதுமா அம்மூர்த்தி அகப்படாமல் போய் விடும்? ஒருவராலும் போகமுடியாத அவ்வளவு ஆழத்திலே புதைந்து கிடந்தது அம்மோகன மூர்த்தி. வீரவன்மன் விடவில்லை. கடைந்து கடைந்து மேலே எழுப்பினான். கலைத்தெய்வத்தின் பொன் உருவத்தை மேலே பிடித்து இழுத்துக்கொண்டு வந்துவிட்டான். அவனுடைய மகிழ்ச்சிக்கு எல்லையுண்டா?

நடராஜப் பெருமானின் அரிய உருவம் கொஞ்சம் கொஞ்சமாகக் கற்பனைக் கடலிலே

எழுந்தது. ஆகாய கங்கையைத் தாங்கிய விரித்த செஞ்சடை! சசியால் அலங்கரிக்கப் பெற்ற நெற்றி! ஒளி வீசும் மோகன முகம்! செவிகளில் தாண்டவ மூர்த்திக்கென ஆடும் குண்டலங்கள்! கொடிய ஆலகாலத்தையுண்ட நஞ்சுண்ட மூர்த்தி என விளக்கிக் காட்டக் கழுத்தில் பயங்கரமான கரிய நாகங்கள்! காயத்திரியின் மகிமையை விளக்கிக் காட்ட ஆடும் தங்கநூல்! தெய்வமெனக் கொண்டாடுவதற்குரிய நான்கு திருக்கரங்கள்? அண்டத்தையே அதிர வைக்கும் பிரளயத்தை அறிவிக்கும் உடுக்கையுடன் ஒரு கரம். திரிபுரத்தை எரித்த மழுவேந்திய மற்றொரு திருக்கரம்! இச் சம்ஹார மூர்த்தியே கலை என்று எடுத்துரைக்கும் ஒயிலாக நீண்டு வளைந்த மூன்றாவது கரம்!

ஆனால் எவ்வளவு சக்தி இருந்தும் தஞ்சமடைந்தவரை "இதோ வந்தேன் பயப்படேல்" என்று உரைக்கும் வளைந்த அபயகரம்! வில்லென வளைந்த குறுகிய இடை! பயமென்னும் வார்த்தையே அறியா மூர்த்தி எனக் காட்ட இடையில் உரித்த புலியதள்! மாகாளியை வென்ற தூக்கிய திருவடி ஒன்று! நடனசிகாமணி! என்று ஒலிக்கும் பொற் சதங்கைகள்!

கலைத்தெய்வத்தின் இவ்வுருவம் வீரவர்மனின் முன்னே வந்து ஆடியது. அவன் ஆட்டிவைத்தபடி ஆடியது. வீரவர்மனின் கலை அமரத்துவத்தைப் பெற்றுவிட்டது. மார்த்தாண்ட வர்மனின் சாம்ராஜ்யத்திற்கு அழியாப் பெருமை உண்டாகப் போவதில் என்ன சந்தேகம்? கலைஞன் சொர்க்கத்தில் ஆழ்ந்தான்.

ஆறுமாதங்களிலே ஒன்றன்பின் ஒன்றாக நடராஜப்பெருமானின் அரிய மூன்று மூர்த்திகளை அரசன் முன் நிறுத்தினான்.

கண்கொள்ளாக் காட்சியளிக்கும் பெருமானைக் கண்டு அரசன் மகிழ்வது அதிசயமா? அதுவும் வெகுகாலமாக அவன் கொண்ட அபூர்வமான ஆசை! அண்டமே கிடு கிடுக்க ஆடிய ஆனந்தத் தாண்டவ மூர்த்தியைக்கண்டு களித்தான். வீரவர்மனின் கலைக்கு ஈடெதிர் இல்லை. இருந்தாலும் அக் கலையில்கூட அரசனுக்குத் திருப்தி ஏற்படவில்லை.

"வீரவர்மா! உன் கரை கடந்த கற்பனையை மெச்சினேன். ஆயினும் இன்னும் என் மனதில் ஒரு குறை உதிக்கின்றது. பெருமானுடைய அழகிய திருமுகத்தில், அருள் மழை பொழியும் முகத்தில் ஸ்பூர்த்தியைக்காணவில்லை. அதைச் சற்றுப் பார்க்கலாகாதா?" என்றான். ஆம்: வீரவர்மனுக்கும் அது அப்பொழுதுதான் விளங்கிற்று.

"அரசே பொறுக்கவேணும்; இன்னும் மூன்று மாதங்கள்" என்றான்.

அரசனும் சம்மதித்து வேண்டிய பொன்னை வீரவர்மன் இடத்திற்கு அனுப்பினான்.

மறுபடியும் வீரவர்மனை ஒருவரும் காணவில்லை. இரண்டு மாதங்களும் உருண்டு விட்டன. கலைஞனுடைய கைகள் விக்கிரகம் வார்த்துச் சலித்துவிட்டன. அவன் கற்பனையிலே எட்டியது இதுதான். எவ்வளவு பிரயாசைப்பட்டாலும் அதே முகம்தான். அதே அருள்தான். அதற்குமேல் ஓடவில்லை. இதென்ன விந்தை! என்று அவனுக்குத் தெரியவில்லை. பெருமானின் லீலையோ எனச்சந்தேகித்தான். என்ன அபராதம் அப்படி! பெருமானைத் தவிர அவன் இதுகாறும் வேறு நினைத்தவனில்லை. இளவரசி வித்யாகுமாரியைக் கூடவல்லவா தியாகம் செய்து உட்கார்ந்திருக்கிறான்! தெய்வத்திற்கு இன்னும் அருள் புரிய மனம் வரவில்லை?

"நடராஜப் பெருமானே! இதில் நான் வெற்றி பெறாவிடில் உண்மைக் கலைஞன் அல்ல! பார்த்துவிடலாம்!" என்றான் பெருமானின் முன்பு. இன்னும் அரசன் கொடுத்த தவணையில் ஒரு மாதம்தான் இருக்கின்றது.

ஒருநாள் இரவு வீரவர்மன் கலைதெய்வத்தின் முன் உட்கார்ந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். ஜன்னலின் வழியே பொன் நிலவு பெருமானைப் பார்த்துப் புன்னகை பூத்துக் கொண்டிருந்தது. எவ்வளவு முயன்று என்ன?


## நரையை ஒழியுங்கள்!



நரை எவ்வளவு முதிர்ந்ததாக இருந்தாலும் கேசத்திற்கு முன்போல் நிரந்தரமாகக் கருமை அளிப்பதில் **விவலென் ஹேர் ஆயில்** நிகரற்றது. சென்ற 10 வருஷங்களாகப் பிராபல்யத்துடன் இருந்து வருகிறது. பெரிய பாட்டில் ரூ. 3/4- சிறிய பாட்டில் ரூ. 2/- முழு சிகிச்சைக்குத் தேவையான 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனாம்.

ஏஜண்டுகள்: **அப்பா & கோ.,**

கெமிஸ்ட்ஸ், எஸ்ப்ளனேட், மதராஸ்.

பிறவிக் குருட்டைத் தவிர

## கேடரைன்



மற்றெல்லாக் கண் உபாதைகளையும் மாயமாக நிவர்த்திக்க வல்லது கண்ணாடி போடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கேடரைன் உபயோகித்து மீண்டும் யதாப் பிரகாரம் கண் பார்வையைப் பெறுங்கள். கண் படலத்திற்கு (Cataract) உத்தரவாதத்துடன் கூடிய நிர்ப்பயமான சிகிச்சை. ரூ. 2/-

ஏஜண்ட்ஸ்: **அப்பா & கோ.,** கெமிஸ்ட்ஸ்,

286, சைனா பஜார் ரோட், மதராஸ்.

அதே காட்சிதான். அதே முகம்தான். ஒன்றும் தோன்றாது வீரவர்மன் தெய்வத்தின் பாதத்தில் கவிழ்ந்து கொண்டான்.

அப்பொழுது சில்லென்று காற்று அவன் முதுகில் பட்டது. வாசனைத் திரவியங்களின் மணம் அவனைச் சூழ்ந்தது. பின் பக்கத்திலிருந்து அவன்பேரில் யாரோ கை வைத்தார்கள்.

இந்நள்ளிரவில் யாரது? வீரவர்மன் திரும்பினான். முகத்தில் புன்னகை அரும்ப வித்யாகுமாரி அவன் முன்பு நின்றாள்.

இளவரசியைக் கண்டு எவ்வளவு நாட்களாய் விட்டன? அவன் உள்ளத்தில் சொல்ல முடியாத ஓர் இன்பம் வந்து பாய்ந்தது. கலையாவது? கற்பனையாவது? தூய காதலினாலல்லவா கற்பனை எழுகின்றது?

"வித்யா" என்றான் அவன் அன்பொழுக. அவனுடைய அணைப்பிலே மெய்மறந்தாள் இளவரசி. "இவ்வளவு பாராமுகமா?;" என்றாள்.

"என்ன செய்வது வித்யா? கலை என்பது மனிதனை ஆழத்தில் ஆழ்த்திவிடுமென்பதை மறந்துவிட்டாயா? அதோ பார்!" என்றான் சிலையை நோக்கி.

என்ன அற்புதமான சிருஷ்டி! அவள் மகிழ்ச்சியுடன் அவனை நோக்கினாள்.

வீர :—இதுவரையில் சிலையை நீ பார்க்கவில்லையே?

வித் :—பெரிய ரகசியமாய் அல்லவா வைத்திருக்கிறீர்கள்? நான் எதற்குப் பார்க்கவேண்டும்? அரசன் அருள் ஒன்றிருந்தால் போதாதா உங்களுக்கு?

நகைத்தான் வீரவர்மன். "அதெல்லாம் இருக்கட்டும். "பெருமானுடைய சிலை எப்படி? சொல் பார்ப்போம்" என்றான்.

வித் :—கேட்பானேன்? அற்புதம்! உங்கள் சிருஷ்டியைப்போல் நானும் ஆடுகிறேன் பார்க்கிறீர்களா?

இளவரசியின் நடனத்தைப் பார்த்து எவ்வளவோ நாட்களாகிவிட்டன.

"ஆனந்தமாய்" என்றான் வீரவர்மன்.

அடர்ந்து வளர்ந்த கூந்தலை அவிழ்த்து விட்டாள் இளவரசி. முந்தாணி (முன்றானை)யை வரிந்து கட்டிக்கொண்டாள். பெருமானின் சிலைக்குப் பக்கத்தில் மற்றொரு சிலைபோல் நின்றாள்.

"பேஷ்! நான் பாடவா நீ ஆட?" என்றான் வீரவர்மன்.

வீரவர்மன் பாடினான். அவள் ஆடினாள். அவனுடைய தாளம் ஓங்கியது. அவளுடைய கால்கள் பறந்தன. கற்பனைச் சமுத்திரத்திலிருந்து கடைந்து எடுத்த சிலை அப்படியே நின்றது. வீரவர்மனின் முன் உண்மைத் தெய்வம்! அவன் உள்ளத்தில் குடிகொண்ட தெய்வம் ஆடியது. என்ன வடிவு! என்ன பிரகாசம்! என்ன பெருமை வாய்ந்த சாந்த வடிவு! கற்பனைக் கடலிலே அவனால் கடைந்தெடுக்க முடியாத ஒரு பிரகாசம் அவனைச் சூழ்ந்தது. சிறிது நேரத்திலே காலைத் தூக்கி நிற்கும் தெய்வத்தின் பக்கத்திலே மற்றொரு தெய்வம் நின்றது. கலைத் தெய்வத்தின் சமுகத்திலே இளவரசி தன் கலையை அரங்கேற்றிவிட்டாள்.

"சபாஷ்! கலைக்கு அமரத்துவம்" என்றான் வீரவர்மன். அந் நல்லிரவை எவரால் மறக்க முடியும்?

காதலர்களிடையே வெகுநேரம் வரையில் சம்பாஷணை நடந்தது. இளவரசி வீரவர்மனை விட்டுப் பிரிய மனமில்லாதவளாய்ப் பிரிந்தாள்.

"பொறு குமாரி! தெய்வம் அருள்புரியும் சீக்கிரம்" என்று அவளைத் தேற்றினான் அவன்.

வெகு சீக்கிரத்திலேயே வீரவர்மனின் வேலை முடிந்துவிட்டது. மற்றொரு சிலையைக் கொண்டுவந்து அரசன் முன் நிறுத்தினான்.

"நம் வீரவர்மனல்லவா கலைஞன்" என்று மகிழ்ந்தான் அரசன். அருள் மழை பொழியும் பெருமானின் திருமேனியைக்கண்டு பூரித்தான். இனி எதற்குத் தாமதம்? யாருக்காகக் காத்திருக்கவேணும்? ஒவ்வொருநாள் கனவிலும் எண்ணிய கலைக் கோயிலின் கோபுரம் எழ ஆரம்பித்துவிட்டது. வீரவர்மனின் வெற்றி ஊர் முழுவதும் பரவிவிட்டது.

"குழந்தாய்! நம்ம வீரவர்மனுடைய பெருமையே பெருமை! அவனுக்குத் தகுந்த பரிசு என்ன அளிப்பதென்பதுதான் எனக்கு விளங்கவில்லை" என்றான் மார்த்தாண்டவர்மன் வித்யாவிடம். அவளுடைய மகிழ்ச்சிக்கு எல்லைதான் உண்டா? கலைத்தெய்வத்திற்கே கோயிலை எழுப்பியவனுடைய மனக்கோயிலைக் கட்டாமல் விட்டுவிடுமா தெய்வம்? அப்படி விட்டுவிட்டால் அதுதான் பிறகு தெய்வமா? நாளுக்கு நாள் வித்யாவின் நம்பிக்கை வேர் ஊன்றி வந்தது.

சாம்ராஜ்யமே எதிர்பார்த்த நன்னாள் வந்தது. "மார்கழி மாதத்திலே, திருவாதிரை நக்ஷத்திரம் கூடிய சுபதினத்திலே காலை நேரத்திலே சுபயோக சுபதினத்தில் கலைத்தெய்வமாகிய நடராஜமூர்த்தி அரசனால் இயற்றப் பெற்ற பொன் பீடத்திலே எழுந்தருளப் போகின்றார். மக்கள் ஊரை அலங்கரித்துப் பெருமானைத் தரிசிக்க" என்று நகரத்தில்

பறை முறையிட்டது, அன்று நகரம் ராமபிரானது முடிசூட்டு வைபவத்திற்குச் சிங்காரம் செய்யப்பெற்ற அயோத்திபோல் விளங்கியது. விடியற்காலையிலிருந்து எங்கும் மங்கள வாத்தியங்கள் முழங்கின. தெருக்களில் தண்ணீர் தெளித்துக் கோலமிட்டு எங்கும் மங்கள தோரணங்கள் ஊசலாடின. அங்க வங்க நாடுகள் புரண்டன. மக்கள் மங்கள ஸ்னானம் செய்து பட்டாடை உடுத்தி அலங்காரங்கள் செய்துகொண்டு களியுண்டு பெருமானைக் காணச் சமுத்திரம் போல் புரண்டனர். சாமான்யமான வைபவமா? பதஞ்சலி வியாக்கிரபாதர் கண்டுகளித்த புண்ணிய மூர்த்தியைக் காணப் போகின்றனர். வீரவர்மனின் கலைக்கு அமரத்துவத்தை நிலைநாட்டும் நன்னாள்.

சிற்றரசர்களும் கலைஞரும் அரண்மனையில் குழுமி இருந்தனர். "சோ" என்று சமுத்திரம் போன்ற பேரிரைச்சல் வான் வரையிலும் எட்டியது.

குறித்த நேரத்தில் வாத்தியங்களுடன் விருதுகள் சூழ, கலைஞரின் பிரவாகம் புரள, மந்திரிமார் முன்செல்ல? வேதியர் கோஷம் ஓங்க, கண்ணுக்கு எட்டிய வரையில் மக்கள் புரண்டுவர, சிற்றரசர் படைசூழ, தேவியர் அன்னம்போல மிதந்துவர, அரசன் வீர மார்த்தாண்ட வர்மன் இளவரசி வித்யாவுடன் கோயிலுக்கு எழுந்தருளினான். பெருமானுக்கென்று அமைக்கப்பெற்ற பொற்பீடத்தின் முன்வந்து நின்றான். இரு கைகளையும் உயரத் தூக்கிக்கொண்டு உணர்ச்சிப் பெருக்குடன் பெருமானைத் துதித்தான். அவன் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் "புலபுல" வென்று உதிர்ந்தது. பார்க்கப் பதினாயிரம் கண்கள் தான் போதுமா? பட்டுத் திரைகள் விலகின. நடராஜப்பெருமான் பக்தகோடிகளின் தோளிலே ஆனந்த நடனம் புரிந்தார்! பொன் மயமாய்க் காட்சியளிக்கும் நடராஜப்பெருமானைக் கண்டு "நடராஜப்பெருமானே! ஆனந்த நடன மூர்த்தியே! நடன கலாமணியே! அபய மூர்த்தியே! காலைத்தூக்கி நின்றாடும் தெய்வமே! ஆண்டருள்! ஆண்டருள்!" மக்கள் போடும் சத்தம் அண்டத்தைப் பிளந்தது.

கலைஞன் வீரவர்மனுடைய பெருமைதான் என்ன? ஆனந்தப் பிரவாகத்தில் முழுகி இருந்தான். அவனுடைய அழகிய கண்கள் எல்லையற்ற அன்பை இளவரசியின்பால் அள்ளித் தெளித்துக்கொண்டிருந்தன. பெருமானையும் மறந்துவிட்டான் போலும்! சிறிது நேரத்திலேயே தன் மனக் கோயிலில் எழுந்தருளப் போகும் அரிய தெய்வத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். நடராஜப் பெருமானும் பொற்பீடத்தை அலங்கரித்தார்.

அரசன் கலைஞன் வீரவர்மனுக்குச் சன்மானம் அளிக்க முன்வந்தான். மக்களும் மன்னர்களும் ஆர்வத்துடன் நோக்கினர்.


மேதாஸ்

"சுந்தரி எலிக்ஸர்"

ஸ்திரீகளின் சூதக சம்பந்தமான வியாதிகளுக்கு

★ சிறந்த டானிக் ★

ஆயுர்வேத முறைப்படி தயார்செய்தது.

பிரபல டாக்டர்களின் மதிப்பைப் பெற்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :—

K. S. மேதா & Co., மதராஸ்.

ஹைதராபாத் ஏஜண்டு :—

ஸெண்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ்,
ஸெகண்ட்ராபாத்.

அரசனுடைய மனதில் மகிழ்ச்சி கொந்தளித்தது. கையைக் கூப்பியவாறு பெருமானைப் பார்த்துச் சொன்னான்:—

"எம்பெருமானே! நடன கலாமணியே! என் கடமையை முடித்துவிட்டேன். கலைஞன் வீரவர்மனின் கலைத்திறமையால் உன்னுடைய அரிய தாண்டவத்தை இன்று நாங்கள் கண்டு மகிழ்கின்றோம். எம்பெருமானுடைய அருளால் அவன் கலை அமரத்துவத்தைப் பெற்றுவிட்டது. முப்பது முக்கோடி தேவர் கண்டு களித்த ஆனந்தத்தாண்டவத்தை உலகத்தின் கண்முன் நிறுத்திவிட்டான்.

"இன்று முதல் உலகம் கலைஞன் வீரவர்மனை ராஜா வீரவர்மன் என்ற விருதுடன் அழைக்கட்டும். இதோ என் கழுத்திலுள்ள ரத்தின ஹாரத்துடன் பத்து யானைகள் சுமந்த பொன்னை அவனுக்குச் சன்மானமாக வழங்குகின்றேன். பெருமானே! நீயும் ஏற்றுக் கொள்ளவேண்டும்" என்று ரத்தின ஹாரத்தைக் கழற்றி வீரவர்மனின் கழுத்தில் இட்டான். "ராஜா வீரவர்மனுக்கு ஜே!" என்ற சத்தம் இடியோசைபோல் முழங்கியது. அந்தோ! வீரவர்மன் இதையா எதிர்பார்த்தான்? 'கலைதெய்வத்தின் முன் வெட்டுண்ட மரம்போல் சாய்ந்தான்.

"கூ கூ" என்று அரண்டனர் அரசர்.

இளவரசி வித்யாவின் சந்திர வதனம் "மாகாளியே வந்தாளோ என்ற தோற்றத்தை உண்டாக்கியது. அரசனிடமிருந்து ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்தாள். "டணார்! டணார்!" என்ற சத்தம் அண்டமே அதிருவதுபோல் தோன்றியது. சகல போகங்களுடன் எழுந்தருளிய கலைத்தெய்வத்தின் அழகிய சிலை தலைகுப்புறத் தரையிலே சாய்ந்தது. ரௌத்ராகாரத்துடன் வித்யா பெருமான்பேரில் நின்றாள்!

வித்யாவா? ராஜகுமாரியா?

அபசாரம்! அபசாரம்! என்று அலறினான் அரசன். ஓடினான். ஓடி என்ன பயன்? பெருமானின் அபயகரம் உடைந்து விழுந்து கிடந்தது. அதன் பேரில் வித்யா பிணமாய்க் கிடந்தாள்!

ஆயிரம் பாடுபட்டு என்ன பயன்? கோவென்று அலறினான் அரசன். வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டான். அப்பொழுது பெருமானின் பீடத்திலிருந்து கம்பீரமான ஒரு தொனி வெளிவந்தது:—

"ராஜ வீரமார்த்தாண்டனே! உன்னுடைய ஊக்கத்திற்கும் பக்திக்கும் மெச்சினோம். உன் மனதில் எழுந்த கோயிலைக் கட்டி முடித்தாய். கலைஞன் வீரவர்மனுடைய கலையை நிலைநாட்டினாய். ஆனால் அவனுடைய மனக்கோயிலை உடைத்து எறிந்து விட்டாய். அக்கோயிலில் குடிகொண்டது அவனுடைய கலை தெய்வம் பூமகள் வித்யா! இதை நீ மறந்துவிட்டாய்! கலை தோன்றுவது இயற்கையின் எழிலிலே! தூய காதலிலே! ஜீவ ராசிகளின் அன்புப் பிணைப்பிலே! பிரகிருதியே நான். இனிய காதலே நான்! கலையே நான்! உண்மையே நான்! இதை உணர்ந்தவன் கலைஞன். வீரவர்மனும் பூமகள் வித்யாவும் தெய்விகக் கலைஞர்கள். இதை நீ அறிந்தாயில்லை. தெய்விகக் கலையைப் பேதைமையால் இழந்தாய். அவர்கள் இருவரும் என்னை அடைந்தனர். மன்னவனே! இப்பரம இரகசியத்தை மக்களுக்கு எடுத்துரைப்பாய்" என்ற மதுரநாதம் அரசன் உள்ளத்தைப் பாணம்போல் குத்தியது.

கோவென்று புரண்டு அழுதான் அரசன். அழுதாலும் மாண்டார் வருவாரோ மீண்டும்? இப்பரம ரகசியம்தான் "சிதம்பர ரகசியம்" என்று நாம் ஏன் எண்ணக்கூடாது?


## இழந்த சக்தி

மூல சக்தியை இழந்து தாம்பத்ய வாழ்க்கையை அனுபவிக்க முடியவில்லையா? அப்படியானால்—

ஜாய் கெமிகல் ஒர்க்ஸ்
தயாரிக்கும்

**ரெஸுவெண்டா** வை

இன்றே உபயோகியுங்கள்

3 மணி நேரத்தில் நல்ல பலன் அளிக்கும் புத்துயிர், ஊக்கம், வலிமை வரும். ஸ்திரீகளின் போக வெறுப்பை நீக்கும்.

பாட்டில் ஒன்றுக்கு ரூ. 2—8—0
டஜன் பாட்டில்கள் ரூ. 27—0—0

வினியோகிப்பவர்:—
டாக்டர் R. மோஹலநோவிஸ்,
போஸ்ட் பாக்ஸ் நெ. 10013, கல்கத்தா.

குறிப்பு:—நம்பத்தகுந்த ஹோமியோபதி, பயோ கெமிக் மருந்துகள் டிராம் ஒன்றுக்கு ரூ. 0—3—6 வீதம் ஷ்டி விலாசத்தில் கிடைக்கும்.




வாழ்க்கையில் ஆரோக்கியத்தை விரும்
பும் பெற்றோர்கள் ஆகாரத்தில் சிறந்த
தென நம்புவது 'பெரீஸ் பிஸ்கட்ஸ்

குழந்தைகள் விரும்பும் அமிர்தம்
போன்ற உணவு மேலான சத்துக்கள்
அடங்கிய தங்களின் சிற்றுண்டி என்
பதை ஒவ்வொரு தாய், தந்தையரும்
அறிந்திருப்பதால் அவர்கள் எப்
பொழுதும் வாங்குவது

# பெரீஸ்

## பிஸ்கட்ஸ்

**PERRY & CO., USILAMPATTI.** (Estd. 1917)

# இறைவா ஏன்?

'சாரி'

அக்டோபர் இரண்டாந் தேதி; இன்று மகாத்மா காந்தி பிறந்த புனித தினம். சாதாரண கதர் ஆடையணிந்து கடைத் தெருவில் புகுந்தேன். காந்தி மஹானின் திரு உருவப் படத்தை ஊர்வலமாக எடுத்துச் செல்கிறார்கள்.

கலாட்டா நேராமல் கவனித்துக்கொள்ளும் சிகப்புக் குல்லாய்களின் நடமாட்டம் தெருவில் பலமாக இருந்தது.

பஜனையின் இனிய நாதமும், ஜே சத்தமும் வானையே பிளந்துவிடும் போலிருக்கிறது.

சிறிது தூரம் கூடவே நடப்போம் என்று தோன்றிற்று. "செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே"

ஆம், தேனைப் போலவே பாயுது இவ்வினிய கீதம் நம் காதினில்! ஆனால் இனிமை எதில் உள்ளது? அந்த மகா கவியின் சொல்லழகிலா, அதைப் பாடும் தொண்டர்களின் ஆவேசத்திலா?

இரண்டிலுந்தான்! சங்கீத மென்னவோ உயர்ந்த ரகமில்லை; சாமானியமே. உதவிக்கு வைத்திருந்த ஹார்மோனியமோ, சஹிக்கமுடியாத அபஸ்வரத்தைப் பரப்புகிறது.

தொண்டர்கள் கூட்டத்தில் நுழைந்துகொள்ளும் உத்தேசத்தில் அவர்களை அணுகினேன்.

* * *

"ஸார், என் வீட்டுக்கு வாருங்கள், ஸார்" ஒரு பெண் குரல்! என் வஸ்திரத்தைப்பற்றி மெல்ல இழுத்தாள்.

என்ன இது? புதுமையிலும் புதுமை! தெருவில் அலைந்து, தொழிலுக்கு வழிதேடும் பெண்களை நம் தேசத்தில் இதுகாறும் கண்டதில்லையே?

"சகோதரி, உனக்கென்ன வேண்டும்?"

"பேச்சைப்பாரு, பேச்சை. நீ மிகமிக நல்லவனுக்கும். தெரியும் ஐயா, உன்னைப்போன்றவர்களை — வீட்டுக்கு வரியா, இல்லையா. சொல்லு."

"அம்மா, வேண்டாம், உனக்கு என்ன தேவையென்று சொல், கொடுக்கிறேன்"

"ஐயோ, கால் வலிக்கிறது; உடலில் ஜ்வரம் இருப்பதால் நிற்கவும் முடியவில்லை. நீ ஏதோ என்னைக் கேலி செய்கிறாயே. நிஜமாகவா? நான் கேட்டதைக் கொடுப்பாயா? எங்கே, கொடு பார்ப்போம், உன் பணப் பையை! எனக்குத் தேவையானது அதுதான்."

வாய் பேசாமல் பையை அவள் கையில் வைத்து நேரே வேகமாய் நடந்தேன்.

"ஸார், ஸார், இந்தாருங்கள்................."

நான் விரைந்து ஒரு பர்லாங் சென்றிருப்பேன். திரும்பிப் பார்க்கும்பொழுது அவளைக் காணோம்.

பஜனையின் சொற்கள் காதில் ஒலித்தன!

"எல்லா உயிர்களிலும் நானே யிருக்கிறேன். என்றுரைத்தான் கண்ணபிரான்"

ஒரு மருந்துக்கடை. அதன் ஓரமாக நின்று இளைப்பாறினேன். பெரிய மனிதர் ஒருவர் உள்ளே அவசரமாக நுழைந்தார். நானும் பின் தொடர்ந்தேன்.

அவர் கதருடை தரித்திருந்தார். கடையிலுள்ள யாவரும் மரியாதையுடன் அவரை வரவேற்று என்ன வேண்டுமென்று விசாரித்தார்கள். இந்தச் சந்தடியில் என்னை ஒருவரும் கவனிக்கவில்லை.

பெரிய மனிதர் தமக்குத் தேவையான ஒரு மருந்தைப் பெற்றுக்கொண்டு புறப்பட நினைத்தவர், அவசரமாகக் கைக் கெடியாரத்தைப் பார்த்தார்.

"அடடா, நாழிகை ஆகிவிட்டதே, சரியாக 8 மணிக்குப் போலிசு கமிஷனரை ஸ்டேஷனில் சந்திப்பதாக வாக்களித்தேனே! ஊர்வலமும் அதற்குள் முடியாதுபோலிருக்கிறது. போய்ச்சொல்லிவிட்டுத் திரும்புவோமென்றால் ஸ்டேஷன் ஒரு மைல் தூரத்திலல்லவா இருக்கிறது;" என்று சங்கடப்பட்டார்.

நான் அவர் முன் போய் நின்றேன். "ஐயா, கடை சைகிளை வாங்கிக்கொண்டு நான் போய்ச் சொல்லிவிட்டு வந்தால், சரியாக இருக்குமா?" என்றேன்.

"ஆ, அதுவே சரி, ஓடு. இப்பவே மணி 8 அடிக்கப் பத்தே நிமிஷம்தானிருக்கிறது. நான் சரியாக 8 மணிக்குப் போகாவிட்டால், போலீஸ் கமிஷனரின் உத்தரவுப்படி ஊர்வலம் நிறுத்தப்படும்; பிறகு அமளிதான்."

நான் யாரென்று கேட்டுத் தெரிந்துகொள்ளவில்லை; என் முகத்தைக்கூட அவர் சரியாகக் கவனிக்கவில்லை!

சைகிளில் ஏறிக் குடல் தெறிக்க விரைந்தேன், ஸ்டேஷனில் போய்ச் சொல்லிவிட்டுத் திரும்பும் சமயம் மணி 8 அடித்து 5 நிமிஷங்கள்.

கடையில் பெரிய மனிதர் இல்லை! அவர் போய்விட்டாராம். சைகிளை ஒப்புவித்துவிட்டுத் திரும்பினேன்.

கடை ஆட்களுக்கு, நான் செய்தியைச் சரியாகக் கொண்டுபோய்ச் சேர்த்தேனா வென்பதை விசாரிக்க என்ன அக்கரை? அல்லது நான் யாரென்பதுதான் அவர்களுக்கு என்ன கவலை?

மௌனமாக வெளியில் வந்தேன். மனம் சற்றுப் புண்பட்டிருந்தது—ஆம், புகழை விரும்பித்தானே அவ்வாறு விரைந்து சென்றேன்? அதற்குச் சரியான கூலிதான் இந்த ஏமாற்றம். நன்றாய் வேண்டும் எனக்கு!

* * *

சிறிதுதூரம் நடந்தேன். ஒன்றையும் கவனித்து மனத்தில் ஏற்றுக்கொள்ளவேயில்லை.

பிறகு திடீரென்று, "சீ! இதென்ன இப்படி உருகுகிறேன்? இன்று மாலை அடியார்க்கு அடியேனாக இருக்கத் துணிந்து புறப்பட்ட மனமா இப்படி........." இந்த நினைவு வந்து மோதியதும் தெளிவு பிறந்தது.

சற்று நின்றேன். அகக்கண் திறந்ததும் முகக் கண்ணும் எதிர்ப்படும் காட்சிகளில் கருத்தைச் செலுத்தியது; பார்வை நாற்புறமும் சுழன்றது.

ஒரு குஷ்டரோகி, கை கால் இரண்டும் விகாரமாகக் குறுகிப்போய், பார்க்கவே அருவருப்பைத் தரும் விதத்தில் மெதுவாக நடந்து வருகிறாள்.

முகமெல்லாம் ஒரே ரணம்; மூக்கே இல்லை. மாமிசம் அழுகிப்போன துர்நாற்றம் அவள் தூரத்தில் வரும்பொழுதே மூக்குக்கு எட்டிற்று.

இடுப்பில் இரண்டு வயதுள்ள ஒரு பெண் குழந்தை. சேலைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டு நடந்தது மற்றொரு பெண்; அதற்கு நான்கு வயதிருக்கும்.

ஐயோ, கடவுளே, இத்தகைய ஒரு ஜீவனுக்கும் ஒரு குடும்பம்; அதனுடைய பொறுப்புக்களா? உயிர் வாழ்வதே அவளுக்குச் சுமையாக வன்றோ இருக்கும்?

"சாமி, அய்யா! பசி காதை அடைக்கிறது. ஏதாவது கொடுங்கள்."

ஜேபியைத் தடவினேன். என்னிடம்தான் பணப்பை இல்லையே? கோபமாக வந்தது. அந்த வேசையைச் சபித்தேன். அவளாலல்லவா இந்தப் பரிதாபகரமான ஆத்மாவின் பசியைத் தீர்க்கமுடியாத நிலைமையில் இருந்தேன்?

"அம்மா. உன் வீடு எங்கே? இந்தக் குழந்தைகள் யாருடையவை? உன் புருஷன் என்ன செய்கிறான்?" என்றேன்.

"குழந்தை இரண்டும் என்னுடையது சாமி. நான் கருப்பூருங்க. இங்கே ஆசுபத்திரியில் ஊசிபோட வந்தேங்க. வழக்கமா ஊசிபோட்டதும் சோறு கொடுப்பாங்கள். இன்னிக்கி, என் தலைவிதி சோறு கிடைக்கவில்லை."

"ஏன் அம்மா? என்ன நடந்தது?"

"இந்தச் சோறு கிடைப்பதால்தான் நான் இங்கே வரேன் சாமி. ஊசி போட்டா ரொம்ப நோவுது. மாலையில் காச்சலும் அடிக்குது. இன்னிக்கி, வலி பொறுக்க முடியாதுபோல் தோன்றியதால் ஊசிபோடும் சமயம் நான் மறைவாக நின்றிருந்து, சாப்பாட்டில் போய் மட்டும் உட்கார்ந்தேன். பியூன் ஐயா கண்டுகிட்டாரு. என்னைத் துரத்தியடித்து வெளியில் தள்ளினாரு. இந்தப் பிள்ளைகளுக்காவது கொஞ்சம் சோறு கொடுக்கும்படி கேட்டேன். ஊசி போடாதவங்க இங்கே கிட்டத்தில்கூட வரப்படாது என்னுட்டாரு. நேத்து இரவு சோறு தின்னது, சாமி. இன்னும் பதினைந்து மைல் நடக்கவேணும்"

"உன் புருஷன் ஒன்றும் சம்பாதிப்பதில்லையா?"

"எனக்கு புருஷன் இல்லிங்க சாமீ."

"இறந்துபோய்விட்டானா?"

"இல்லிங்க, எனக்கு கலியாணமே ஆகல்ல. என்னை யாரு சாமி கட்டுவாங்க?"

"பின் இந்தக் குழந்தைகள்.........!"

"நான் பெத்தது சாமி! யாரோ காவாலிப் பசங்கள்........."

என்ன அநியாயம்? கடவுளே, இப்படியும் ஒரு சமூகமா? சற்று முன்பு தொண்டர்கள் பாடிப் புகழ்ந்த 'செந்தமிழ் நாட்டிலுமா' இவ்விதச் செயல்கள்?

அவளையும் குழந்தைகளையும் மாறிமாறிப் பார்த்தேன். அவள் சற்றும் வெட்கத்தினால் குன்றியதாகத் தெரியவில்லை. அவளுடைய உலகில், இதெல்லாம் சாதாரணமான தினசரி நிகழ்ச்சிகள் போலும்!

தூரத்தில் பழைய பொருள்களை ஏலம் கூறும் சத்தம். 'கெடிகாரம்; உயர்ந்தமேக்'—

முதல்தரமானபொருள். 1 அணு, 1 அணு, 1 அணு! ஒரு தரம், இரண்டுதரம், மூன்று தரம்..............''

குஷ்டரோகி பின்தொடர, ஏலம் கூறும் இடத்திற்குச் சென்றேன். என் மேல் வஸ்திரத்திற்காக எட்டு அணு கிடைத்தது. அதை அவள் கையில் வைத்து மீண்டும் கடைத்தெருவில் நடக்கலானேன்.

தொலைவில் தொண்டர்களின் பஜனை கீதம். அதன் சொற்கள் சிந்தையிற் புகுந்து கலக்கின.

*"இனியொரு விதி செய்வோம்—அதை*
*எந்நாளும் காப்போம்*
*தனியொருவனுக்குணவில்லை யெனில்*
*ஜகத்தினை யழித்திடுவோம்—வாழ்க பாரத...''*

ஒரு நவநாகரிக சாமான்கள் விற்கும் ஷாப். அங்குச் சற்றுத் தயங்கினேன்.

ஒரு 'பிரும்மாண்டமான கார்' பறந்து வந்து கடை எதிரில் நின்றது. பட்டு ஆடையும், நகைகளும் பளபளவென்று மின்ன, ஒரு பணக்கார ஸ்திரீ அவசரமாக இறங்கி உள்ளே நுழைந்தாள். நானும் தொடர்ந்தேன்.

"ஏய், யாரப்பா, கடையில்? மிக்க அவசரம்.''

"வாருங்கள் அம்மா, என்ன வேண்டும்? டேய், ஆறுமுகம், அம்மாவுக்கு வேண்டியதை உடனே எடுத்துக்கொடு.''

"எனக்கே என்ன வாங்குவதென்று புரியவில்லை. இன்று வீட்டில் ஒரு சீட்டு ஆட்ட விருந்து. அதில் ஜயித்தவர்களுக்காக நான்கு பரிசுகள் வேண்டும், ஒவ்வொன்றும் பத்து ரூபாய்க்கு மேல் போகாமல் நான்கு சாமான்கள் எடுத்துக்கொடுங்கள், பார்க்கலாம். சீக்கிரம் வா—விருந்தினர் ஆட்டத்தில் இருக்கும் சமயம் நான் ஓடிவந்திருக்கிறேன்; 5 நிமிஷத்தில் திரும்பிப்போகவேண்டும்.

பணக்கார சமூகத்தின் முன்னணியில் நிற்கும் இந்தப் பிரபுவின் மனைவிக்கு இல்லாத சாமானு? கடையே தலைகீழாகப் புரட்டப்பட்டது. சாமான்களை அப்படியும் இப்படியும் திருப்பிப் பார்த்து ஏதோ வாங்கினுள். 5 நிமிஷமென்பதும் அரைமணிக்கு ஓடிற்று.

"ஐயோ, மணி 8½ ஆகிவிட்டதே. சீக்கிரம் 'பில்' கொண்டுவா.'' என்று பறந்தாள்.

கணக்கும் கொண்டுவரப்பட்டது. அதைத் திரும்பிக்கூடப் பாராமல், கடைப் பையன் கையில் பணத்தைப் போட்டுவிட்டு, ஓடிப் போய் 'காரில்' ஏறிக்கொண்டாள்.

ஏறும் சமயம் அவள் கையினின்று ஏதோ நழுவி விழுந்த மாதிரி தோன்றியதால், கிட்டத்தில் சென்று பார்த்தேன்.

அம்மாவின் பணப்பை! 'கார்' இதற்குள் பத்துக்கெஜம் நகர்ந்துவிட்டது. அதை எடுத்துக்கொண்டு, ஓடிய வண்ணம், கையைத் தட்டிக் கூவினேன்; நல்ல வேளையாக மோட்டார் ஓட்டி திரும்பிப் பார்த்து, வண்டியை நிறுத்தினுன்.

அருகில்போய் "அம்மா, உங்கள் பண......''

"உனக்கு மூளையில்லை? என்ன தொந்தரவு இது. காரை ஏனையா நிறுத்தினீர்? பூரா பணமும் நான் கொடுக்கவில்லையா? அப்படியிருந்தால் வீட்டுக்கு ஆள் அனுப்பக் கூடாது? உங்கள் பணம் ஓடியா போய்விடும்?.........'' இப்படி என் முகத்தைப் பார்த்துச் சரமாரியாக வசை மொழிகள் தொடுத்தாள்! கடை ஆள் என்று நினைத்தாள்போலும்.

மௌனமாய்ப் பணப்பையை அவள் கையில் வைத்தேன். முகத்தில் உடனே ஒரு புன்னகை.

"ஓ, மிக்க வந்தனம். டிரைவர்! இனி போகலாம்'' என்று புறப்பட்டவள் ஏதோ நினைத்துக்கொண்டு "சற்று இரு'' என்ருள். பணப்பைக்குள் கை நுழைந்தது; ஒரு ரூபாயை எடுத்து வீசி என்னிடம் எறிந்தாள். அடேயப்பா, எவ்வளவு தாரளம்?

காரும் வேகமாகச் சென்றது. நான் குனிந்து ரூபாயை எடுத்துக்கொண்டேன். எனக்குச்

மனித சமூகத்திற்கென நூதன ஆராய்ச்சி

# மேதாவின்
# ஈரல் கட்டி நிவாரணி

நீண்ட ஆராய்ச்சியின் பயனுக இப் புதிய சிகிச்சை முறையைக் கண்டுபிடித்துள்ளோம். ஈரல் கட்டியைப் போக்கடிக்க கைகண்ட மருந்து.

குழந்தைகள் வியாதியைக் குறித்து கவலைப் படாதீர்கள்.

மேதாவின் ஔஷதம் வைத்திய உலகில் ஓர் புரட்சி உண்டுபண்ணிவிட்டது.

**கே. எஸ். மேதா & கோ.,**

**மதராஸ்.**

சிரிப்புச் சிரிப்பாக வந்தது. பணமே! உன் மகிமைதான் என்ன, மனிதரை தன் சுவபாவத்தையே மறக்கும் மிருகமாக ஒரு நொடியில் மாற்றுகிறாய் அல்லவா?

சற்று முன்பு இந்த ரூபாயை நான் சம்பாதித்திருந்தால் அந்தக் குஷ்டரோகிணிக்காவது உபயோகப்பட்டிருக்கும். ஆனால் அதெப்படி? இயற்கையின் சட்ட திட்டப்படி இந்த ஒரு ரூபாய் எந்த மூலியமாய், யாருக்குப் போய்ச் சேர உள்ளதோ, நமக்கென்ன தெரியும்? எல்லாம் விந்தைதானே.

முன்னால் செல்லும் பஜனை கீதத்தில் மனம் பதிந்தது.

*"முப்பது கோடி ஜனங்களின் ஸங்க*
*முழுமைக்தும் பொது உடைமை*
*ஒப்பிலலாத ஸமுதாயம்*
*உலகத்துக் கொரு புதுமை—வாழ்க (பாரத)"*

சிந்தனையில் ஆழ்ந்து சற்றுத்தூரம் நடந்திருப்பேன். பின்னால் இனிய பெண் குரல்கள், வீணையின் நாதம்போல், காதில் விழுந்தது. காலேஜ் மாணவிகள்.

"விமலா, இன் லிக்கி டைம்" ஆனால் பரவாயில்லை. நான் காந்தி ஜயந்தி மீட்டிங்குக்குப் போயிருப்பேனென்று அம்மா நினைத்துக் கொள்ளுவாள். கட்டாயமாய், அந்தப் புதுப் படத்தைப் பார்த்துத்தான் ஆகவேண்டும் இன்று."

"யாரடி, அதில் 'ஆக்ட்' செய்கிறது?"

"க்ரியர் கார்ஸன்! எவ்வளவோ நன்றாக இருக்கிறதாண்டி."

"விமலா, ஸரோஜா, நான் இன்று படம் பார்க்க வரலேம்மா."

"ஏண்டி சாந்தா? உங்கம்மாவிடம் நாங்கள் சொல்லவில்லேடி."

"இல்லேம்மா. எனக்கே எப்படியோ இருக்கிறது. காலையில் இன்று புறப்படுமுன் கதர் புடவை கட்டி, நேரத்தை முழுவதும் புனிதமான எண்ணங்களில் கழிப்பதென்று தீர்மானித்தேன்........."

போடி மடிசஞ்சி. நாங்கள் என்ன பாவமான காரியம் செய்கிறோமோ? உனக்குத்தான் எங்கிருந்தோ தேசாபிமானம் வந்துவிட்டதாக்கும்."

"ஆம், ஆம். நீ மட்டும் வராமல் இரு பார்ப்போம். உன்னை அப்படியே தூக்கி வண்டியில் போட்டுக்கொண்டு போய்விடுவோமாக்கும்."

எல்லோரும் கலீரென்று நகைத்தனர். இதன் ஒலியில், என் மனத்துள் ஒரு வகை இன்பம் பரவியது. பின்னால் இன்னொரு மாணவர் கூட்டம். இவர்கள் சம்பாஷணையையும் கேட்க ஆவல்கொண்டு சற்றே பின் தயங்கினேன்.

"டேய் ராமமூர்த்தி, அந்த 'ப்ளூஸாரி' தாண்டா, நான்சொன்னது."

"யாருடா அவள்?"

"அவள்தான்..........."

எல்லா இளைஞர்களும் சேர்ந்து சீட்டி அடித்துக் கும்மாளம் போட்டார்கள். முன்னால் செல்லும் பெண்கள் திரும்பிப்பார்த்து, தங்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டனர்.

"டேய், நோட்டீஸ் பண்ணிட்டா நம்மை." கிட்டப்போய் கொஞ்சம் கோட்டா பண்ணலாம் வாங்கடா."

"க்ருஷ்ணா, வேண்டாமடா. இவர்களுடன் நமக்கென்னடா வம்பு? வேகமாய் நடந்தால், ஊர்வலத்தில் போயாவது கலந்துகொள்ளலாம்."

"ஆமாண்டா ராமு. இன்று பேசுபவர் ரொம்ப அழகாகப் பிரசங்கம் செய்பவராம். கலெக்டர்கூட யாருக்கும் தெரியாமல் வந்து, பின்னால் நின்று கேட்கப்போகிறாராமே?"

"ஏய் அதெல்லாம் முடியாது. 'ப்ளூஸாரி' யின் கொட்டத்தை இன்று சற்று அடக்க வேண்டும். பிறகு வேண்டுமானால், மீட்டிங்குக்குப் போவோம்."

"சரிதாண்டா, வாடா, வேகமாய் நடப்போம்."

மறுபடியும் சீட்டி அடித்துக்கொண்டு கும்மாளத்துடன் நடந்தார்கள். என் சமீபம் வந்ததும், யாவரும் கதர் ஆடை தரித்திருப்பதைக் கண்டேன்.

"ஐயா, ஏனிவ்விதம் நடந்துகொள்கிறீர்கள்? வேண்டாமய்யா." இப்படி அவர்களைக் கெஞ்ச வேண்டுமென்று ஏதோ என்னைத் தூண்டியது. இந்த வார்த்தை சொன்னதுதான் தாமதம். உடனே என்னைச் சூழ்ந்துகொண்டார்கள்; சொக்காயைப்பிடித்து இழுத்தும், முகத்தின் அருகில் கையை நீட்டியும் ஏளனம் செய்ய ஆரம்பித்தனர்.

"உன் வேலையைக் கவனித்துக்கொண்டு சும்மா நட ஐயா! உனக்கேன் இந்த வம்பு?"

ஆம், உண்மைதான் எனக்கேன். இந்த வியவகாரமெல்லாம்? இக்காலத்து இளைஞர், சிறுமிகளுக்குத் தங்களைக் காத்துக் கொள்ளவா தெரியாது? புத்தி சொல்பவரை யார் சிந்துவார்கள்?

எல்லாம் அனுபவம் ஐயா, அனுபவம். மாணவர்கள் பாஷையில் "எக்ஸ்பீரியன்ஸ்" தான் வேண்டியிருக்கிறது, எதற்கும்!

*    *    *

ஒரு ஸோல்ஜர். வெள்ளையன்; என்னை முதுகில் தட்டி வழி விலக்கிக்கொண்டு கெடிகாரக் கடைக்குள் நுழைந்தான்.

நானும் சிந்தனை உலகிலிருந்து மீண்டு அவனைப் பின் பற்றினேன். கடைக்குள் ஒரே பரபரப்பு! ஸோல்ஜரின் கடிகாரம் பழுது பார்ப்பதற்காக அங்கு வந்திருந்தது. ஆனால் இயந்திரத்திற்கு எண்ணெய்போட்டு முடியவில்லை. இன்னும் சற்றுநேரமாகுமென்று சொன்னார்கள்.

ஸோல்ஜருக்கு இருப்புக் கொள்ளவில்லை— கடையைச் சுற்றி ஒரு முறை, இரு முறை, மும்முறையும் நடந்தார்.

பிறகு வாசலில் போய் நின்று, தமது 'லாரி' வந்து விட்டதைத் தெரிந்துகொண்டு உள்ளே திரும்பி வந்தார்.

என் சமீபம் வந்ததும் அழகிய புன்னகையுடன் என் கதர் சொக்காயைத் தம் விரல்களினால் பற்றித் துணியைக் கூர்ந்து நோக்கி,

"இது என்ன 'லினென்' மாதிரி இருக்கிறதே, இங்கே கிடைக்குமா" என்றார்.

"இல்லை, ஐயா, இது காதி"

"ஓ, அப்படியானால் நீர் ஒரு காந்தி ஆளாக்கும்". ஆம் என்று தலை அசைத்தேன். அவா முகத்தில் எவ்வளவு இளமை! வயது 25-க்கு மேலிருக்கும். ஆனால் நம் குழந்தைகளில் பத்துப்பிராயம் உள்ளவரிடம்கூட இவ்விதத் தெளிவான, பரிசுத்த முகச்சாயலை நான் கண்டதில்லை. பால் வடிந்தது என்றால் அதற்குப் பொருந்தும்.

அவரும் என்னை நோக்கிப் புன்னகை புரிந்தார். என் மனத்தைக் காந்தம்போலப் பற்றி இழுத்தது அப்புன்னகை. அதன் கனிவில் என் மனம் இன்புற்றது. இதற்குள் கெடிகாரம் பழுதுபார்த்து முடிந்ததால், வாங்கிக் கையில் மாட்டிக்கொண்டார்.

ரூ. 2—3—0க்கு 'பில்' கொணர்ந்து கொடுத்தார்கள். அதைப் பாராமல் வாங்கி ஜேபியில் திணித்துக்கொண்டு ஒரு ஐந்து ரூபாய் நோட்டைக் கடைக்காரர் கையில் வைத்தார்.

பாக்கிச் சில்லறையை அவர் எதிர்பார்க்கவில்லை; கடைக்காரர் எண்ணி எடுப்பதற்குள், டக்டக் என்று நடந்துபோய்த் தம் 'லாரி'யில் ஏறிக்கொண்டு புறப்பட்டார்.

கிளம்பும் சமயம், கழுத்தை வளைத்து என்னைத் திரும்பிப் பார்த்து, புன்சிரிப்புடன் கைகளை ஆட்டி விடைபெற்றுக்கொண்டார்

நான் பிரமை பிடித்ததுபோல் நின்றேன். எதிரில் உள்ளதைப் பார்க்க இயலாத வண்ணம் கண்ணீர் பார்வையை மறைத்தது. என் நினைவின்றிக் கை தானாக அவரைப்போய்வரும்படி சமிக்ஞை செய்தது.

என் உள்ளத்தில் திடீரென்று இவ்வளவு துயரம்? எதைப் பறிகொடுத்துவிட்டதற்காக இந்த வறண்ட உணர்ச்சி? துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டது.

'லாரி' எந்த வழி செல்கிறது பார்ப்போமென்று கடைக்கு வெளியில் வந்[illegible] அது கண்ணுக்கு மறைந்துவிட்ட[illegible]

தெருவில் மீண்டும் இற[illegible] முன்னே இழுத்துச் செ[illegible]

தொலைவில் கா[illegible] னைக்குரல் கேட்கி[illegible]

"பாரத சமுதாயம் வாழ்கவே—வாழ்க, வா[illegible]
பாரத சமுதாயம் வாழ்கவே. ஜய ஜய ஜய
பாரத................................."

ஜயகோஷம் மனத்தினுள் புகுந்து துளைத்தது. ஆனால் சற்றுமுன் தோன்றி மறைந்த பலவிதக் காட்சிகள்? அவற்றை எப்படி இங்கு இணைப்பது?

வேசைப் பெண், பணம் படைத்த சீமாட்டி, குஷ்டரோகிணி; வயது மூத்தவரின் பெருமை; நமது கர்வம், அடுத்தபடி தாழ்மை; இளமையின் முடுக்கு, ஆனால் அதிலும் சுடர்விடும் அறிவு; அன்னிய ரத்தம் என்ற உணர்ச்சியை மீறிப் பாய்ந்த ஓர் அன்பு; இவைகளுள் நிலவிய தொடர்புஎன்ன? எல்லாம் அந்தப் 'பாரத சமுதாயத்தின்' பல முகமான அமைப்புக்கள் தானோ? ஸகல வேற்றுமையையும் ஒன்று சேர்க்கும் ஓர் ஐக்கியமோ?

தொண்டரின் கோஷ்டியில் கலந்துகொண்டேன். என் உதடுகளும் பஜனைக் கீதத்தை முணுமுணுத்தது.

"மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை யினி யுண்டோ? புலனில்
வாழ்க்கை யினி யுண்டோ? நம்மி லந்த
வாழ்க்கை யினி யுண்டோ?"

மனத்துள் நிம்மதியும் சாந்தியும் நிலவியது.

# மாயாலோகம்

யோகி சுத்தானந்த பாரதியார்

பைத்தியம் பலவிதம்: ஆங்கிலத்தில் பித்தனைச் சந்திர-மனிதன் (Man in the moon) என்பர்; நட்சந்திர-மனிதன் (நட்சத்திரப் பைத்தியம்) என்றால் நமது துரைசாமிக்குப் பொருந்தும். நட்சத்திரம் என்றால் ஆகாசத்தைப் பார்க்கத்தேவையில்லை. பூலோகத்திலேயே நமது பத்திரிகை அட்டைகளைப் பார்த்தால் போதும். ஜிலுஜிலுவென்று முகச்சாயமும் முத்துப்பல்லுமாக வர்ணஜாலமோக சோக நட்சத்திரங்கள் நூற்றுக்கணக்காக மின்னும். துரைசாமியின் நட்சத்திரம் ரேவதி. அவ[illegible]த்தியமாக்கிய பூலோக நட்சத்[illegible]ன். எவ்வளவு பொருத்தம் [illegible]ப்பொருத்தம் கிரகப் [illegible]ம் பழைய மாமூல். [illegible] பொருத்தம், முகப் [illegible]ாருத்தம், கையில் [illegible] இருந்தாலே [illegible]ாழும்; அன்பு அழ[illegible]...... அவ்வளவுதானே! அந்த ஆழத்திலேதான் துரைசாமி மனமிழந்து பித்தானான்.

துரைசாமி சுவாமிமலை சாம்பசிவ கனபாடிகளின் ஒரே பிள்ளை. காசிராமேசுரம்போய், சங்கு விரதமிருந்து எவ்வளவோ பாடுபட்டு இந்தப் பிள்ளையைப் பெற்றார் பெற்றார். கனபாடிகள் வேகாத வெய்யிலில் கும்பகோணத்திற்கு நடையாய் நடந்து திவசம், தர்ப்பணம், கலியாணம் கார்த்திகைகளில் சம்புடம் சம்புடமாகச் சில்லறை சேர்த்துப் பையன் படிப்பிற்குக் கொட்டினார். பையன் காவேரிக் கரையிலிருக்குமட்டும் அப்பாவுக்கு மரியாதை வைத்து நடந்தான். முத்துப்போன்ற அத்தை மகள் சாரதாவையும் கலியாணம் பண்ணிக் கொண்டான். எதிர் ஜாமீனாகக் கிடைத்த இரண்டாயிரம் ரூபாயையும் எடுத்துக் கொண்டு பட்டணப்படிப்பிற்குக் கிளம்பினான். கிளம்பும்போதே குலாசாரங்களுக்குக் காவேரியில் கடைசி முழுக்குப் போட்டுவிட்டான்...... மனைவி சாரதாவுக்கு மட்டும் ஒரு புன்னகை முத்தம் கொடுத்தான். பிறகு......?

சட்டக் கல்லூரியில் உட்கார்ந்ததுமே துரைசாமிக்கு நாகரிக ஜன்னி கண்டுவிட்டது. அவனுக்கு "டிப்டோ சுந்தரம்" சிநேகிதனானதே அதன் காரணம். டிப்டோ ஹாட்பூட் பேர்வழி. தாட்பூட் என்று அப்பா பணத்தைச் சென்னை மாயங்களில் உதறிவிட்டுக் கவலையில்லாது திரியும் பிரகிருதி...... அவன் ஒருநாள் விளையாட்டாகத் துரைசாமியின் சிகையைப் பிடித்திழுத்து "இதென்னடா அநாகரிகம்? உலகெல்லாம் கிராப்பு வைத்துக்கொள்ளுகிறது" என்றான். உடனே துரைசாமி, ஸலூனுக்குப்போய் வைதிகக் குடுமியை வஞ்சந்தீர்த்து வெட்டியெறிந்து, கிராப்புத் தலையில் வாஸலைன் தடவிக்கொண்டு வந்தான். "சபாஷ் துரை, இந்தா இனும்" என்று டிப்டோ ஒரு க்ஷவரக்கத்தியைத் தந்து, "இந்த வேலையும் பழகு; இதுவே நாகரிகத்தின் சுக்லாம்பரதரம்" என்றான். முகக்ஷவரத்தில் பிள்ளையார் சுழி போட்ட நாகரிகம் ஹாட்பூட் ஸ்பூன் சாப்பாடு என்று ஏறிப்போய், சினிமா வெள்ளித்திரையில் வந்துமுடிந்தது...... துரைசாமி அசல் துரையாய்விட்டான். நிறத்திலன்று சட்டை மொட்டை தர்பாரிலேதான். துரை கும்பகோணத்திலிருந்தமட்டும் கீதை, உபநிஷத் ஸஹஸ்ரநாமம், சிவகவசம், தாயுமானவர் அருட்பா கீதகோவிந்தம் முதலிய பாடல்களை இனிமையாகப் பாடிவந்தான்...... டிப்டோவும் பாடுவான்...... ஆனால் அவன் பாட்டு

சினிமாவைப் பார்க்காத ஜென்மம் என்ன ஜென்மம்
சிங்காரம் பார்க்காத கட்டை யென்ன கட்டை

என்ற தினுஸில் இருக்கும்...... அந்த ஜென்ம சாபல்யத்தையும் அடையவேண்டுமென்று டிப்டோவுடன் துரைசாமி வெள்ளித்திரை—நாகரிகத்திலும் அடிவைத்து மனத்தையே இழந்தான்.

* * *

உலகத்திலேயே அதிக விளம்பரம் எதற்கு? ஜனங்களிடம் அதிகப்பேச்சு எதற்கு? சினிமாவுக்கு, சினிமா நட்சத்திரங்களுக்கு என்பதைச் சொல்லவேண்டுமா? நீங்கள் வேதாகம சாஸ்திரங்களைக் கரைத்துக் குடித்துச் சண்டமாருதமாகப் பேசுங்கள், எழுதுங்கள், யார் கேட்கிறார்கள்? "இதோ வருகிறது...... மோகனுங்கி... ஜகஜ்ஜோதி தில்குஷ்பாயில் நடனத்தைக் காணாத கண்ணென்ன கண்ணே......" என்று விளம்பரம் பறந்தால், ஜனங்கள் வெறிபிடித்து ஸினிமாக் கொட்டகைக்கு ஓடுகிறார்கள்...... ஊரெல்லாம் தில்குஷ் மயமாகிவிடுகிறது...... அதேமாதிரி சென்னை மாகாணத்தையே கொள்ளைகொண்ட படம் மாயாலோகம்......... அதில் தாசியாக நடிப்பவளே ரேவதிபாய். பூர்வநாமம் (கறுப்பாயி)

டிப்டோ கனபாடிகள் பிள்ளையை மாயாலோகத்திற்குக் கொண்டுபோய் சாக்ஷாத் ரேவதியுடன் கை குலுக்கி, அவள் பக்கத்திலேயே சோபாவில் உட்கார வைத்தான். நாகரிகத்தின் உச்சாணிக் கொம்பில் ஏறிவிட்ட

தாகத் துரையும் தன் வாசனைக் கைக்குட்டையை எடுத்து, சாயம் கலையாமல் முகத்தைக் கொஞ்சம் ஒற்றிக்கொண்டு, ரேணுகாவின் கடைக்கண் பார்வையைப் புன்னகையால் வரவேற்றான்............பைத்தியத்திற்கு விதை ஊன்றியாயிற்று......

மாயாலோகம் எப்படி.........என்றால் முத்த மழை என்றே-சொல்லவேண்டும்......நளாயணி படத்திலே நாற்பது முத்தக் காட்சிகள் நுழைக்கும் நமது டிரக்டர்கள், மாயாலோகத்தில் அரை நிர்வாணக்காட்சிகளை அப்படி நடனமாடவைப்பது வியப்பில்லை......இல்லாவிட்டால் இவ்வளவு கூட்டம் வருமா, இப்படிப் பணம் புரளுமா......இத்தனை பேருக்குப் பைத்தியம் பிடிக்குமா? நாகரிகம் வரவரக் கீழிருந்து மேலே ஏறி, மேலிருந்து கீழே இறங்கி ஆடைகளில் விசித்திரமான ஜாலம் செய்வதினாலேதான் இப்படிப் பைத்தியம் உண்டாகிறது என்று ஆராய்ச்சியாளர் முடிவு செய்கிறார்கள். அது எக்கேடுகெட்டுப்போகட்டும்...... சாது கனபாடிகள் பிள்ளை இக்கேடுகெட்டதே பரிதாபம்......

*   *   *

டிப்டோ பிதுரார்ஜிதத்தைக் காலிபண்ணும் மகானுபாவன்; எனக்குத் தலைவலி டாக்டர் செலவு நூறு ரூபா என்றால் ஊரிலிருந்து கதறிக்கொண்டு பணம் வரும். துரைசாமி "எனக்குக் காய்ச்சல்" என்று தந்தியடித்தாலும் "லங்கணம் பரமௌஷதம்" என்றே பதில் வரும். அவனுக்கிருப்பது வரதட்சிணைப் பணம் இரண்டாயிரமே. முதல் வருஷப்படிப்பில் ரூ. 500 கரைந்தது. இரண்டாம் ஆண்டு டிப்டோ அவனுக்குக் கொஞ்சம் வேதாந்தம் பேசினான். "அட துரை, இன்றைக்கிருப்பாரை நாளைக் காணோம். இருக்கும்போதே சுகிக்கவேண்டும். சட்ட நூலில் முட்டிக்கொண்டால் கண்ணாடிதான் வரும், சுகம் வராது...... வர்டா குஷியாயிருப்போம்...... உன்னை ரேவதிக்கு அறிமுகப்படுத்துகிறேன்" என்று அழைத்துச்சென்றான்......

மாயாலோகம் பார்த்ததுமே துரை இந்த லோகத்தை மறந்தான். மாயாலோகத்தில் தாசியாக நடித்து மினுக்கிக் குலுக்கும் ரேவதி தன் பக்கத்திலேயே உட்கார்ந்த பிறகு, காந்தம் இவன் மனத்தைக் கவராது விடுமா? திரையில் அவளுடைய ஆடல்பாடல்களைக் கண்டுகண்டு வெறிகொண்டான். மனத்திற்குப் பிடித்த சனியனுடன் பாக்கியிருக்கும் பணத்திற்கும் சனியன் பிடித்தது!

டிப்டோவுக்கு எத்தனையோ நட்சத்திரங்கள் பழக்கமுண்டு; ரேவதியிடம் தனிப்பெருங் காதலுண்டு. சுருள் சுருளான கூந்தலில் அவள் செருகும் மல்லிகைப் பூவின் அழகும், முல்லைச்


# இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபீஸ்: **"இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்"**

**வடக்கு பீச் ரோடு :: மதராஸ்**

லோகல் ஆபீஸ்கள்:

| | | |
|---|---|---|
| எஸ்பிளனேட் | திருவல்லிக்கேணி | மயிலாப்பூர் |
| தியாகராயநகர் | புரசவாக்கம் | மவுண்டு ரோடு |

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும்
பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன

| | |
|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ... ... | ரூ. 60,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் .... ... | ரூ. 33,48,561 |
| ரிஸர்வ் நிதி ... ... ... | ரூ. 32,00,000 |
| டிபாஸிட்டுகள் ... ... | ரூ. 10,0000000-க்குமேல் |

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N.P.B.    N. கோபால அய்யர், செக்ரடரி

சிரிப்பின் அழகுமே அவனை அந்தப்பாடு படுத்தின. கதையை வளர்ப்பானேன். டிப்டோ அறிமுகப்படுத்தக்கூடத் தேவையில்லையே...... ரேவதி துரைஸாமியைக்கண்டதுமே வலைவீசிப் பிடித்துவிட்டாளே.........கண்ணெறுத்த பிறகு கை குலுக்கியதில் வியப்பென்ன? ரேவதி டிப்டோவையும் மிஸ்டர் துரையையும் ஆவலாக வரவேற்றாள். டிப்டோவின் பணம் அவளை வசீகரித்தது. இதுகாறும் கொழுத்த பிரமசாரியாயிருந்து இன்னும் மனைவியை அனுபவிக்காத துரைசாமியின் அழகும், காவேரி நெல்லையுண்டு வளர்ந்த தளதளப்பும் முகக் களையும் அவளை வசீகரித்தன. டிப்டோவைவிட ரேவதி துரைக்கு அதிகமான புன்னகை யமுதந் தருகிறாள் என்பதில் நண்பனுக்கும் பொறாமை வந்துவிட்டது. பொறாமையின் செவிலித்தாயே ஆசைதானே. ரேவதி தன் மோட்டாரையே அனுப்பி அடிக்கடி துரைசாமியை அழைத்து வந்து வசப்படுத்திக்கொண்டாள். இருவரும் இரவு நேரங்களில் மரீனாப்பக்கம் மோட்டாரில் செல்வதுண்டு. இப்படிப் பழகிய பிறகு, துரைக்கு ரேவதியே தேவதையாய்விட்டாள். அவள் பெயரே காயத்ரியானது. அவள் உபசொல்லே மகா வாக்கியமானது. இருவரும் கண்ணே முத்தே என்று கொஞ்சிக்குலாவினர். ஒருநாள் ரெவதி 'படிப்பை விட்டுவிடுங்கள்; இங்கேயே இருங்கள்' என்றாள்.

சட்டப் படிப்பு அத்துடன் சரி. மறுநாள் முதல் துரை ரேவதியை அடைக்கலம் புகுந்தான். பத்து நாள் அவள் அவனுக்குப் பாட்டு நடனம் பயிற்றினாள். ஓர் ஆங்கில நாவலைக்கொண்டு மாயாஜாலம் என்ற நாடகத்தை அவன் எழுதினான்; அவள் தன் பெயரைப் போட்டுப் படம் பிடித்தாள். துரையும் அதில் நடித்தான். மாயாஜாலம் சிற்றின்பக் களியாட்டம், குடியும் கூத்தியும் கூத்தாடும் அழிநாடகம்...அதில் ஏராளமான பணம் வந்தது.........ஆனால் துரையின் நடிப்புக் கூலியைக்கூட ரேவதி வாங்கித் தன் பெயரில் பாங்கிற்கு அனுப்பிவிட்டாள். ஓராண்டு துரையுடன் அவள் இணைபிரியாமல் இருந்தாள். பணங் கொழுப்பேறியதும் "மிஸ்டர் துரை, நமது காரியதரிசியாயிரும்" என்று தன் விசிறிகளுக்குக் கடிதம் எழுதும் வேலை தந்தாள். பிறகு படிப்படியாக அவள் பெயர் உயரவே இவன் நிலை தாழ்ந்தது. அவள் பாட்டுக் கச்சேரிக்கோ ஷூட்டிங்குக்கோ போகும்போது இவன் வெள்ளிக் தெர்மோஸில் காப்பி கொண்டு செல்வது, பலகாரம் வாங்கி வருவது, அவளைப்பற்றி ஆங்கிலத்திலும் தமிழிலும் பத்திரிகைகளுக்கு வர்ணித்தெழுதுவது, அவள் ஆட்டத்தைப் புகழ்ந்து பேசுவது, எந்தப் பத்திரிகையாவது அவளைக் குறைகூறினால் அவள் படத்தைப் போடாது போனால் அதை மட்டந்தட்டுவது, அந்தப் பத்திராதிபருக்கு விளம்பரத்தில் மண் போடுவது, சமயம் வந்தால் உதைப்பது......இப்படிப் பட்ட வேலைகளிற் சிக்கிக்கொண்டான் கனபாடிமகன். முன்னே கண்ணா என்றழைத்தவள் இப்போது மிஸ்டர் துரை என்றழைத்து துரை என்றழைத்து இப்போது அடே துரை என்பதில் வந்திறங்கியிருக்கிறாள். இதுகூடச் சிலருக்குப் பொறாமை. 'தெருவில் வாராளோ என்னைத் திரும்பிப் பாராளோ" என்று ஊரைச்சுற்றித் திரியும் நட்சத்திரப் பித்தருக்குத் துரை எப்போதும் ரேவதியுடனிருக்கும் பாக்கியம் பெற்றதில் பொறாமைதான். "அவள் கால் செருப்பைத் துடைக்கும் பேறு பெறுவேனா..................அவள் வீட்டைக் கூட்டும் பேறு பெறேனா" என்று ஏங்கும் மலசேகராழ்வார்கள் எத்தனையோ பேர்...துரையிடம் ரேவதியைக்காண சிபார்சுக்கும் வருவதுண்டு.

டிப்டோவின் பொறாமை கொடிய பகையாக மாறியது. நான் அறிமுகப்படுத்தியவன் ரேவதியின் அன்பைப்பெறவாவது... சும்மா பார்த்துப் பாட்டுக்கேட்டு வருவான் என்றெண்ணினேனும்........... ஆசாமி உள்ளே அவளை வலை போட்டுப்பிடிக்கவாவது. என்னை விட இவன் அழகனா பணக்காரனா...... தரித்திரப்பயல் நான் கற்றுக்கொடுத்த நாகரிகத்தால் ஆளானான்......... இவனை விட்டேனா.! என்று டிப்டோ ரேவதிக்குப் பொன்வலை வீசினான். அதன் பலனே பிராணநாதா என்பதிலிருந்து அட துரை காப்பி வாங்கிவா என்பது வரையில் மரியாதை இறங்கிவிட்டது. அடுத்த மரியாதை காத்திருக்கிறது......என்ன?

ஒரு நாள் ரேவதி கச்சேரிக்காகவும் ஷூட்டிங்குக்காகவும் தன் விசிறிகளுடன் கும்பகோணம் வரநேர்ந்தது.........துரைசாமியும் மாயாஜாலத்துடன் வந்தான். கும்பகோணம் தன் ஊர் என்பதைக்கூட அவன் மறந்துபோனான். "அட துரைசாமி, பத்துப்பேருக்குச் சாப்பாடு வாங்கிவா...........இந்தா பணம், ஜல்தி" என்று ரேவதி கட்டளையிட்டாள். துரைசாமி நல்ல இளப்பெது என்று விசாரித்துக்கொண்டே ஷண்முக விலாஸ் போஜனசாலைக்கு வந்தான். உள்ளே நுழையும்போதே முருங்கைக்காய் சாம்பாரும் மைசூர் ரசமும் அவனை வரவேற்றன.

ஷண்முக விலாசம் ஒரு ஆசாரமான ஓட்டல். அதில் யாரும் சமைக்குமிடத்திற் செல்வதில்லை. அங்கே இரண்டு பெண்களே காரியம் பார்க்கிறார்கள். வேறு ஆண்பிள்ளைகளில்லை. வெளியே ஒருவர் கணக்கெழுதுகிறார். உள்ளே சென்றதும் "சந்தி ஜபம் பண்ணினீர்களா" என்றொரு கிழவர் விசாரித்துச் சாப்பாடு போடுகிறார்......... நல்ல ஆசார சீலர்களே அங்கே சாப்பிடுகிறார்கள்.

துரைசாமி ஷண்முக விலாசத்தில் அடுக்குப் பாத்திரங்களுடன் புகுந்ததும், ஒருவர் மரியாதையாக வரவேற்று, கால்கைகழுவச் செய்து, உள்ளே அழைத்துச் சென்றார். அங்கிருந்த கிழவர் "ஐயா மாத்யானம் ஆனதா?" என்று ஆளைப்பார்த்தார்...... துரைசாமியும்

கிழவரைப் பார்த்தான்...... திடுக்கிட்டான்... அவனுள் ஏதோ வேதனை செய்தது. சந்தி ஜபத்தை எல்லாம் நட்சத்திரார்ப்பணம் செய்து பட்டணம் நாகரிகத்தில் மூழ்கிப் பத்தாண்டுகளாயின. இருந்தாலும் கிழவர் சொன்ன பிறகு "முன்னினைப்பு வந்தது" "ஆகா, இதோ மாத்யானம் செய்கிறேன்" என்று துளசிமடத்தருகில் ஆசமன்யம் அர்க்யாதிகளைச் செய்து, காயத்திரி செய்யப் பூணூலைத் தேடினான். பூணூலும் நாகரிகத்தீயில் சாம்பலானதை அவன் அப்போதே அறிந்தான்.........மானச காயத்ரி செய்து சட்டையைக் கழற்றாமலே அவன் பலகையில் உட்கார்ந்து சாப்பிட்டான். அடுக்குப்பாத்திரத்தில் பத்துப்பேருக்குச் சாப்பாடு வைக்கச் சொன்னான்.

துரைசாமிக்கு அன்று பரிமாறிய சாந்தம்மாள் அவனைத்தன் கண்ணால் சத்திர சிகிச்சை செய்து தீர்த்தாள்... கிழவர் அவன் சட்டை போட்டுச் சாப்பிடுவதைப் பற்றிப் பேச்செடுத்து, "கேட்டீர்களா கதையை......"என்ற பல்லவியுடன் தன் மகனுடைய போக்கைப் பற்றி ஒரு பிரசங்கம் செய்தார். "எனக்கு ஒரே பிள்ளை...நல்ல பையன். நான் வைதீகத்தில் அரையும் காலுமாகச் சிரமப்பட்டுச் சம்பாதித்து, அவனை பி. ஏ. வரைக்கும் படிக்க வைத்தேன். அப்புறம் அவனுக்குக் கலியாணம் நடந்தது. வரதட்சிணை இரண்டாயிரம் கிடைத்தது. அதை எடுத்துக்கொண்டு சட்டம் படிக்கப் பட்டணம்போனவன்தான்...... அப்படியே எங்கோ சினிமாவில் சேர்ந்துவிட்டானாம். யாரோ ஒருவளுடன் தத்தாரியாகத் திரிகிறானாம்......... இதைக் கேட்டதும் பிள்ளை என்ற அபிமானமே போய்விட்டது. அவன் முகத்தில் விழிக்கக் கூடாதென்று உறுதிகொண்டேன். நாட்டுப்பெண் மகா புத்திசாலி, பதிவிரதை, வாழாபட்டியாளானாள். அவள் தாயார் சாந்தம் மகா உத்தமி...... அவள் விதவை.

"இந்தப் பிள்ளையாண்டான் கெட்டகேட்டை நினைத்து ஏக்கம் பிடித்தே தாயார் யோகம் கண்ணைமூடிச் சென்றாள். காலம் விபரீதமாய் விட்டது. வைதிக விருத்தி நடக்கவில்லை. கனாந்தம் அத்யயனம் செய்தவர்களுக்கு ஒரு க்ஷவரக் காசு கொடுப்பாரும் அரிதாயினர். சினிமாவுக்கும் முகச் சாயத்திற்கும் அதற்கும் இதற்கும் தாம் தூம் என்று பணத்தை அள்ளி விடுகிறார்கள். அப்பன் திவசம் மூடக் கொள்கையாம். அதற்கு வைதிக தட்சிணை நாலணா தருவது மூடத்தனமாம். இப்படிக் காலம் மாறவே, எனக்கு இந்த யோசனை தோன்றியது.

"நாங்கள் பிழைக்கவேண்டுமே......சுசிருசி ஆசாரமாக உணவு தருவதையே தொழிலாகக் கொண்டு, ஏதோ பிழைக்கிறோம்......ஐயா...... தங்களுக்கு எந்த ஊர்......? சாப்பாடு யாருக்கு ......? தாங்கள் சினிமாக்காரரா......? துரைசாமியைக் கண்டதுண்டோ?........."என்றெல்லாம் அந்த முதியவர் பரிவுடன் கண்ணீர் ததும்பக் கேட்டார்..."தங்கள் நாட்டுப்பெண் எங்கிருக்கிறாள்?" என்று ஆவலாகக் கேட்டான்......துரை. "அந்தப் பெண்ணே இங்கே சமைக்கிறாள். அவள் தாய் சுற்றுக்காரியம் பார்க்கிறாள். நான் நிர்வாகம் செய்கிறேன். அவள் அண்ணன் எனது நண்பரொருவர் அதோ வாசலில் இருந்து கணக்கெழுதுகிறார்... ஊரில் பெரிய மனிதர்களுக்கு அடுக்குப் பாத்திரங்களில் சாப்பாடு கொண்டுபோக ஓர் ஆள் வேண்டும். நல்ல ஆசாரமுள்ளவனாக யோக்கியனாக, இருக்கவேண்டும்......" என்று கிழவர் தமது கதையை முடித்தார்.........

துரைசாமி முகம் வெட்கத்தால் சிவந்தது இரக்கத்தால் வாடியது, தன் இழி நிலையை நினைந்து கண்ணீரால் நனைந்தது........."மாமா அப்படிப்பட்ட ஆள் இருக்கிறான்......சாயங்காலம் வருவான்" என்று துரை அடுக்குப் பாத்திரங்களை நிரப்பிக்கொண்டு, ரேவதியிடம் போய்ச்சேர்ந்தான். அப்போதுதான் ரேவதியும் டிப்டோவும் விஸ்கி குடித்துச் சுருட்டுப் புகைத்தனர். ரேவதி-என்னடா துரைசாமி இவ்வளவு நேரம். நாங்கள் சாப்பிட்டு ஷூட்டிங்கிற்குப் போவதா, உன்னைப்போல வீட்டுப் பெருச்சாளியாயிருப்பதா......ஊம்......?

துரை: என்னடி அதிகாரம் பறக்கிறது? .........நாளைமுதல் சாப்பாடு வாங்கிவர வேறு ஆள் வைத்துக்கொள்.

ரேவதி: என்னடா என் சோறு தின்ற மதமா? போ வெளியே நீ அனாவசியம்......... தார்வார் இவனைக் காவேரிக் கரையில் தள்ளி விட்டு வா......

தார்வான் நட்சத்திர தர்பாரில் இட்ட கட்டளையை அப்படியே நிறைவேற்றிவிட்டான்.

துரைசாமி அதற்குக் காவேரியில் ஒரு முழுக்குப் போட்டுவிட்டு, ஆடையைத் துவைத்து உலர்த்தியணிந்து, ஒரு பூணூல் வாங்கியணிந்து விபூதி பூசிக்கொண்டு சந்தி ஜபத்தை முடித்து, கும்பேசரைத் தரிசித்துக்கொண்டு சாயங்காலம் ஆறு மணிக்கு ஷண்முக விலாசத்தில் நுழைந்தான். கிழவர் சாம்பசிவ கனபாடிகள் அனுஷ்டானங்களை முடித்து, சிவப்பழமாக இந்திராக்ஷி சிவகவசம் பாராயணம் பண்ணிக் கொண்டிருந்தார். அருகே சாரதாவும் மாமனாருடன் மந்திர ஜபம் செய்துகொண்டிருந்தாள். அப்போது துரைசாமி விம்மிவிம்மி அழுது கொண்டு "அப்பா" என்று காலில் விழுந்தான். "வாடா துரையே" என்று அள்ளியணைந்தார் தந்தை. "நாதா" என்று நமஸ்கரித்தாள் சாரதா........."தெய்வம் கண் திறந்ததா" என்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள் சாந்தம்மாள்......"சுதர்மமே சுகம்" என்று துரை தழுதழுத்துரைத்தான்.

தொடர்கதை

# மல்லிகைச் செண்டு

கே. சுந்தரம்மாள்

— 3 —

முனிஸிப் ஊருக்குப் புறப்படும் முதல் நாள் இரவு, அவர்களுக்கு ராஜுவின் வீட்டில் விருந்து ஏற்பாடாயிற்று. பக்கத்து வீட்டு வக்கீலையும் கூப்பிட்டிருந்தார்கள். சாப்பாடு முடிந்ததும், ஆண் பிள்ளைகள் மாடி ஹாலில் உட்கார்ந்து தாம்பூலம் சகிதம் சபை கூடினார்கள். பெண்கள் சாப்பிட உட்கார்ந்தார்கள். பேச்சிற்குக் கேட்பானேன். அதிலும் முனிசிப்பின் மனைவி ஊருக்குப் போகிறாள். அவளைத் தோத்திரம் பண்ணுவதும், அவள் வீட்டுப் பூனைக்குட்டியின் சமர்த்தைப்பற்றிச் சிலாகிப்பதுமாக இருந்தது பெண்டுகள் சபை. இவர்களுக்குக் குழம்பைப் பரிமாறிவிட்டுச் சமையல் அறைத் தூணில் சாய்ந்து தூங்க ஆரம்பித்த பெரியவரை எஜமானி அம்மாள் நாலைந்து தடவை கூப்பிடும்படி ஆயிற்று ரசகட்டம் வரும்பொழுது. அரைமணி சாவகாசம் அவருக்குக் கிடைத்துவிட்டது. ஜீஜி, குழந்தைகள் யாவரும் முதல் பந்தியில் சாப்பிட்டுவிட்டார்கள்; சிலர் தூங்கினர்; சிலர் ஸ்திரீ சபையிலும், சிலர் புருஷ சபையிலும் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தனர். ஜீஜி வயது பெண்கள் யாருமில்லாததினால் அவள் ஒன்றிலும் கலந்துகொள்ள முடியவில்லை. அதுவும் அந்தச் சமயம் சாதகமாகவே தோன்றிற்று.

"அம்மா! எனக்கு லேசாகத் தலையை வலிக்கிறது. அந்த அறையில் படுத்துக்கொண்டிருக்கிறேன். போகும்பொழுது கூப்பிடு" என்றாள் ஜீஜி.

"பாவம் ஐந்தாறு நாட்களாகச் சாமான் கட்டுவது முதலியவைகளுக்காக அலைந்தது குழந்தைக்கு ஆகவில்லை. ஜீஜி! ராஜுவைக் கேட்டுத் தலைவலி மருந்து வாங்கிப் போட்டுக் கொண்டு சற்றுத் தூங்கு. நாங்கள் சாப்பிட்டதும் சூடாக ஒரு கப் காபி தருகிறேன். சரியாகப் போய்விடும். நாளைப் பிரயாணம் வேறு" என்றாள் ராஜுவின் தாயார்.

"என்ன செய்வது சொல்லுங்கள். என்ன சமையல்காரன் வேலைக்காரர்கள் இருந்தாலும் குழந்தைகள் விஷயத்திலும் பொறுப்பான காரியத்தையும் நாம்தானே கவனிக்க வேண்டியிருக்கிறது. இப்படி வருஷத்திற்கு ஓர் ஊராக மாற்றுவதே ஜோலியாகப்போய் விட்டது. நினைவு தெரிந்த நாளாக ஜீஜி குழந்தைகளைக் கவனிப்பதிலோ, கைக்குதவியாக நமக்கு வேண்டியவைகளைச் செய்யவோ மிகவும் உதவியாக இருப்பாள். படிப்புமட்டிலும் ஒருபக்கம். பன்னிரண்டு வயதுமுதல் சமையல் செய்வாள். போன வருஷ மாற்றலில் அவள் படிப்பு மிகவும் கஷ்டமாகப் போய்விட்டது. உங்கள் ராஜுவின் முயற்சியால்தான் பாஸாச்சு. உங்கள் முன்னாகச் சொல்லக்கூடாது. ராஜு தங்கமான பிள்ளை. இந்த நாளைய தறிதலைகளைப்போல் டாம்பீக சுவபாவமே இல்லை. குடும்பத்திற்கு ஒத்த பிள்ளை. மூத்தபிள்ளை இப்படி இருப்பதினால் உங்களுக்கு மிகவும் நன்மை. இந்த ஜாதி ஒன்று குறுக்கிடாவிட்டால், ஜீஜியை ராஜுவுக்குக் கொடுத்துவிடுவேன். இந்தக் காலத்தில் இவையெல்லாம் யார் பார்க்கிறார்கள் என்றாலும், எங்காத்திலே இவர் சம்பிரதாயப் பழக்கங்களை விடமாட்டார். மேலும் ஏழெட்டுச் சம்பந்தங்கள் நடக்கவேண்டிய இடத்தில் அனாவசியமான வார்த்தை ஏற்பட்டுவிடும். இது விஷயத்தில் எனக்கு மிகவும் குறைதான்"

"நன்றாகவிருக்கிறது. ஜீஜி எங்கள் வீட்டிற்கு வர அவ்வளவு பாக்கியம் செய்திருக்கிறேனா? அவள் குணத்திற்குத் தங்கமான இடம் கிடைக்கும். நீங்கள் வரதக்ஷிணைக்கு அஞ்சப்போகிறீர்களா? நல்ல அழகுள்ள ஐ. ஸி. எஸ். கிடைப்பான் பாருங்கள்"

இவர்கள் பேச்சு ஜீஜியின் மனதை எவ்வளவோ செய்தது. இவர்கள் சாப்பாடு முடிய ஒரு மணி அவகாசம் செல்லும் என்ற தீர்மானத்துடன், காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்பதற்கிணங்க வாசற்பக்கமாக உள்ள தாழ்ந்த ஜன்னல் மீது உட்கார்ந்து கொண்டாள்.

"மாடியில் அவர்களுக்குச் சந்தனம் தாம்பூலம் எல்லாம் வழங்கிவிட்டு, அவர்கள் சுவாரஸ்யமாக, ஹிட்லர், ஜப்பான் மண்டைகளை உருட்டிக்கொண்டிருக்கும்பொழுது, மெள்ள அவ்விடத்தைவிட்டு நழுவிக் கீழே வந்தான். படியிறங்கினதுமே இருட்டில் காதலின் கண்களுக்கு ஜீஜி உட்கார்ந்திருந்தது தெரியாமல் போகமுடியுமா. ஜன்னலுக்குப் பக்கத்திலுள்ள ஈஸிச்சேரில் சாய்ந்துகொண்டான் ராஜு. பிறகு,

"கூட ஒருவருமில்லையா? இந்த இருட்டில் எதற்காக உட்கார்ந்திருக்கிறாய்?"

"நீங்கள் எதற்காக இப்படி வந்து உட்கார்ந்தீர்கள். அதற்காகவே நானும் உட்கார்ந்தேன்"

"நான் வருவேனென்பது என்ன நிச்சயம்?"

"காந்தத்தின் சக்தி இரும்பை இழுக்கும்" என்பதை யாராவது மறுக்க முடியுமா?

"ஆமாம். எல்லாம் இந்த ஒருநாள்தானே. பிறகு பகல்கனு கண்டுகொண்டிருக்கவேண்டியதுதான்"

"பொறுத்தார் பூமியாள்வார்" என்று சொல்லிக்கொண்டே, ஒரு மல்லிகைச் செண்டை ஜன்னலின் கம்பி இடை வெளியினால் நீட்டினாள்."

"அதை வாங்கிப் பார்த்து முகர்ந்தபடியே ஆஹா! என்ன மணம், அன்ன அழகு! எங்கே வாங்கினாய்? வர்ண ஜாலங்களினால் பகட்டுகிறது. இயற்கையான மல்லிகை வாசனையைத்தவிரச் செயற்கை வாசனை வேறு வீசுகிறது"

"அன்பின் பரிசை விலைகொடுத்து வாங்க முடியுமா? அது நூதனமில்லாமல் அமைய முடியுமா?"

"நீயா கட்டினாய்? இவ்வளவு வர்ண புஷ்பங்கள் எங்கே கிடைத்தன?"

இன்று சாயங்காலம் உங்கள் வீட்டிற்கு வந்தபொழுது உங்கள் அம்மா யாவருக்கும் மல்லிகைப் புஷ்பம் கொடுத்தார். அதில் ஸ்பெஷலாக என் தலையில் ஒரு சுமை வைத்தார். புஷ்பம் வாங்கினது தாங்கள்தான் என்று ஒருவருமே சொல்லவேண்டாம். உங்கள் தங்கைமார் தலையில் எப்பொழுதும் புஷ்பமிருக்கும். மாலை நேரங்களில் உங்கள் வீட்டிற்கு வந்தால் சுவாமி படங்களெல்லாம் மாலைகளுடன் காட்சியளிக்கும். "ராஜுவிற்குக் குழந்தை முதல் மல்லிகைப்பூ என்றால் மிகவும் பிடிக்கும். அதனால் பூ வாங்கினால் அவனுக்கும் ஒரு பங்கு அவன் மேஜைமீது வைத்துவிடுவேன். அதை முகந்துபார்த்து ஆனந்தப்படுவான்" என்று உங்கள் தாயார் அடிக்கடி சொல்லுவார்கள். சிலசமயம் என் தலையிலுள்ள பூவை எடுத்து முகருவதை நான் அறியாமலிருக்கமுடியுமா? இன்று என்ன பரிசு கொடுப்பது என்று சிந்தனையின் முடிவு தெரியாத நிலைமையில் உங்கள் தோட்டத்தின் பக்கம் சென்றேன். சந்தியா தேவியின் சாயையில் விதவிதமான கனகாம்பரங்கள் என் மனதைக் கவர்ந்தன. மனமும் ஓர் முடிவிற்கு வந்தது. மல்லிகைப் பூவிற்கு என்னசெய்வது என்று நினைக்கும்பொழுது சூடிக்கொடுத்த நாச்சியாரின் செய்கை தோன்றவே, பூக்களைப் பறித்துக்கொண்டு என் வீட்டிற்குச் சென்றேன். தலையிலுள்ள மல்லிகையைச் சேர்த்துக்கொண்டு, செண்டு கட்டிமுடித்தேன்.


# வான்கார்ட் பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

**308-309, லிங்கசெட்டி தெரு, மதராஸ்**

நெருப்பு—மோட்டார்—கப்பல், தொழிலாளர் நஷ்டஈடு & எல்லாவிதமான இன்ஷ்யூரன்ஸும் செய்யப்படும்.

எமது ஏஜண்டுகளாகவும், ஆர்கனைஸர் அல்லது பிரதம ஏஜண்டுகளாக வேலை செய்ய அனுபவமுள்ள நல்லவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உண்மையில் திறமையுள்ளவர்களுக்கு நல்ல சந்தர்ப்பம்.

H. D. ராஜு,
ஜெனரல் மானேஜர்.


218546

உயர்தர சென்ட் பாட்டிலைக் காலிசெய்தேன். மிகுந்த புஷ்பத்திற்குள் அதைச் சிறைப்படுத்தித் தலையில்வைத்துக்கொண்டேன். இப்பொழுது அதற்கு விடுதலை கிடைத்தது''

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்" என்பது பொய்யாகுமா! எல்லாம் சரிதான். பட்டணம் சென்றால் என் நினைவு......'' என்று முடிக்குமுன்,

''அந்த ஓலையைத் திருப்பி வாசியுங்கள். இருக்கும்பொழுதே இந்த அவநம்பிக்கை எண்ணம் வந்துவிடுகிறதே. பிரியும்பொழுது மனத்தாங்கலுடன் செல்லவேண்டுமென்பது உங்கள் விருப்பமா?''

"என் மனம் அடையும் தாபம் அப்படியெல்லாம் பேசத்தோன்றுகிறது. போகட்டும், கடிதமாவது எழுதுவாயா?''

''எழுதலாம். ஆனால் நான் தங்குவது மூன்றாவது இடம். அத்திம்பேர் குணம் ஒருமாதிரி. பெண்களைக் கட்டுப்பாட்டிற்குள் நடத்த வேண்டும் என்ற கொள்கையையுடையவர். இருந்தாலும், நான் உங்கள் ஸ்கூல் விலாசத்திற்கு எழுதுகிறேன். நீங்களும் காலேஜ் விலாஸத்திற்கு எழுதுங்கள். ஆனால் எதுவும் அத்தி பூத்தாற்போல் இருக்கவேண்டும். இரண்டாவது தவறி யார் கையிலாவது கடிதம் அகப்பட்டாலும் வித்தியாசம் தோன்றாத முறையில் கடிதம் இருக்கவேண்டும்''

''அப்படியே. உங்கள் சித்தம் என் பாக்யம். அதிருக்கட்டும், பஸ்ட்கிளாஸ் பாஸிற்குப்பரிசு? அதை இப்பொழுது கொடு?''

''அதுதான் கொடுத்தேனே''

''இதுதானா? வேறு......'' என்று சிரித்தான்.

''ஓஹோ! சரிதான். இந்தமாதிரி ஏதாவது அசட்டுத்தனத்திற்கு இடமிருக்கக்கூடாது என்பதற்காகவே இந்த இடத்தைக் 'கண்டுபிடித்தேன். கிணற்று ஜலத்தை வெள்ளங் கொண்டுபோய்விடாது. பீமசேனனுக்குத் தருமர் சொன்ன வாக்கியத்தை உங்களுக்கு நான் நினைப்பூட்டுகிறேன்'' என்று சிரித்தவாறே கூறினாள்.

''தருமர் என்ன சொன்னார்?'' என்று கம்பியின் வழியாகக் கையை விட்டு, அவள் கையை இறுகப்பிடித்தான்.

''காலத்தைக் குறிப்பிடுவதற்காக, விறகு பச்சையாக இருக்கிறதா? கூடியசீக்கிரம் காய்ந்துவிடும்'' என்றாராம். அதுபோல் நாம் ஸ்வாதந்திரியமாக நடக்கும் காலம் வருமளவும் மரியாதையாகவே நடக்கவேண்டும். ஒரு விதக்கட்டுப்பாட்டிற்குள் அடங்கி நடப்பதே எந்த விஷயத்திற்கும் நன்மை தரும்.''

''அப்பா! ஸ்த்ரீ சாகஸம் என்பது சரியாகவேயிருக்கிறது. மனிதனைக் கொல்லாமல் கொல்லுகிறாய். உம், உன் இஷ்டப்படியே நடக்கட்டும் சக்தியை மீறும் சக்தியேது''

''மிகவும் நல்லது! எழுந்துபோய்விடுங்கள். அவர்கள் கையலம்பும் சப்தம் கேட்கிறது. தலைவலி என்று சொல்லிவிட்டு இவ்விடம் வந்தேன். உங்கள் அம்மா உங்களிடம் மருந்து வாங்கிக்கொள்ளும்படி சொன்னார். நான் கொடுக்கத் துடிக்கும்பொழுது வாங்குவது எப்படி?''

''அப்படியா விஷயம்? அதோ உன் பக்கத்திலிருக்கும் ஷெல்பில் இடதுபக்கமாக ஒரு பாட்டில் இருக்கிறது அதை எடு. உன்னைப் பொய்யாக்கவேண்டாம்''

அதை எடுத்தாள். சட்டெனத் தன் கையில் வாங்கிக்கொண்டான்.

''வெறும் நெற்றியில் தடவினால் எரிச்சலெடுக்கும். அந்த நாளில் யுத்தத்திற்குச் செல்லும் கணவன்மார்களுக்கு மனைவிமார்கள் வீரதிலகம் இடுவார்களாம் என்று படிக்கிறோமல்லவா! நீ படிக்கச்செல்வதால் நான் உனக்கு வாசம் மிகும் திலகமிடுகிறேன்''என்று விரலால் தைலத்தை எடுத்து அவள் நெற்றியில் பொட்டுவைத்தான்.

''என்ன அக்ரமம். நான் மாத்திரம் உங்களுக்குத் திலகமிடவேண்டாமா?'' என்று அவன் கைப்பாட்டிலைப் பிடுங்கினாள். அவன் திரும்பப்பிடுங்கும் சமயம் பாட்டில் கீழேவிழுந்து உடைந்து சிதறிவிட்டது. அந்தச்சப்தம் கேட்ட ஜீஜியின் தாயார் ''ஜீஜி என்ன விழுந்தது'' என்று கேட்கும்பொழுதே ராஜு ஒரே தாவலில் மின்வெட்டென மறைந்துவிட்டான்.

''தைலத்தைத் தடவிக்கொண்டு ஜன்னலின் மீது பாட்டிலைவைத்துவிட்டுப் படுத்துக்கொண்டிருந்தேன். காற்றில் கதவு அடித்துப் பாட்டில் உடைந்துவிட்டது'' என்று விளக்கின் ஸ்விட்சைப் போட்டாள்.

தவறினால் கீழே விழாமல் ஜன்னலின்மீதா உடைந்திருக்கும் என்ற எண்ணம் அவர்கள் மனதில் தோன்றாமலிருந்தது. ஜீஜியின் நற்காலமே என்று நினைத்துக்கொண்டாள். அவர்கள் பேச்சின் ஸ்வாரஸ்யத்தில் ஏதோ பாட்டில் உடைந்தது என்பது சர்வ சாதாரண விஷயமாகிவிட்டது. தலைவலித் தைலம் வீடெங்கும் மணக்கும்பொழுது ஜீஜி தடவிக்கொண்டாளா? என்பதை அறியவேண்டிய அவசியமில்லையே.

சூடாகக் கொடுத்த காப்பியைக் குடித்துவிட்டு யாவரும் வீடு சென்றார்கள்.

— 4 —

முனிசிப் ஊரைவிட்டுச் சென்றதும் உலகமே இருண்டு விட்டதுபோலிருந்தது. ஒருமாதம்

வரை, ஜீஜி தகப்பனாரிடமே இருந்ததால் சர்வ சாதாரணமாகத் தகப்பனார், பெண் இருவரிடமிருந்தும் கடிதம் வந்துகொண்டிருந்தது. பிறகு ஜீஜி காலேஜ் சேர்ந்துவிட்டதாக முனிசிப் கடிதத்திலிருந்து தெரிந்துகொண்டான். பிறகு மாதம் ஒரு கடிதம் ஜீஜியினிடமிருந்து வந்துகொண்டிருந்தது. அவள் பிரிவு அவனை மறக்கச் செய்யும் என்று நினைத்தது ஏமாற்றமளித்தது. பிரிவின் தாபம் அவனை மிகவும் வருத்திற்று. யாவரிடத்தும் ஜாலியாகப் பேசுபவன், மனிதர்முன் அதிகமாக நடமாடக்கூட விருப்பமில்லாமல் தனது வேலை நேரத்தைத் தவிர மற்றப்பொழுதை மாடியில் புஸ்தகத்தைச் சாக்காக வைத்துக்கொண்டு ஜீஜியின் கடிதத்தைப் பாராயணம் செய்வதிலேயே கழித்துவந்தான். உடம்பு இளைக்கத் தொடங்கியதைக் கண்ட பெற்றோர் மருந்து சாப்பிடும்படி வற்புறுத்தலானார்கள்; மனப்பிணி என்பதை அறியாத நிலைமையில். மூன்று மாதம் சென்றது. இவன் எழுதிய தாபமடைந்த கடிதத்திற்குப் பதில், பட்டணத்திலேயே உத்யோகம் பார்த்துக்கொண்டு வந்துவிட்டால் அடிக்கடி பார்க்கச் சந்தர்ப்பமேற்படுமென்று ஜீஜி எழுதியிருந்தாள்.

இருளில் ஜோதிபோல் பிரகாசித்தது ராஜுவின் மனம். உடனே பட்டணத்திலிருக்கும் தன் நண்பனுக்குத் தனக்கு உத்யோகம் தேடுமாறு கடிதம் எழுதினான். மறு தபாலிலேயே ஒரு கம்பெனியில் வேலை காலியிருப்பதாகவும், உடனே புறப்பட்டு வந்தால் கிடைக்குமென்றும் பதில் வந்தது. முன்பின் சிந்திக்க இடமில்லாமல், வேலையைராஜினாமாசெய்துவிட்டுப் பட்டணம் சென்றான். ஆனால் இவன் எதிர்பார்த்த வேலை கிடைக்கவில்லை. ஒருமாதம் சுற்றினான் வேலையொன்றும் கிடைக்கவில்லை. கையில் இருந்த பணமும் செலவழிந்துவிட்டது. தகப்பனாரைக் கேட்டு எழுதவும் மனமில்லை. ஊருக்குத் திரும்பவும் சம்மதமில்லை. அந்த நிலைமையில், நண்பர்களுடன் அறையில் தங்கியிருந்தாலும், ஹோட்டலுக்கு ரூபாய் வேண்டுமே? இதை ஜாடையினாலறிந்து கொண்ட ஜீஜி பிறகு வாங்கிக்கொள்ளுகிறேன் என்று சொல்லி, ரூபாய் கொடுத்துவந்தாள். அவள் இருக்குமிடத்தில் சாப்பிடச்சொல்ல முடியவில்லையே என்று வருத்தப்பட்டாள்.

வீட்டிற்கு வந்தால் இவனுடன் அதிகமாகப் பேசமாட்டாள். காலேஜ் விடும் நேரத்தில் கேட்டிற்குச் சற்றுத் தள்ளி நின்றுகொண்டிருப்பான் ராஜு. தன்னை அதிகமாகக் கவனிக்கும் மாணவிகள் பக்கத்தில் வராத நிலைமையில் இவன் நிற்கும் இடம் வருவாள். இருவரும் பல தெருக்களைச் சுற்றிக்கொண்டு வீடு வருவார்கள். மரீனாவிற்குச் சென்றால், தெரிந்தவர்கள் வருவார்கள் என்று வர மறுத்துவிடுவாள். தன்னுடன் கவனிக்கும் மாணவிகள் வந்தால் இவன் நிற்கும் திசையைக்கூடத் திரும்பிப் பாராமல் சென்றுவிடுவாள். அன்று ஏமாற்றமடைந்த இவன் மனம் மிக்க தாபமடையும். மனதிற்குள் அவளைத் திட்டுவான். பிறகு தனியே சென்று கடலோரம் உட்கார்ந்து, தனது நிலைமையைச் சிந்தித்துப் பார்ப்பான். ஒரு வருஷத்திற்கு முன்னால் தான் நிர்மலமான மனதுடன் ஆனந்தமாகக் காலங் கழித்ததையும், தற்சமயம் தான் படும் அவஸ்தையையும், சீர் தூக்கிப் பார்க்கும்பொழுது, இவன் மனமே "சே, என்ன கேவலம்? ஒரு பெண்ணிற்காகவா இவ்வளவு அவஸ்தை? நாடோடிபோல் நடுத்தெருவில் காத்துக்கொண்டு நிற்கும் நீ ஒரு மனிதனா?" என்று கேட்பதுபோலிருக்கும்.

ஜீஜிக்காக நிற்கும்பொழுது நண்பர்கள் யாராவது பார்த்துவிட்டால், ஏன் நிற்கிறாய் என்று கேட்கும்பொழுது, முகத்தில் கலவரம் தோன்ற என்ன சொல்வது என்ற வகை தேடியவாறு, நண்பனொருவன் பெயரைச் சொல்லி அவனுக்காக நிற்பதாகச் சொல்லவேண்டி வருகிறது. சாதாரணமாக அவர்கள் சென்றுவிட்டால் எண்ணம் கைகூடுகிறது. அவர்களும் நண்பனுக்காக நிற்பதாகச் சொல்லிவிட்டால் நிலைமை மோசமாகி விடுகிறது. கொஞ்சநேரம் நின்றுவிட்டு அவனைக் காணோம், நாம் செல்லுவோம் என்று அவர்களுடன் உலாவச் செல்ல வேண்டியதாகி விடுகிறது. மறுபடி அவளைக் கண்டு பேசும்வரை மனம் படும்பாடு சஹிக்க முடியாத கஷ்டமாகி விடுகிறது என்று அவன் ஏமாற்ற மடைந்த நாட்களின் செய்கைகள்




டோங்ரேயின்

# பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற குழந்தைகளின்
டானிக்

மனத்திரையில் ஓடும்பொழுது அவனுக்கே லஜ்ஜையாகத் தோன்றும்.

"சே. என்ன காதல் வேண்டியிருக்கிறது? லவ்வாவது மாரேஜாவது? ஏதோ பார்த்தோம். கல்யாணம் ஆயிற்று என்றால் இப்படிப் பயந்து சாகாமல் மனம்போனபடி நடக்கலாமல்லவா? இதுவரை நடந்த அசட்டுத்தனம் போரும். இனிமேல் இப்படியெல்லாம் நிற்கக்கூடாது. என்றாவது தற்செயலாகச் சந்தித்தால் பேசுவோம். இல்லையேல், தினம் இப்படிச் சமுத்திரக் கரையில் உட்கார்ந்து இயற்கையில் மீண்டும் சிருஷ்டி தத்துவத்தை ஆராய்ந்தோமானால் மனதிற்கு நிம்மதியளிக்கும்" என்ற முடிவிற்கு வருவான்.

ஆனால் மறுதினம், கடிகாரத்தின்முள் நாலை விட்டு நகர்ந்ததும் இவனது உறுதியும் மனதை விட்டு நகர்ந்துவிடும். இன்று ஒருநாள் மட்டும் பார்த்துவிட்டு வருவோம் என்று கால்கள் காலேஜை நோக்கிச் செல்லும்.

இப்படியாக ஒன்றரை மாதம் சென்றது. "கேட்ட பணத்தை அனுப்பிவிட்டு வேலை கிடைக்காவிட்டால் புறப்பட்டு வந்துவிடு; இவ்விடம் பார்த்துக்கொள்ளலாம்; அனாவசியமாகச் செலவு செய்யாதே" என்று தகப்பனார் கடிதம் எழுதிவிட்டார். போகவும் மனமில்லை. இருக்கவும் வசதியில்லை. என்ன செய்வது? என்று போராட்டத்தின் முடிவு காணாத நிலைமையில், ஏ. ஆர். பியில் வேலையாக இருந்த நண்பனொருவன் ஏ. ஆர். பியில் ஒரு வேலை காலியிருப்பதாகவும், தன் சிபார்சில் கிடைக்கலாமென்றும் சொன்னான். பாலைவனத்தில் சுனை நீரைக் கண்டதுபோலிருந்தது. அதனால் முன்பின் யோசியாமல் அவர்கள் போட்ட நிபந்தனைகளுக்கெல்லாம் ஒத்துக்கொண்டு வேலைபார்க்கத் தொடங்கினான். "இப்பொழுது இவ்வேலையைப் பாருங்கள். கல்யாணம் ஆனபிறகு அப்பாவின் சிபார்சினால் உயர்ந்த உத்தியோகம், அல்லது படிப்பு ஏதாவது பார்க்கலாம்" என்று சமாதானம் கூறினாள் ஜீஜி.

ராஜுவின் உத்தியோகம் முக்கால்வாசி நாள் இரவில் கண் விழிக்கவேண்டும். வேலையும் கஷ்டம். சம்பளமாவது அதிகம் என்றால் திருப்தியளிக்கும். அதுவும் நூறு ரூபாய்தான். அதுவும் இவன் செலவிற்கே வாலைப்பிடிப்பதாக இருந்தது. அம்மா ஊருக்குப் பணம் அனுப்பவில்லை என்று குற்றச்சாட்டுக் கடிதம் எழுதலானாள். உத்தியோகத்தால் ஏற்படும் கஷ்டமெல்லாம் ஜீஜியின் முக தரிசனத்தினால் மறந்து விடும். ரொம்ப நிர்ப்பந்தம் ஏற்படும் சமயம் சொல்லாமல் ஓடிவிடலாமாவென்றுகூடத் தோன்றும். (சொன்னால் விடமாட்டார்கள்) அந்தச் சமயம் ஜீஜியின் காதல்கனிந்த கண்கள் அவன் மனக்கண்ணில் தோற்றமளிக்க மனம் நிம்மதியுற்றுவிடும்.

தீபாவளி வந்தது. ஜீஜிக்கு ஏதாவதுவாங்கிக் கொடுக்கவேண்டும் என்று ஆவல் மிகுந்தது. அதிகப்பணம் செலவிட வகையில்லை. ஏதோ சொல்பமாவது வாங்கவேண்டுமென்று நினைத்தான். தீபாவளியன்று சாயங்காலம் சினேகிதிவீட்டுக்குப் போவதாகச் சொல்லிவிட்டுக் கிளம்பினாள். தெருக்கோடியில் ராஜு நின்றுகொண்டிருந்தான். இருவரும் கடைப்பக்கம் சென்றார்கள்.

"ஜீஜி! இன்று ஏதாவது என் பரிசாக நீ பெற்றுக்கொள்ளவேண்டும். இந்தக் கடையில் வேண்டியதை எடுத்துக்கொள்"

"பரிசு கொடுத்தால்தான் அன்பாகுமா? தற்சமயம் அவைகள் வீண் தொந்தரவைக் கொடுக்கும். நான் வேண்டுவது, தங்களுடைய காதலின் மலர். அது என்றும் வாடாமலிருக்க வேண்டும். அவ்வளவே"

"அவையெல்லாமிருக்கட்டும். நீ ஏதாவது எடுத்துக்கொண்டால்தான் எனக்குச் சந்தோஷம். நீயாக வாங்கிக்கொண்டதாகச் சொல்லிவிடலாம். இந்த புரூச் நன்றாக இருக்கிறது. உன்பெயரைத் தெரிந்துகொண்டது போல் ஸௌம்யா என்று எழுதியிருக்கிறது"

"மறுக்க மனமில்லாமல் ஐந்து ரூபாய் விலையுள்ள புரூச்சை எடுத்துக் கொண்டாள். சஹோதரியிடம் ராஜு தங்கள் இருவருக்காகவும் வாங்கிக் கொடுத்ததாகச் சொன்னாள்.

"ஜீஜி! ராஜு கொடுத்ததாகச் சொல்லாதே. நீயே வாங்கினதாகச் சொல்லு. எனக்கு வேண்டாம். ராஜு கபடமற்றவன். உன் அத்திம்பேர் குதர்க்கமாகப் பேசுவார்"

"டிசம்பர் பரீக்ஷையில் மார்க் குறைவாக இருக்கிறது. பெண் உபாத்தினியை ட்யூஷனுக்கு ஏற்பாடு செய்யலமா" என்று மாப்பிள்ளை மாமனாருக்குக் கடிதம் எழுதினார். லீவில் பட்டணம் வந்த முனிசிப் ஜீஜிக்கு ராஜுவை ட்யூஷன் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டார்.

இது விஷயம் மாப்பிள்ளைக்குச் சம்மதமில்லை. மாமனாரிடம் சொல்லுவதற்கும் தைரியமில்லை. "பட்டு! இது என்ன மடமை? பருவமடைந்த பெண்ணிற்கு யௌனக்காளை பாடம் சொல்லிக்கொடுப்பது எவ்வளவு தப்பிதம். காற்றும் தீயும் ஓரிடமிருந்தால் பற்றாது என்று சொல்ல முடியுமா? உன் அப்பாவின் புத்தி ஏன் இவ்விதம் போகிறது. நீயாவது இது விஷயத்தை அவருக்கு நினைப்பூட்டு?" என்றான்.

"இப்படித் தத்து பித்து என்று ஏதாவது உளறாதேயுங்கள். ராஜு அப்படிப்பட்ட பிள்ளையல்ல. உடன் பிறந்தவர்களுக்குமேலாக இருப்பான். அப்பாவிற்கு அவன் மீது அபார நம்பிக்கையுண்டு. உங்கள் குறுக்கு யோசனை என்னுடன் நிற்கட்டும்"

# TIMES HAVE CHANGED!

**1754**





19-ம் நூற்றுண்டில் . தாமஸ் மட்ஜ் என்பவரால் இந்த ஆங்கர் எஸ்கேப்மெண்ட் முதன் முதலாக கடிகாரங்களுக்குப் பொருத்தப்பெற்றது.

*Thomas Mudge*

**1945**



## காலம் மாறிவிட்டது!

சுமார் 200 வருஷங்களுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்ட அதே எஸ்கேப் மெண்ட்தான் இன்றும் கடிகாரங் களில் உபயோகிக்கப்பட்டு வருகிறது. சரியான மணிகாட்ட இது இன்றி யமையாதது. எங்கள் கேட்லாக்கில் கண்டுள்ள "வெஸ்ட் எண்டு" கடியா ரங்கள் இதுபோன்ற எல்லா முக்கிய அம்சங்களேயும், அநேக அபிவிருத்தி களேயும் கொண்டுள்ளன.

**செகண்டஸ் பாக்கெட்**

15 ஜுவல்கள், நிக்கல் ஸில்வர், ரோமன் அல்லது அராபிக் எண்கள் உள்ளது ... ரூ. 30

**வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.**
பம்பாய் — கல்கத்தா

சப்ளேகள் சரிவர வருவதில்லே. ஆகையால் எல்லா ரகங்களேயும் சப்ளே செய்ய இயலாது. ஸ்டாக் உள்ளவரை சப்ளே செய்வோம். காகிதக் கட்டுப்பாட்டிஞல் காட் லாக் அனுப்ப இயலாது.

# WEST END WATCH Co

*Bombay & Calcutta*

"இனிமேல் இதைப்பற்றிச் சொல்லிப்பலவில்லை" என்று விட்டு விட்டான்.

பிறகு தினம் காலேஜிலிருந்து அழைத்து வந்து ஆறு மணி வரை பாடம் சொல்லிக்கொடுத்து விட்டுச் செல்லுவது என்பது சர்வ சாதாரணமாகிவிட்டது. அவன் உத்தியோகமும் அதற்கு உதவி யளித்தது. சிலசமயம் இருவரும் ஹோட்டலில் டிபன் சாப்பிட்டு விட்டு இரண்டு மூன்று தெருக்களைச் சுற்றிவிட்டு வருவார்கள். அன்று பாடம் இல்லை. ஏன் இவ்வளவு நாழி என்றால், மீட்டிங் லெச்சர் என்று சாக்குச் சொல்லிவிடுவார்கள். சென்னை போன்ற நகரங்களில் இது மாதிரி வசதி கிடைப்பது ஆச்சரியமல்லவே. பட்டுவின் புருஷன் ராஜுவிடம் மரியாதையாக நடந்து வந்தாலும் இருவர்மீதும் அவனுக்குச் சந்தேகம் மாத்திரம் போகவில்லை. இதை ஊர்ஜிதம் செய்ய ஒரு சம்பவம் ஏற்பட்டது.

ராஜு பாடம் சொல்லிக் கொடுக்கையில் ஜீஜியின் மனம் ஒரு விதமான இன்பச் சிந்தனையில் சென்று கொண்டிருந்ததால் கவனமில்லாமல் பதில் சொல்லி வந்தாள். ராஜு இரண்டு மூன்று முறை சொல்லியும் அவள் கவனிக்கவில்லை. அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. எப்பொழுதும் பாடம் நடக்கும் பொழுது அவன் வேறு விஷயத்தில் கவனம் வைக்கமாட்டான். காதல் விஷயம் ஒன்றும் நினைப்பிருக்காது. அப்படி மனம் சலித்த நாளில் பாடம் சொல்லமாட்டான். அது அவன் சுவபாவம். இன்று முக்யமான பாடத்தில் கவனமில்லாமலிருக்க அவனை மீறிக் கோபம் வரவே, புஸ்தகத்தை அவள் முகத்தின் மீது விட்டெறிந்துவிட்டு,

"கழுதை கத்துகிறது என்ற நினைப்போ. ஜடமே! நீ படித்துக் கிழித்தது போரும்; எழுந்து தொலை" என்றான்.

"ஜீஜியின் கண்களில் நீர் துளிர்த்தது. இவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு மறுபடியும் தலையைக்குனிந்துகொண்டாளே தவிர எழுந்து செல்லவில்லை. மைவிழியில் நீரைக்கண்டதும் ராஜுவின் மனம் பதறிவிட்டது. தனது மடமையை உணர்ந்தான். கோபத்தில் ஸ்வாதந்திரியம் கொண்டாடியதை நினைத்து மனம் லஜ்ஜை கொண்டது. "ஜீஜி என்னை மன்னித்துவிடு" என்று அன்பு ததும்பக் கூறினான். இவை யாவும் ஒரு விநாடியில் நடந்தேறின. என்றாலும், மாடிப் படியில் இறங்கி வந்த பட்டுவின் புருஷன் அப்படியே நின்றபடி யாவையும் கவனித்துவிட்டான்.

"மிஸ்டர் ராஜு, இந்தச் சமயம் ஒரு விஷயம் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். தாங்கள் எவ்வளவு ஸ்வாதீனமாக உடன்பிறந்தவர்போல் நடந்தாலும், மூன்றும் மனிதர் என்பதை மறுக்க முடியாது. இப்படிப் புஸ்தகத்தை மேலே வீசி எறிவது மிகவும் அனுசிதம். அவள் கவனக் குறைவாக இருந்தால் தாங்கள்விட்டுப் பிடிப்பதுமேல். ஏனென்றால் இருவர் வயதும் பார்ப்பவர்களுக்கு ஒருவித அதிர்ச்சியைக் கொடுக்கும். ஜீஜி எழுந்துசெல் நாளைக்குப் படிக்கலாம்?

ஜீஜி பேசவுமில்லை. எழுந்து செல்லவுமில்லை.

"மன்னிக்கவேண்டும். வாத்தியார் என்ற மனப்பான்மையில் கோபத்தை அடக்கும் சக்தியை இழந்துவிட்டேன்" என்று மரியாதையாகச் சொன்னானே தவிர, இவன் யார்? நம்மைக் கேள்விகேட்க என்ற அகந்தையே மனதில் தோன்றிற்று.

"உங்களுக்கு வீண் சிரமம். இரவு கண் விழிக்கும் உத்யோகம். இது ஒரு விவகாரம் எதற்கு? எல்லாம்தானே படித்த வரையில் போரும். பஸ்ட் கிளாஸில் பாஸ் செய்து எந்த உத்யோகம் பார்க்கப்போகிறாள்? பாஸ் என்றால் அதுவே அதிகம். நீங்கள் உங்கள் ஜோலியைக் கவனியுங்கள்"

"அது விஷயத்திற்கு உங்களுக்கும் எனக்கும் அதிகாரமில்லை. அவள் தந்தை உத்தரவிற்கு நான் கடமைப்பட்டவன்."

"ஜீஜியின் செய்கையும், இவன் சொல்லும் அவனுக்குக் கோபத்தை உண்டாக்கின. மனைவியிடம் ஏதோ சொல்லிவிட்டு வெளியில் சென்றுவிட்டான்.

"ஜீஜி கோபமா?"

"கோபமா? அது யாருக்கு? இது நமக்குள் சர்வ சகஜம். அவரின் நோக்கிற்கு இது அனுசிதமாகப்பட்டது. அவ்வளவே. உண்மையில் இன்று என் மனம் படிப்பில் செல்லவில்லை. இப்படித் தமாஷாக எங்காவது சுற்றலாம் என்று தோன்றுகிறது. ஆனால் அது நடக்காத விஷயம்" என்று சொல்லும்பொழுது பட்டு அவ்விடம் வந்தாள்.

"ராஜு! நீ நம்ப வீட்டைப்போல் இவ்விடம் நடந்துகொள்ளாதே. இவர் குணம் ஒரு மாதிரி. அனுவசியமான சந்தேகம் கொள்வார். நீ சற்று ஒதுங்கினாற்போலேயே நடந்துவா. என் இஷ்டப்படி நடக்கத் தைரியமிருந்தால் உன்னைக் கிளப்பில் சாப்பிடச் சொல்லியிருப்பேனா?"

பிறகு சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் பிரிந்தார்கள்.

(தொடரும்)

# இதென்ன உலகம்! தொடர் கதை

மொழிபெயர்ப்பாளர் :— கிருத்திவாஸ்

மூல ஆசிரியர்
இலா சந்திரஜோஷி

— 16 —

ஐந்தாவது நாள் அம்மாவும் அப்பாவும் திரும்பிவந்தனர். என் உயிர் ஒரு நிலைக்கு வந்தது. என் மனத்திலும் சிறிது நிம்மதி ஏற்பட்டது. அவர்கள் வீடுவந்து சேர்ந்ததும், மகாநாட்டின் நடவடிக்கைகளைப்பற்றிக் கேட்டேன். 'என்ன தீர்மானங்கள் நிறைவேறின? ஹிந்து—முஸ்லீம் வேற்றுமை ஒழிய என்ன என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் பட்டன? 'விதேசி பஹிஷ்காரம்' சம்பந்தமான என்ன என்ன புது வழிகள் கண்டுபிடிக்கப் பட்டன? என்ற எனது கேள்விகள் அனைத்திற்கும் சாங்கோபாங்கமாக, பொறுமையுடன் பதிலளித்தார், அப்பா. இவ்விஷயங்களை எல்லாம் தெரிந்துகொண்டுதான் ஆகவேண்டும் என்று எனக்கு அவா உதிக்கவில்லை. அப்பாவை நாலு நாட்கள் பிரிந்திருந்ததனால், ஏதாவது அவருடன் பேசவேண்டுமென்று நான் துடியாய்த் துடித்துக்கொண்டிருந்தேன். அவ்வளவுதான்.

மகாநாட்டுப் பேச்சு முடிவுற்றதும் 'ராஜு எங்கே? அவனைக்காணவே காணோமே!' என்று கேட்டார் அப்பா.

அருகில் அமர்ந்திருந்த லீலா, 'அண்ணாவிற்கு நாலைந்து நாட்களாக உடம்பு சரியாயில்லை. நான் எவ்வளவோ தடவை அவனிடம் சென்றேன். ஆனால் பேசவே மாட்டேன் என்கிறான். கட்டிலில் படுத்த வண்ணம், 'உபநிஷத்து' முதலிய புஸ்தகங்களைப் படித்துக்கொண்டிருக்கிறான்! உடம்பு சரியாயில்லை என்று' கேட்டால் சொல்கிறான். என்ன உடம்போ, எனக்குத் தெரியவில்லை' என்றாள்.

அப்பா சிறிது பீதியுடன். 'உடம்பிற்கு என்னவாம்? உனக்குத் தெரியுமா, ஏதாவது?' என்று என்னைக் கேட்டார்.

'எனக்குத் தெரியாதே' என்றேன் நான்.

'அப்பா, தனக்கியற்கையான ஏளனச் சிரிப்பை முகத்தில் வரவழைத்துக்கொண்டு, 'இதுதான் சகோதர சகோதரியின் அன்பு. மூன்று நாட்களாக உடம்பு சரியாயில்லாமல் கட்டிலில் படுத்துக் கிடக்கிறானாம். உனக்குத் தெரியது என்கிறாயே! அதுதான் தேவலை' என்றார்.

அவரது கண்களில் அன்பு கலந்த திரஸ்கார ஒளி வீசியது. நான் அவரை நிமிர்ந்து நோக்க முடியவில்லை. நான் செய்த பெருங் குற்றம், அவரைத் தலை தூக்கிப் பார்க்க விட்டால்தானே?

அதே க்ஷணத்தில் ராஜுவைப் பார்ப்பதற்கென அப்பா சென்றுவிட்டார். அம்மாவும் லீலாவும்கூட அவர் பின்னாலேயே சென்றுவிட்டனர். நானும் வெகு பின்னாலேயே குற்றவாளியைப்போல, அடிமேல் அடி எடுத்து வைத்துக்கொண்டு, துடிக்கும் உள்ளத்துடன் சென்றேன். ராஜுவின் அறையில் போய்ப் பார்த்தால் ராஜுவைக் காணோம். அறை காலியாயிருந்தது. 'சிறிது நேரம் முன்புகூட அண்ணா இங்கேதானே இருந்தான். எங்கே போயிருப்பான் அதற்குள்' என்றாள் லீலா.

எல்லோருக்கும் வியப்பாயிருந்தது. வீடு பூராவும், மாடி, வராண்டா, தோட்டம் ஒன்று கூடப் பாக்கிவிடாமல் தேடிப்பார்த்தாய்விட்டது. ராஜுவைக் காணவில்லை. காரோ, பீடனோ அவன் எடுத்துப்போனதாகத் தெரியவில்லை. அம்மாவும், அப்பாவும் வந்துவிட்டது தான் அவனுக்குப் பிடிக்கவில்லையோ அல்லது வேறெதாவ்து காரணமோ அவன் மறைந்து விட்டான். இது எல்லோருக்கும் ஆச்சரியமாகத்தான்பட்டது.

நாங்கள் வியந்தவர்களாய்த் திரும்பிவிட்டோம். ராஜு நல்லவேளை படுத்தபடுக்கையில் இல்லாமல் இருக்கிறானே என்று அப்பாவிற்கு ஆறுதலாயிருந்ததுபோலும். சிரித்துக்கொண்டு, 'தேவலையே இது நல்ல உடம்பாயிருக்கிறதே! ஆளைப் படுக்கையிலேகூட காணோமே' என்றார்.

ராஜு ஆரோக்கியசாலி. நல்ல பலிஷ்டனும்கூட. அவனுக்கு உடம்பு சரியில்லை என்றால் எவனுக்குமே நம்பிக்கை ஏற்படாது. இன்னுமொரு காரணமென்னவெனில், அவன் கோபித்துக்கொண்டிருப்பானாகில்,வெறுமனே என் உடம்பு சரியில்லை என்று பாசாங்கு செய்வான். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அப்பாவும் 'அவன் ஏதோ கோபமாயிருக்கிறான்' என்று ஊகித்துக்கொண்டுதான், அவனது உடம்பைப் பற்றிய கவலையை, வேடிக்கையாகப் பறக்கவிட்டுவிட்டார். ஆனால் என்னுள்ளம், அறியாப் பீதியொன்றினால், இடையிடையே வேகமாக அடித்துக்கொண்டது

— 17 —

இரவு போஜன வேளையில், ராஜுவை வெகுநேரம்வரை எதிர்பார்த்தோம். ஆனால் அவன் வரவில்லை. எங்கே போனான் என்றும்

ஒருவருக்கும் தெரியாது. குளிர்காலத்தில் அவன் மாலை ஏழுமணிக்கப்புறம் வெளியிலிருந்ததே இல்லை. எல்லாருடைய முகத்திலும் பரபரப்பும் பீதியும் ஜ்வலித்தன. அப்பா தம் பீதியைக் காட்டிக்கொள்ளாமலிருக்க எவ்வளவோ முயன்றார். அந்தப் பாழும் முகம் அவருக்கு உதவி செய்ய மறுத்துவிட்டது. லீலா தூங்கி வழிய ஆரம்பித்தாள். மணி பதினொன்றரை அடித்தது. 'இனி உட்கார்ந்திருப்பது சரியல்ல, லஜ்ஜா, லீலாவையும் அழைத்துக்கொண்டு தூங்கப்போ' என்று கூறி, தந்தை நாற்காலியினின்றும் எழுந்திருக்கலானார்.

என் கைகால்கள் நடுங்கிக்கொண்டிருந்தன. எழுந்திருக்கும் சக்தி என்னிடமில்லை. இருந்தாலும் பலவந்தமாக எழுந்திருந்து லீலாவின் கையைப் பிடித்துக்கொண்டு, கிளம்பினேன்.

அம்மா வருத்தம் தோய்ந்த குரலில், அப்பாவைப் பார்த்து, 'என்னவாயிருக்கலாம். ஏதாவது மோட்டார் கீட்டார் மேலேறி அடிபட்டிருக்குமா? போலீஸிற்கு வேண்டுமானால் தெரிவித்துப் பாருங்களேன்' என்றாள்.

'அசட்டுப் பிசட்டு என்று பேசுகிறாயே. அதெல்லாம் ஒன்றுமிராது. தானே வந்து விடுவான், போ' என்று கடிந்துகொண்டார் தந்தை.

லீலா அறையை அடைந்த சிறிது நேரத்திற்கெல்லாம் தூங்கிவிட்டாள். படுத்த வண்ணம் எண்ணுதெல்லாம் எண்ணலானேன் நான்.

கிட்டத்தட்ட ஒருமணி நேரத்திற்கப்புறம் வாசற்கதவு தாழிடப்படும் சப்தம் கேட்டது. காவற்காரன் விழித்திருந்து, ராஜு வந்தபின் கதவைச்சாத்தியிருப்பான் போலும். வாசற்கதவு தாழிடப்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம், ராஜுவின் அறை திறந்து மூடப்படும் அரவம் கேட்டது. ராஜு திரும்பி வந்துவிட்டான், என்று நம்பிக்கை ஏற்பட்டதும், என் மனக்கிளர்ச்சிகளெல்லாம், ஒருவாறு அடங்கின.

மனக்கிளர்ச்சிகள் சிறிதடங்கினதும் என் கண்கள் மூடவாரம்பித்தன. உறக்கத்திற்கும் விழிப்பிற்கும் இடையே ஒரு நிலை இருக்கிறதல்லவா, அந்த நிலையை நான் சிறிது சிறிதாக அடைந்தேன். திடீரெனத் துப்பாக்கி சுடும் சப்தம் காதில் ஒலித்தது. நான் துணுக்குற்றேன். என் பலவீனமான உள்ளத்து நிலையை, நான் எப்படி வர்ணிப்பது? என்னுள்ளத் துடிப்பு நின்று, உயிர் போய்விடும்போலத் தோன்றியது எனக்கு.

எங்கே சப்தம், என்ன நடந்தது என்பதெல்லாம் தெரியாது. யாராவது ஒரு வேலை


ஸ்ரீ வாசவி சகாயம்.

# எமது நன்றி

எனது 50-ஆவது வருஷ பூர்த்தியை முன்னிட்டு நடைபெற்ற பொன் விழா வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்பாக நடத்தித்தந்து கௌரவித்த நண்பர்களுக்கும், வாழ்த்துத் தந்திகள், ஆசிச் செய்திகள், வாழ்த்துப் பத்திரங்கள், சன்மானங்கள் முதலியன அனுப்பிய சகோதர சகோதரிகளுக்கும் எல்லாச் சங்கத்தார்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனங்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**P. A. ராஜு செட்டியார்**
ஷராப் வியாபாரம்
கோயமுத்தூர்

யாள் வந்து, இவ்விஷயத்தை என்னிடம் சொல்லவருவான் என்றெண்ணி, ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன். சுமார் பத்துப் பதினைந்து நிமிஷங்களுக்கப்புறம், ராஜுவின் அறை திறக்கப்படும் ஓசை கேட்டது. உடனே யாரோ வீரிட்டுக் கத்தும் அரவம் எழுந்தது. எனக்கு மயிர்க்கூச்செறிந்தது. ரத்தம் வறண்டுவிட்டது போன்ற உணர்ச்சி. 'என்ன சமாச்சாரம்' என்று புரியவில்லை.

சிறிதுநேரம் சென்றபின் என்னறைக் கதவை யாரோ வெளியிலிருந்து தட்டும் சப்தம் கேட்டது. பயந்துபோய், 'யார் அது?' என்று வினவினேன்.

அப்பாவின் 'பர்ஸனல் அஸிஸ்டெண்ட்' கௌரீ சங்கர் துபேயின் குரல் அது—'லஜ்ஜா, கதவைத்திற; குடிகெட்டுவிட்டது'

'என்ன?' என்று பதறிய வண்ணம் கேட்டுக்கொண்டே தாழ்ப்பாளைத் திறந்தேன்.

'ராஜு தன்னைத் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொண்டுவிட்டான்' என்று சொல்லி, துபேஜி குழந்தைகளைப்போல விசித்து விசித்து அழ ஆரம்பித்தார்.

'ஆ! என்ன?' என்று இடியுண்டவள் போலக் கேட்டேன். என் தலை சுழல ஆரம்பித்தது. அப்படியே சாய்ந்துவிட்டேன்.

'என்ன சொல்ல! இனி சொல்லித்தான் என்ன பயன்? லீலா, ஏ லீலா' என்று அவர் லீலாவையும் எழுப்ப ஆரமபித்தார். ராஜுவின் அறையில், அம்மாவின், உள்ளத்தைத் தவிடுபொடியாக்கும் அழுகைக்குரல்கேட்டது.

லீலா ஆழ்ந்த நித்திரையில் மூழ்கியிருந்தாள். துபேஜி கையினால் தட்டி எழுப்பியதும் தான் தூக்கிவாரிப்போட்டுக்கொண்டு எழுந்தாள். ''என்ன துபேஜி?''

'ராஜு போய்விட்டான்.'

'எங்கே?. என்றாள் லீலா, பதட்டத்துடன்.

'எமலோகத்திற்கு, உணர்ச்சிமேலீட்டால் அழுதுவிட்டார் துபேஜி.

'அண்ணா, என்ன காரியம் செய்தாய்? அண்ணா! அண்ணா!' என்று கதறிய வண்ணம் லீலா கட்டிலிலிருந்து குதித்தெழுந்தாள்.

துபேஜியுடன், துர்ச்சம்பவம் நடந்த அறைக்குப்போய்ச் சேர்ந்தோம். ராஜு—என் தம்பி ராஜு— என் அன்பிற்கன்பான தம்பி ராஜு— எங்கள் குலத்துக்கு ஒரேவிளக்கான ராஜு— தரையில் கைகால்களை நீட்டிய வண்ணம் பிணமாகப் படுத்துக்கிடந்தான். அவனது ஆடை ஒரே ரத்தக்கறையாக இருந்தது. பக்கத்தில் ஒரு துப்பாக்கி கிடந்தது. அம்மா தலையிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு, அலறிக்கொண்டிருக்கிறாள். பக்கத்தில் அப்பா நின்றுகொண்டு பாக்கிய தேவதையின் இக்கொடிய லீலையைப்பார்த்துக் கொண்டிருக்கிறார். வாயைத்திறக்க எவரிடத்தும் சக்தியில்லை. லீலா இக்கொடிய காட்சியைக்கண்டதும், மூச்சற்றுத்தரையில் தடால் என்று விழுந்து, 'அண்ணா, என்ன காரியம் இது? நான் இனி எப்படி உயிர்வாழ்வேன். ஐயோ! அண்ணா! என்னைத் தனியாய்த் துடிக்க விட்டுவிட்டுச்சென்றாயே. அண்ணா. உனக்கு எப்படிமனம் வந்தது. அண்ணா, அண்ணா!' என்று பயங்கரத்வனியில் புலம்ப ஆரம்பித்தாள்.

எனக்குச் சிறிதும் அழுகை வரவில்லை. நான் கனவு கண்டவள்போல, மதிமயக்கமுற்று, ராஜு சடலத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தேன். இரத்தம் தோய்ந்த அவனது மார்பையும், உணர்ச்சி யிழந்த அழகிய அமைதி நிலவிய வதனத்தையும் மாறி மாறிப் பார்த்துப் பெருமூச்செறித்து கொண்டிருந்தேன்.

சிறிது சிறிதாக என் மூளை உயிரற்றதாக ஆகியது. தலை சுழல ஆரம்பித்தது. அடுத்த கணம் மூச்சை யிழந்து தரையில் விழுந்துவிட்டேன்.

— 18 —

சற்று மூர்ச்சை தெளிந்தபின்னர், நான் அதே நிலையில் தரையில் கிடப்பதையறிந்தேன். எவரும் என்னைப்பற்றிக் கவலையோ, அக்கறையோ கொள்ளவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. எந்தப் பெருந்துயரத்தில் குடும்பமே மூழ்கி யிருந்ததோ அதற்கு முன்னிலையில் எனது மூர்ச்சை, எனது மரணமே துச்சமானது. 'ரிவால்வர்' பக்கத்தில் கிடந்தது. அதில் இரண்டொரு ரவைகள் இருக்காமலா இருக்கும்? அப்பா என்னை, ஏன் அத்துப்பாக்கியினால் சுட்டுக்கொல்லாமல் விட்டுவிட்டார்? பாவி—குடிகேடி—கொலைகாரியான என்னைக் கொன்றுவிடாமல், ஏன் இப்படிக் காருண்யத்துடன் விட்டுவிட்டார்? என் வேலையைத் தீர்த்திருந்தால் எவ்வளவோநன்றாயிருந்திருக்குமே!

இரவுபோய், பொழுது விடியலாயிற்று. ஜனங்கள் நின்ற இடத்தைவிட்டு நகரவில்லை. சிகப்புத் தலைப்பாகை ஆசாமிகளில் இரண்டொருவர் காணப்பட்டனர். 'ஐயோ, கடவுளே!' என்று கூறிக்கொண்டு மெதுவாக எழுந்துநின்றேன்.

'போஸ்ட் மார்டம்' (பிரேதப் பரீக்ஷை) நடந்துகொண்டிருந்தது. போலீஸிற்கு உடனே தெரிவித்துவிட்டார்கள் போலும். 'ரிவால்வர்' வந்ததைப்பற்றி விவாதம் நடந்துகொண்டிருந்தது. 'ஒத்துழையாமை' இயக்கத்தில் கலந்தவ

# அல்லயன்ஸ்

## அரிய நூல்கள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1 | திருப்புகழ் விருத்தியுரை | 7 | 8 |
| 2 | கதைக் கோவை—2 | 7 | 0 |
| 3 | கதைக் கோவை—3 | 9 | 0 |
| 4 | இரு துருவங்கள்—காண்டேகர் | 5 | 8 |
| 5 | எரி நட்சத்திரம் ,, | 4 | 0 |
| 6 | திராவிட வேதத் திரட்டு | 4 | 8 |
| 7 | பிரேம் சந்த் கதைகள் | 3 | 0 |
| 8 | விஷ விருக்ஷம்—பங்கிம் சந்த்ரர் | 2 | 8 |
| 9 | துர்க்கேச நந்தினி ,, | 2 | 0 |
| 10 | தேவி சௌதுராணி ,, | 2 | 0 |
| 11 | ரஜனி ,, | 1 | 4 |
| 12 | இந்திரா ,, | 1 | 4 |
| 13 | டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் | 1 | 4 |
| 14 | மஹான் மணி அய்யர் | 1 | 4 |
| 15 | சந்திரிகா—நாவல் | 1 | 4 |
| 16 | முருகன் மதுர கீர்த்தனை | 3 | 0 |
| 17 | தாசிப் பெண் A.S.P. Iyer, M.A., I.C.S. | 1 | 12 |
| 18 | திக்கற்ற இரு குழந்தைகள் | 3 | 0 |
| 19 | குழந்தை மனம் | 2 | 0 |
| 20 | சம்பத்து—எஸ் வி. வி. | 4 | 0 |
| 21 | ஜனாதிபதி ரூஸ்வெல்ட் | 1 | 4 |
| 22 | தென்னை வளர்ப்பு | 1 | 4 |
| 23 | வாடா விளக்கு | 2 | 0 |
| 24 | தேவகி | 2 | 0 |
| 25 | பிள்ளை வரம் | 2 | 0 |
| 26 | சதுரங்கம்—டாகுர் | 1 | 12 |
| 27 | மாலினி ,, | 1 | 4 |

## கதைக்கோவை

தொகுதி—4

தவிர்க்க முடியாத காரணங்களால் எதிர்பார்த்த படி, 4-ஆம் தொகுதியை இம்மாதத்திலேயே வெளியிட முடியாததற்கு வருந்துகிறோம். அடுத்த மாத ஆரம்பத்தில் வெளிவருகிறது. 7—4—45 வரை, ஆர்டரைப் பதிவு செய்துகொள்வோர்க்கு மாத்திரம், புத்தக விலையில் ரூ. 1—0—0 குறைவு செய்து அனுப்பப்படும்.

(புத்தக ஜாப்தாவுக்கு எழுதுக.)

**அல்லயன்ஸ் கம்பெனி**

**மயிலாப்பூர் :: சென்னை**

ராதலால் அப்பாவிற்கு துப்பாக்கியோ, ரிவால்வரோ வைத்துக்கொள்ள 'லைஸன்ஸ்' கொடுக்கப்படவில்லை. 'ரிவால்வர்' எப்படிக் கிடைத்திருக்கும் என்று ஆராய்வதில் மூளையை உபயோகித்துக்கொண்டிருந்தனர். அப்பா, ராஜுவால் எழுதப்பட்ட கடிதம் ஒன்றைக் காட்டினார். யாரிடமிருந்து 'ரிவால்வர்' வாங்கிக்கொண்டு வரப்பட்டது' என்பதுபற்றி அதில் விபரமாக எழுதியிருந்தான் என்று எனக்குப் பின்னால் தெரியவந்தது. ரிவால்வரையும் கடிதத்தையும் பற்றிக்கொண்டு போலீஸ் நகர்ந்துவிட்டது. பரீக்ஷிக்க வந்த டாக்டரும் வேலையை முடித்துக்கொண்டு கிளம்பிச் சென்றார். அவர்களெல்லாம் சென்றபின்தான் அப்பாவின் கண்களினின்றும் கண்ணீர் வழிந்தோடவாரம்பித்தது. இதற்கு முன்பெல்லாம் அவர் கண்ணால் ஜலம் விட்டறிந்தவரல்ல.

போலீஸ் கைப்பற்றிச் சென்ற காகிதத்தில் ராஜு என்னைப்பற்றி ஏதாவது எழுதியிருந்தானோ என்று அறிய எனக்கு வெகு ஆவலாயிருந்தது. ஆனால் ஒரு புலனும் கிட்டவில்லை. 'அவன் போய்விட்டான்! குடும்பத் தொடர்பையே அறுத்துக்கொண்டு போய்விட்டான்! இச் சொற்கள் என் மனத்தைத் துளைத்துக்கொண்டிருந்தன.

"என் சுகத்திற்கு இடையூறு விளைவிக்கும் முள், இனி அற்றுவிட்டது. இனி ஒரு பயமுமில்லை" என்று வேறு எண்ணினேன். ஆனால் அந்த முள் அற்றுவிட்டபோதிலும், மனத்தில் இவ்வளவு வேதனையை உண்டு பண்ணக் கூடும் என்று அப்பொழுதே தெரிந்தால் தானே! ஆனால்............ கடவுளே எனக்கு மன்னிப்புக் கிட்டுமா?

நகரம் பூராவும் செய்தி பரவியது. துயரம் விசாரித்துப் போவதற்கென ஜனங்கள் ஒவ்வொருவராக வர ஆரம்பித்தனர். அப்பா என்ன யோசித்துக்கொண்டிருந்தாரோ? அவரது மனம் எங்கு ஈடுபட்டிருந்ததோ? எவரிடமும் பேசாமல் உட்கார்ந்திருந்தார்.

டாக்டர் புரொபஸருடன் கைத்தடியைச் சுழற்றிக்கொண்டு வேகமாக வந்துகொண்டிருந்தார். ஆரம்பத்தில் டாக்டருடன் எனக்குப் பரிச்சயமேற்பட்ட காலத்தில், இதே மாதிரிதான் புரொபஸருடன் அவரைக் கண்டிருந்தேன். அதற்கப்புறம் இன்றுவரை புரொபஸர் எங்களுடைய வீட்டிற்கு வந்ததே இல்லை.

நான் டாக்டரைத் தொலைவிலேயே கண்டு கொண்டேன். 'இந்த டாக்டரின் காரணமாகத்தானே நமது குடிகெட்டது. அன்றுடம் அநேகப் புதுப்புது யுவதிகளைக் கற்பழிக்கும் ஆடவர்தானே இந்த டாக்டர்?. இவ்வளவிருந்தும் இவரைக்காண என் கண்கள் ஏன் துடிக்கின்றன. ஏன் அவரது மோகன உருவத்தின் மாயையைத் துறக்கமாட்டேனென்

கிறது, என் மனம்? கடவுளே, இத்துர்நடத்தையிலுழலும் பெண்ணின் கதி என்ன வாகும்?" என்று சிந்திக்கலானேன்.

வெகு நேரம் ஆகிவிட்டது. 'டாக்டர், கிளம்பிப்போவதற்கு முன் என்னை வந்து பார்த்துவிட்டுப் போவார்' என்ற நம்பிக்கை என்னுள்ளத்தில் ஒளி வீசிக்கொண்டிருந்தது. அவர் வந்தால் என்ன பேசுவது? என்று நான் யோசிக்கவில்லை. கடைசிவரை வரப்போகிறார் என்று நம்பிக்கையும் அச்சமும் கொண்டிருந்தேன். ஆனால் அவர் வரவில்லை.

அந்திப்பொழுது. சிறிது சிறிதாக இருட்ட ஆரம்பித்தது. மிருத்யுலோகத்தின் அல்லோல கல்லோலங்கள் எனதறையை முற்றுகையிட்டன. என்னைத் தேற்றுவார் யாருமில்லை. கண்ணீர் உதிர்ப்பதினால் என்ன பயன்? அவக்குரலிடுவதனால் என்ன வரப்போகிறது? குடும்பமே சோகத்தில் மூழ்கியிருந்தது. எவரிடத்தும் பொறுமை என்பதே இல்லை. எப்படி இருக்க முடியும்? வானமே இடிந்து விழுந்ததுபோன்ற துயரத்தில், மூழ்கியிருக்கும்பொழுது, குலத்தை விளங்க வைக்க வந்த பகலவன் திடீரென்று சூன்யத்தில் மூழ்கிவிட்டானே! உல்லாஸ வாழ்க்கை ராஜீய வாழ்க்கை முதலியவைகளின் காரணமாக எப்பொழுதும் கலகலவென்றிருந்த வீடு, சோபையிழந்து காணப்பட்டது.

அன்று எவருக்குமே உணவிறங்கவில்லை. நானும் கண்களைச் இறுக மூடிக்கொண்டு படுத்துக் கிடந்தேன்.

துயரமே உருவான இச்சமயத்திலும், என் உள்ளத்தின் ஒரு மூலையில் 'காலப் போக்கின் உதவியைக்கொண்டு, இத்துயரமெல்லாம் ஒரு நாள் மறந்துவிடும். நமது வாழ்க்கைப் படகும் ஆனந்த அலைகளில் துள்ளிக் குதித்துக்கொண்டு மிதக்கும்' என்ற தெளிவற்ற சிறு ஒளி 'மினுக்கு மினுக்கு' என்று மினுக்கிக்கொண்டிருந்தது. சீ, நானும் ஒரு மனுஷி மாதிரி!

— 19 —

மறுநாள் காலை, நான் கண்விழிக்கும்பொழுது, மணி ஒன்பது அடித்திருக்கும். சோம்பலின் காரணமாக, கட்டிலில் படுத்த வண்ணம், கொட்டாவி விட்டுக்கொண்டும், சோம்பல் முறித்துக்கொண்டும் இருந்தேன். எழுந்திருப்போமா, வேண்டாமா, என்ற பலத்த யோசனையில் ஆழ்ந்திருந்தேன். 'நடந்தது நடந்துவிட்டது. இனி மனத்தை வீணாக அலட்டிக்கொள்வதனால் என்ன வரப்போகிறது' என்று யோசிக்கும்பொழுது என் அறிவு விழித்துக்கொண்டது. எழுந்து உட்கார்ந்தேன்.

ஸ்நானம் முதலியவைகளை முடித்துக்கொண்டு, வராண்டாவிற்கு வந்தேன். அப்பாவின் அறைப்பக்கம் வேலைக்காரர்கள் வெகு வேகமாய் ஓடிக்கொண்டிருந்தனர். எனக்கு ஒனக் கிலேசம் ஏற்பட்டது. வேலைக்காரன் மருவன் அவரது அறையினின்றும் வேகமாக ஓடிவந்துகொண்டிருந்தான். அவனை நிறுத்தி, 'என்னப்பா விஷயம்? எங்கேயோடுகிறாய்?' என்று வினவினேன்.

'அம்மா, என்னத்தைச் சொல்லுவேனுங்க. பெரிய ஐயா மூச்சுப் பேச்சில்லாமல் கிடக்கிறாரு. டாக்டரு ஒத்தருவந்து பார்த்துக்கிட்டிருக்கிறாரு' என்று சொல்லிவிட்டு, அவ்வேலைக்காரன் தன் அலுவலாக ஓடிவிட்டான்.

தட்டித் தடுமாறிக்கொண்டு அப்பாவின் அறைக்கு விரைந்தேகினேன்.

அப்பா கட்டிலில் மூர்ச்சையுற்றுக் கிடக்கிறார். அவரது கண்கள் மூடியிருக்கின்றன. மூச்சு வெளிவரத் திணறுகிறது. ஜனங்கள் ஒரேகும்பலாக அவரது கட்டிலைச் சுற்றி நின்றுகொண்டிருக்கின்றனர். அவரது சிவந்த அழகிய முகம் கறுத்துக்கிடக்கிறது. மண்டை நரம்புகள் புடைத்திருக்கின்றன. பொட்டுப்புறம் குழி விழுந்து விட்டது. ஸிவில்ஸர்ஜன் அவரது இடது முழங்கைமேல் சதையை 'ஸிரிஞ்சி'னால் குத்தி ரத்தத்தை வெளியில் எடுத்துக்கொண்டிருக்கிறார். வெளிவரும் ரத்தத்தைப் பிரஷினால் துடைத்துக்கொண்ருக்கிறான் பக்கத்தில் ஒருவன். இக்காட்சியைக் கண்டதும் எனது கண்களில் நீர் அருவி பெருக ஆரம்


ஆப்டோன் ப்ளாக்குக்களும்
அழகான கலர் ப்ளாக்குக்களும்
செய்யுமிடம்!

★



★

எம். ஸி.
அப்பாசாமி செட்டி & கோ.,
14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி,
மதராஸ்.

பித்தது. கண்களைத் துடைத்துக்கொண்டு டாக்டரிடம், 'என்ன டாக்டர், அப்பாவின் உடம்பிற்கென்ன' என்று ஆங்கிலத்தில் கேட்டேன்.

டாக்டர், ரத்தத்தை வெளியிலெடுத்தவண்ணம், என் முகத்தை ஏற இறங்க ஒரு தடவை பார்த்துவிட்டு, அன்பு கலந்த இனியமொழியில் 'ஸெரிபிரல் ஹேமரேஜ்' கண்டுவிட்டது. மூளையில் அதிக ரத்தம் சேர்ந்துவிட்டது. அதனுல் ஒரு நரம்பு அறுந்துவிட்டது. இதெல்லாம் 'அபோப்ளேக்ஸி'யின் குறிகள் என்று பதில் அளித்தார்.

'இதெப்படி இவருக்கு ஏற்பட்டிருக்கும்?'

'ஏற்படுவதற்கு எவ்வளவோ காரணங்கள் உண்டு. பொதுவாகப் பெருந் துயரத்திலோ, கவலையிலோ உழன்ருல் இதுமாதிரி ஆகிவிடுவது உண்டு'

'ஏன் கையிலிருந்து ரத்தத்தை வெளியிலெடுக்கிறீர்கள்?'

'இந்த இடத்திற்கும் மூளைக்கும் நேர் சம்பந்தமுண்டு. இங்கிருக்கும் ரத்தத்தை வெளியில் அகற்றினுல் மூளை கனம் சிறிது குறையும். நிலைமை ரொம்ப மோசமாயிருக்கிறது. எனக்கு நம்பிக்கை அவ்வளவாக இல்லை. நான் என் கடமையைத்தான் செய்கிறேன். மற்றவை எல்லாம் கடவுள் செயல்.

அப்பா! அவரது கடைசிச் சொல் என் உள்ளத்தில் அம்பைப்போல் தைத்தது. 'ஏதோ மூர்ச்சையுற்றிருக்கிருர். சற்றுப்போனுல் பிழைத்துவிடுவார்' என்று இதுவரை எண்ணினேன். அம்மாவும் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருந்தாள்போலும். டாக்டர் வார்த்தையைக் கேட்டதும் தன் நினைவையும் மீறி, தலையிலடித்துக்கொண்டு அழலானுள்.

ஒரு அக்ஞாத வாணி என்னுள்ளத்தினிடம் கூறிக்கொண்டிருந்தது—'ராஜு போய்விட்டான். அப்பாவும் கிளம்ப மூட்டை கட்டிக் கொண்டிருக்கிருர். உனது பலஹீனத்தைப் பயன் படுத்திக்கொண்டு, காலதேவன் உன்னிடம், உனது பாபங்களுக்காகப் பழி தீர்த்துக் கொள்ள விரும்புகிருன். உன்னைத் தொலைத்தபின் தான் அவனுக்கு அமைதி கிட்டும் பாழும் தெய்வம் உனக்குச் சிறிதும் உதவி





Madras Stockists:- **M/s. RAJAN DRUG STORES**
155, Nyniappa Naick Street, MADRAS.

புரியாது. நீ உன் கால்களால் வாழ்வென்னும் பாதையைப் பிறரது உதவியை நாடாமல். கடக்கத் தெரிந்துகொள். இல்லையெனின், நியதிச் சுழல் உன்னை விழுங்காமல் விடாது'

பகல் பூராவும் நிலை ஒரே விதமாயிருந்தது. மூச்சுத் தடைபட்டு, திணறிக்கொண்டிருந்தது. இடையிடையே வாந்திவேறு எடுக்க ஆரம்பித்துவிட்டார்?' 'அந்த மயக்க நிலையிலேயே.' அவர் பிழைத்துவிடமாட்டாரா?' என்றுதான் கடைசி க்ஷணம்வரை நம்பிக்கொண்டிருந்தேன். வாழ்க்கை யென்னும் எண்ணெய் சிறிது சிறிதாகக் குறைய ஆரம்பித்தது. எண்ணெய் குறைந்தால் ஒளி குறைவது இயற்கைதானே! கடைசியில் ராத்திரி சுமார் எட்டுமணிக்கு, சதாசர்வ காலத்திற்குமே, அவ்விளக்குச் சுடர் விட்டணைந்தது.

தந்தையின் மறைவைக் குறித்து, அனுதாபம் தெரிவிக்கும் தந்திகளும் கடிதங்களும் கணக்கில்லாமல் அம்மாவின் பெயருக்கு வந்து குவிந்தன. பத்திரிகைகள் உணர்ச்சி ததும்பும் தலையங்கங்கள் எழுதின. அவரது மறைவினால் உலகத்திற்கே பெரு நஷ்டம் ஏற்பட்டுவிட்டது போலும், அந்நஷ்டம் ஈடேற வழியொன்றும் இல்லைபோலும், செய்திகள் வெளியிடப்பட்டன. இதெல்லாம் வெளிப் பகட்டென்பது எனது எண்ணம். அதனால் இவ்விஷயங்களொன்றும் என்னைக் கவரவில்லை. இன்று தந்தை உயிர்நீத்துச் சில மாதங்கள் ஆகிவிட்டன. அவரது பெயர் எங்கும் ஒலிக்கவும் காணோம், பத்திரிகைகளில் வெளி வரவும் காணோம். 'தேச சேவையின் புகழ் இவ்வளவு சீக்கிரம் மறைந்துவிடக் கூடியதா! அரசியல் பேச்சிற்கு இவ்வளவுதான் மதிப்பா! தந்தையின், அரசியல் பிரசங்கம், தலையங்கம் முதலியவைகளுக்கு மதிப்புக்கொடாமல், அவரது உன்னத ஸ்வபாவத்திற்கு மதிப்புக் கொடுத்திருந்தால், இன்னும் அதிக நாட்கள் அவரது புகழ் நிலைத்திருக்குமே!' என்றெண்ணினேன்.

அவரது புகழ் நிலைத்திருக்கவில்லையே என்பதற்காக நான் சிறிதும் வருந்தவில்லை. அவரது திடீர் மரணத்தினால் உண்டான அதிர்ச்சி, எனது பிணைப்பட்டுப்போன ஆத்மாவிற்குப் புத்துயிர் அளித்துவிட்டது. ராஜுவின் துயரத்தின் அதிர்ச்சியினால்தான் தந்தை இறந்தார். என்னுள்ளத்திலும் ராஜுவின் மரணம் புண்ணை உண்டாக்கவில்லையா? என் துயரத்தைக் காட்டிலும் அப்பா அடைந்த துயரம் அதிகமா அதற்கு? ஒருகால் இருக்கலாமோ என்னவோ! 'ராஜுவின் மரணம் என்னுள்ளத்துள் ஆறுப்புண்ணை உண்டு பண்ணிவிட்டது. அதன் வடு எப்பொழுதுமே இனி மறையாது என்பதை நான் நன்கறிவேன். அப்பாவின் உயிர் உடலைவிட்டுப் பிரிந்ததும், துக்கமும் மறைந்துபோயிருக்கும். அதிகக் கஷ்டமனுபவிக்கவேண்டி வரவில்லை அவருக்கு, நல்ல வேளையாக.

'என் மனதில் தந்தைபாலிருக்கும் பிரேமைதான் மேலானது' என்று இன்றுவரை எண்ணியிருந்தேன். ஆனால் எனது ஒவ்வொரு மயிர்க்காம்பும் ராஜுவினிடம்தான் ஈடுபட்டிருந்தன என்பதை நான் தெரிந்துகொள்ளவில்லை, 'தம்பிபாலுள்ள அன்பு, இவ்வளவு திடமானதாகவும், உள்ளூர அரம் போட்டு அறுப்பதாகவும், நிரந்தரமான தாகவும் உள்ளது என்பது அவனது உயிர் போனபின்புதான் தெரிய வந்தது. மற்றவர்கள் மீது ஏற்பட்டிருந்த எனது சஞ்சலப்ரமை, தானாகவே மறைந்தது. ராஜுவிற்காக எனது உள்ளம் துடிக்கலாயிற்று. 'என் காரணமாக ராஜு தன் மனத்தை அல்லலுறச் செய்துகொண்டு, தனது விலைமதிப்பற்ற உயிரையே பொருட்படுத்தாது இவ்வுலகை நீத்துவிட்டானே' என்ற எண்ணம் என்னை அடிக்கடிவாட்டிக் கொண்டே இருந்தது.

பூதேவியின் தொடர்பையே வெறுத்து, பூமியில் உட்காருவதை அகௌரவமாக நான் நினைத்த காலம் ஒன்றுண்டு. அதே மண்ணில் ராஜு இன்று ஐக்கியமாகிவிட்டான். இதைச்சிந்தித்த நான் என்னையே தனக்குள் கூப்பிட்டுக் கூறிக்கொண்டேன்—"பாக்கியமற்றவளே! உனது கொழுப்பு, கர்வம், பெருமை, அகம்பாவம், ஆத்மா இவைகளை மண்ணோடு மண்ணாக ஆக்காத வரையில் உனது பாபங்களுக்குப் பிராயச்சித்தமே கிடையாது. நெறி தவறிப்போன அகல்யை, கௌதமருடைய சாபத்தின் காரணமாக, காற்றை ஆகாரமாக உட்கொண்டு, ஆகாரமின்றி, புழுதியில் புரண்ட வண்ணம் கிடந்தாளே! அதேபோல நீயும் உன் தம்பியின் பரிசுத்த ஆத்மாவைப்போன்று, பவித்திரமடைவதற்குக் கடோர நியமங்கள் என்றதீயில் ஸ்நானம் செய்ய வேண்டியிருக்கும். உலகத்து ஏழை எளிய, துயரமே உருவெடுத்த மாந்தர்களுக்கு ஊழியம் புரியவேண்டும். வறுமையைத் தனதாக்கிக் கொள்ளவேண்டும். இப்பூமியின் தூசியைத் தினமும் நெற்றியில் இட்டுக்கொள்ளவேண்டும். இம்மாதிரி நெடுநாட்கள் பழகித் தன் ஆத்மாவை தூய்மைப் படுத்திக்கொள்வாயாகில், மரித்த பின் ஏதாவதொரு ஜன்மத்தில் எந்த உருவத்திலாவது ராஜுவை பெறும் பாக்கியம் கிட்டக்கூடும், அப்பொழுது நான் ராஜுவின் தமக்கை' என்று சொல்லிக்கொள்ளும் உரிமை உனக்குக் கிட்ட இடமுண்டு."

நான் எனது ஆடம்பர வாழ்க்கையை அறவே ஒழித்தேன். தூய கதர்ஆடை உடுத்த ஆரம்பித்தேன். நூல் நூற்கும் நியமத்தைக் கைக்கொண்டேன். எவ்வளவோ, கடோர நியமங்களில் என்னை வேண்டுமென்றே கட்டிக்கொண்டு, வைராக்கியத்தில் ஈடுபட்டேன்.

இந்நிலையில் சில தினங்கள் சென்றன. ஒரு நாள் மாலை நேரத்தில், வீட்டு வாசற்புறத்தில் நின்றுகொண்டு வாசலில் வருகிறவர் போகிற

வர்களையும், வாகனங்களையும் ஏதோ மனப் போக்கில் நோக்கிக் கொண்டிருந்தேன். 'டாக்டர் எனது காலேஜ் தோழி கமலினியுடன் ஒரு காரில் போய்க்கொண்டிருப்பதைத் தற்செயலாக எனது கண்கள் நோக்கின. கமலினி என்னைப்பார்த்து, எரியும் புண்ணில் கோலிடுபவள்போல மந்தஹாஸம் புரிந்து கொண்டிருந்தாள். டாக்டர் வெட்கத்தினாலோ என்னவோ குனிந்த தலை நிமிராமல் அமர்ந்திருந்தார். கார் கண்ணிலிருந்து மறையும் வரையும் நான் சிலைபோல உற்று நோக்கிக்கொண்டிருந்தேன். வைத்த கண்ணை வாங்கவில்லை.

மோட்டார் மறைந்ததுதான் தாமதம். எனது வைரக்கியம், எனது கடோர நியமங்கள் எல்லாம் காற்றாய்ப் பறந்தன. வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் தீ எனதுள்ளத்தில் ஒளி வீச ஆரம்பித்தது. தலை சுழன்றது எனக்கு. நான் கதவொன்றைப் பிடித்துச் சாய்ந்து கொண்டேன். ராஜுவின் மரணம் காரணமாக உள்ளத்தில் தைத்த வேதனைமுள் தந்தையின் மரணத்தினால் ஏற்பட்ட துயரச் சிந்தனை—இவ்விரண்டின் நினைவும் என்னுள்ளத்துள் விழித்தெழுந்தன. சுகம், துக்கம், பிறப்பு, இறப்பு, பாபம், புண்ணியம் ஸ்வர்க்கம், நரகம் அனைத்தும் ஒன்றாகிவிட்டன. சூன்யத்தினின்று எழும் பயங்கர அரவம் என் காதுகளில் எதிரொலிக்கலாயிற்று. ஒரு உபாயமும், ஒரு போக்கும், ஒரு வழியும் தென்படாததைக்கண்டு பெரும் ஏமாற்றத்தின் கையில் சிக்குண்டு "நான் மட்டும் ஒரு பெரிய வீட்டுப் பெண்ணாக இல்லாமல், தாடகை ராக்ஷஸியாகவோ, சூர்ப்பனகை அரக்கியாகவோ, இருப்பேனாகில், அவர்களிருவரது மார்பையும் கிழித்து, மோட்டார் சகிதமாக விழுங்கியிருப்பேன்" என்று நினைத்துக்கொண்டேன்.

* * *

எனது விரதம் பங்கமடைந்துவிட்டது. இனி நான் உயிர் வாழ்வதிலும் பிரயோஜனமில்லை. மரிப்பதிலும் பிரயோஜனமில்லை. நான் வியாகுலமுற்று, கண்ணிற்குப் புலப்படாத பகவானிடம் "ஹே கருணாகரனே! நான் எந்தப் பூர்வ ஜன்மத்திலாவது இயற்கை நியமங்களை அனுஷ்டித்து, பெண்வாழ்வை முழுவதும் தூய்மையாகக் கடத்தியிருக்கிறேனா, இல்லையா? அல்லது, தற்காலத்து வாழ்க்கையைப் போலவே, எனது வாழ்க்கைகள் அனைத்துமே, அர்த்தமற்றதாகவும், நெறி தவறியதாகவும் தான் இருந்தனவோ?" என்று வினவினேன்.

அந்தப் பகவான்தான் பதில் சொல்லவில்லையோ, அல்லது என்காதில்தான் அவரது பதில் விழவில்லையோ தெரியவில்லை! வெகு நேரம்வரை, மௌனமாக இருந்தபின், வாய்விட்டுக் கூறிக்கொண்டேன்—'ச்சீ! இதென்ன உலகம்!' என்று.

(முற்றிற்று)

# புத்தக விமர்சனம்

**தாகுரின் கடிதங்கள் மனைவிக்கு**

(வங்காளியிலிருந்து ஸ்ரீ த. நா. ஸேனாதிபதி மொழிபெயர்த்தது. கலைமகள் பிரசுரம்—விலை ரூ. 1—4—0)

கவியின் வாழ்க்கையை அறிய இப்புத்தகம் தமிழர்களுக்குப் பயன்படும். ருசிகரமான குடும்ப விஷயங்கள் மலிந்து கிடக்கின்றன. எளியநடையில் மொழிபெயர்ப்பு. தமிழ் மக்கள் விரும்பும் புத்தகம்.

**கி. மாஜி மனைவி**

(கி. ரா. எழுதியது. கலைமகள் பிரசுரம். விலை ரூ. 2—8—0)

18 சிறுகதைகள் கொண்ட பொக்கிஷம். கதைகளின் அருமையைப் பாராட்டுவதா? நடையின் போக்கைப் புகழ்வதா? ஆசிரியரின் அபார கற்பனா சக்தியைக் கண்டு ஆச்சரியப் படுவதா? புத்தகத்தைப் பிரித்தால் முடித்த பிறகேகீழே வைக்க மனம் வருகிறது. உயர்தர சரக்கு!

**தமினா** (மங்கள நூலக வெளியீடு)

பிரசித்திபெற்ற பாரசீகக் கவி பிர்தௌஸி எழுதியுள்ள ஷாநாமா என்ற இதிகாசக் கதையை அனுசரித்து எழுதப்பட்டது. உலக அறிவாளிகளால் உன்னதமெனப் போற்றப் பட்ட வீரக்கதை. தமிழர்கள் அறியவேண்டிய கதை.

**இசைவாணி**

(கதைத் தொகுதி ப. நீலகண்டன் எழுதியது—கலைவாணி கழகம், புதுக்கோட்டை. விலை ரூ. 1—14—0.)

சிறு கதைகளைப்பற்றித் தமிழர்களிடையே பிறந்துள்ள ஆர்வத்துக்கு இப் புத்தகம் ஒரு சான்று. கதைகள் எளியநடை. உயர்ந்த கருத்துக்கள் கொண்டது. தமிழர்கள் வரவேற்பதற்குக் கேட்கவேண்டுமோ?

**காங்கிரசும் கம்யூனிஸ்டுகளும்**

(கே. அருணாசலம் எழுதியது. பாரததேவி வெளியீடு. விலை 0—8—0)

தேசத்துரோகிகளுக்கு நல்ல சாட்டை! கம்யூனிஸ்டுகள் என்ற வேடம்பூண்டு அன்னிய சர்க்காருக்குத் தொண்டுபுரியும் ஆசாமிகளின் 'குட்டு' நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. காங்கிரஸ் மகாசபையைப்பற்றிச் சர்க்கார் கூறும் அவதூறுகளுக்குத் தக்க ஆதாரங்களுடன் ஆணித்தரமான மறுப்பு. உயர்ந்த புத்தகம். குறைந்த விலை.

**மேல்காற்று**

(அ. சீனுவாசராகவன் எழுதிய கட்டுரைகள், லாங்மன்ஸ் கிரீன் அண்ட் கம்பெனி பிரசுரம்)

சிறந்த தமிழ் இலக்கியத்தொண்டு. உயர்ந்த கருத்துக்களைப் பழக தமிழ் நடையில் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ் வளர்ச்சிக்கு இத்தகைய கட்டுரைகள் துணைசெய்யும். ஓய்வில் சிந்தனையைத் தூண்ட நன்கு உதவும்.